


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூலை 02, 2009 புரட்சி 8 முழக்கம் 25 விலை: ரூ.2.50


# கிருஷ்ணராயபுரத்தில் ரூ. 31,000 வழக்கு நிதி






***கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் கழகத் தலைவர் பங்கேற்ற எழுச்சியான பொதுக் கூட்டத்தில் ரூ.31,020 வழக்கு நிதி குவிந்தது. பெரியார் திராவிடர் கழகத்தின் பணிகளை தமிழின உணர்வாளர்கள் பாராட்டி உற்சாகப் படுத்துகிறார்கள்.***

28.6.2009 அன்று மாலை 5 மணிக்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பிருந்து ஈழத் தமிழர் ஆதரவு பேரணியை தமிழர் தேசிய இயக்க பொதுச்செயலாளர் தி.மு.க பழனியாண்டி துவக்கி வைத்தார். ஊர்வலத்தில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட ஏராளமான தோழர்கள், ஆதரவாளர்கள் எழுச்சியுடன் முழக்கமிட்டு வந்தனர். பேரணி முடிவில் தொடங்கிய கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் கு.சி. தனபால் தலைமை தாங்கினார். ஒன்றிய ம.தி.மு.க. செயலாளர் எம்.வி.தமிழ்ச்செல்வன், ம.தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் மணி குருசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணராயபுரம் ஒன்றிய கழக அமைப்பாளர் இரா.காமராசு வரவேற்புரையாற்ற, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஈழத்தில் நடைபெறும் கொடுமைகளை விளக்கி 2 மணி நேரம் பேசினார். முன்னர் ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் பரணி கே. மணி, புதிய தமிழகம் மாவட்ட செயலாளர் பாண்டியன், இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சந்திரன், தமிழர் முன்னணி தலைவர் நல்லசிவம், ம.தி.மு.க. பாலமுருகன், பரமத்தி ஒன்றிய கழகத் தலைவர் தங்க.ராம ஜெயம், திராவிடர் பெண்கள் முன்னணி செயலாளர் மஞ்சுளா, பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி துணை செயலாளர் வேலு, ம.தி.மு.க. வெங்கடாசலம், சோமசுந்தரம், தென்றல், கழகத் தோழர்கள் ரமேஷ், முத்து, பெர்னாட்ஷா தங்கவேல், காமராஜ் ஆதித் தமிழர் பேரவை துரை. அமுதன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். சிற்பிராசனின் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடைபெற்றது. கழக அமைப்பாளர் கு.ராசா நன்றி கூறினார்.

**வழக்கு நிதி வழங்கியோர் பட்டியல்**

| | |
|---|---|
| கரூர் தமிழர் முன்னணி (முதல் தவணையாக) | ரூ. 20000.00 |
| ம.தி.மு.க. பரணி க. மணி | ரூ. 3000.00 |
| க. பரமத்தி ஒன்றிய பெ.தி.க. | ரூ. 2500.00 |
| திருமதி. ஷகிலா பாபு | ரூ. 1000.00 |
| கிருஷ்ணராயபுரம் ஒன்றிய கழக சார்பில் | ரூ. 1000.00 |
| வழக்கறிஞர் ராஜேந்திரன் | ரூ. 500.00 |
| ஆல்வின் புரட்சிய நம்பி தி.மு.க. இலக்கிய அணி | ரூ. 1000.00 |
| செட்டிநாடு சிமெண்ட் ஆலை பகுத்தறிவாளர்கள் | ரூ. 1000.00 |
| குளித்தலை தமிழர் முன்னணி | ரூ. 1000.00 |
| கொங்கு இளைஞர் பேரவை | ரூ. 500.00 |
| கருவாடு வியாபாரி | ரூ. 20.00 |
| | ரூ. 31020.00 |

## தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்!

# கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

*கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர் இலக்குமணன், ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் சந்திரசேகர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் போட்டுள்ள தமிழக அரசைக் கண்டித்து பெரியார் திராவிடர் கழகம் கண்டன ஆர்ப் பாட்டங்களை நடத்தியுள்ளது. செய்தி விவரம்:*

### மதுரை

ஈழத் தமிழருக்கு ஆதரவாக போராடிய கோவை இராம கிருட்டிணன் மற்றும் தோழர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ததைக் கண்டித்து 26.6.09 அன்று வெள்ளி காலை 10 மணி அளவில் மதுரை நேதாசி சிலை அருகில் ஸ்டாலின் தலைமையில் அ.பெரியசாமி, மு.தமிழ்ப்பித்தன், மாவட்ட செயலாளர் ஆ.முருகேசன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



கோவையில்

தோழர்கள் கவிஞர் மு.தமிழ்க் கூத்தன், எஸ்.ஆசைத்தம்பி (ம.தி.மு.க.), மு.கருப்பையா (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), ரெ.இராசு (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி), கு.ஞா.பகத்சிங் (வழக்கறிஞர்), நாகை. திருவள்ளுவன் (தமிழ்ப் புலிகள்), த.செந்தில் (திருப்பரங் குன்றம்), ஸ்டாலின் (தியாகி இமானு வேல் பேரவை), கைவண்டிக்கருப்பு, வெண்மணி, விடுதலை சேகர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### கரூர்

26.6.09 வெள்ளி மாலை 4 மணி யளவில் கரூர் - கோவை ரோட்டில் கழகத்தின் சார்பில் தேசிய பாதுகாப்பு சட்டத்தை பயன்படுத்தி கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன் மற்றும் தோழர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் கு.கி.தனபால் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் முருகேசன், பரமத்தி ஒன்றிய தலைவர் தங்க. ராமஜெயம், செயலாளர் திராவிடன், அரவை ஒன்றிய பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் தங்கவேல், ம.தி.மு.க. நகர செயலாளர் பா.கி.தங்கராசு, இளைஞரணி பாலமுருகன் வழக்கறிஞர் ஜெயப்பிரகாஷ், சந்திரன், அதியமான், நல்லசிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சேலம்

பொதுச்செயலாளர் கு.இராம கிருட்டிணன், பெரம்பலூர் மாவட்ட கழகச் செயலாளர் இரா.இலட்சு

4 ஆம் பக்கம்

**தலையங்கம்**

## சாதனை படைக்கிறார்கள்!

*இடஒதுக்கீட்டின் காரணமாக 'தகுதி திறமை' சீர்குலைகிறது என்று பார்ப்பனர் முன் வைத்த வாதங்கள் தவிடுபொடியாகி வருகின்றன. முதல் தலைமுறையாக படிக்க வரும் மாணவர்களை தலைமுறை தலைமுறையாக படித்த குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களோடு சமப் போட்டியில் நிறுத்தி, தகுதி திறமையை மதிப்பிடக் கூடாது என்று பெரியார் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். வாய்ப்புக் கதவுகளை திறந்து விட்டால் – பார்ப்பனரல்லாத மாணவர்களும் சாதனை படைப்பார்கள் என்று இப்போது நிரூபிக்கப்பட்டு வருகிறது. இடஒதுக்கீடுகள் இன்றி திறந்த போட்டியில் மதிப்பெண் அடிப்படையில் மட்டும் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் பெறும் நிறைவு மதிப்பெண் (கட் ஆப் மார்க்) கூடுதலாக இருப்பதால் – அவர்கள் தகுதி திறமையுள்ளவர்கள் என்று ஒரு வாதம் முன் வைக்கப்பட்டது. அத்துடன் திறந்த போட்டியில் தேர்வு பெறுவோர், பல தலைமுறையாக படித்த – பார்ப்பன உயர்சாதிப் பிரிவு மாணவர்களாகவே இருந்து வந்தனர். இடஒதுக்கீடு முறை தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டு கல்வி பெறும் சூழலால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கும் கிடைக்கப் பெற்றால், இந்தப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் மதிப்பெண்களை கூடுதலாகப் பெற்றுக் காட்ட முடியும். வாய்ப்பு கிடைக்கப் பெறாமையே இவர்கள் பின் தங்கியதற்கான காரணம் என்பதை இப்போது இவர்கள் உணர்த்தியுள்ளனர்.*

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் பெறும் நிறைவு மதிப்பெண் எண்ணிக்கை – ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வந்ததிலிருந்தே, இதைப் புரிந்து கொள்ள முடியும். இந்தத் தடைகளையும் கடந்து மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். திறந்த போட்டியிலும், பார்ப்பன உயர்சாதிப் பிரிவு மாணவர்களைப் பின்தள்ளி விட்டு, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பிரிவு மாணவர்கள் கூடுதல் இடங்களைப் பெறத் தொடங்கி விட்டனர்.*

*இவ்வாண்டுக்கான மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் திறந்த போட்டிக்கான 460 இடங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 300 இடங்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 72 இடங்களையும் தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்கள் 18 இடங்களையும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் மாணவர்கள் 16 இடங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். பார்ப்பன உயர்சாதிப் பிரிவு மாணவர்கள் பெற்றுள்ள இடங்கள் 54 மட்டுமே!*

*அதேபோல் ப்ளஸ் டூ தேர்வில் மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு தகுதியான பாடங்களில் 200க்கு 200 மதிப்பெண் பெற்றுள்ள மாணவ மாணவிகள் மொத்தம் 8 பேர். இவர்களில் 6 பேர் ஆண்கள். 2 பேர் பெண்கள். இந்த 8 பேரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 7 பேர். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர். பார்ப்பனர் ஒருவர் கூட இல்லை.*

*பெரியார் போராடி – அரசியல் சட்டத்தை திருத்தச் செய்து கல்வியில் இடஒதுக்கீட்டைக் கொண்டு வரச் செய்து 60 ஆண்டுகளாக இடஒதுக்கீட்டை தொடர்ச்சியாக அமுல்படுத்தியதன் காரணமாக கிடைத்த மிகப் பெரும் வெற்றி தான் இந்த சாதனை.*

*ஆனால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகம் குவிக்கும் சாதனைக்குப் பின்னால் நடந்த சமூக நீதிப் போராட்டங்கள் பற்றி அவர்கள் அறிந்திருப்பார்களா என்பது சந்தேகத்துக் குரியது தான். அதன் வரலாறுகளும் தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்த திராவிட கட்சி ஆட்சிகளால் பாடத் திட்டங்கள் வழியாக சொல்லப்படவும் இல்லை.*

*அதே நேரத்தில் அறிவாற்றலை வளர்த்துக்கொண்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகம் இப்போது மற்றொரு கடும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. உயர் கல்வி நிறுவனங்கள் அரசு நிறுவனங்களாக இருந்த நிலை மாறி, தனியார் மயமாகி வருவதால் இந்த நிறுவனங்கள் கல்வியை வணிகமாக்கி வருகின்றன. எனவே இந்த சந்தையில் நிர்ணயிக்கப்படும் பல லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்து, இடங்களை வாங்கும் சக்தியற்றவர்களாக பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஒடுக்கப்பட்ட பிரிவினர் உள்ளனர். கல்விக் கொள்ளை தடுக்கப்பட வேண்டும் என்று எல்லோராலும் பேசப்படுவது உண்மைதான். ஆனால், அரசியல் பெரும் புள்ளிகள், அமைச்சர்கள், பெரியார் இயக்கத்தை நடத்துவதாகக் கூறுவோர் எல்லோருமே கல்வி வணிகக் கொள்ளையில் இறங்கி விட்டார்கள். பெரியார் பெற்றுத் தந்த சமூக நீதிக் கோட்பாட்டை இவர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டார்கள். எனவே உயர்கல்வித் துறை தனியார் மயமாவது தடுக்கப்படுவதுதான் இப்போது நம்முன் உள்ள முக்கிய சமூக நீதிப் பிரச்சினையாக இருக்கிறது என்பதையும் கவலையுடன் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*கல்விக் கொள்ளைக்கு எதிராக அரசியலுக்கு அப்பாற்பட்ட இயக்கம் நடத்தப்பட வேண்டிய தேவையும் அவசியமும் வந்து விட்டது!*

# ஒரு சார்பு சுதந்திர பிரகடனம்: சில வரலாற்று தகவல்கள் (3)

***ஒரு சார்பு சுதந்திரப் பிரகடனங்கள் வரலாற்றில் விடுதலைக்கு முன் நிகழ்ந்துள்ளன. அது பற்றிய சில வரலாற்றுத் தகவல்கள்:***

### கிழக்குத் திமோர்

போர்ச்சுகலின் காலனி நாடாக இருந்த கிழக்குத் திமோர் "1975 ஆம் ஆண்டு நவம்பர் 28" ஆம் நாள் தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தது. அந்தப் பிரகட னத்தை மூன்றாம் உலக நாடுகளின் மார்க்சிய - லெனினிய அரசுகள் அங்கீகரித்தன. மக்கள் சீனம் அங்கீ கரித்தது. அவுஸ்திரேலியா, போர்ச்சுக் கல், இந்தோனேசியா ஆகியவை அங்கீகரிக்கவில்லை.

அதே நேரத்தில் இந்தோனேசியாவினால் அந்நாடு ஆக்கிரமிக்கப்பட்டு அந்நாட்டினது ஒரு மாகாணமாக கிழக்குத் திமோர் மாற்றப்பட்டது.

ஆனால், கிழக்குத் திமோர் மக்கள் இரு தசாப்த காலமாக விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். 1999 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30 ஆம் நாளன்று கிழக்குத் திமோரில் மேற்பார்வையில், இந்தோனேசியாவி லிருந்து கிழக்குத் திமோர் பிரிவது குறித்த மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரு வாரியான மக்கள், கிழக்கு திமோரின் விடுதலைக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு மே 20 ஆம் நாளன்று கிழக்குத் திமோரை ஒரு தனிநாடாக அனைத்துலகம் ஏற்றுக் கொண்டது.

### தென் கமரூன்

கமரூன் கூட்டமைப்பில் 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாள் தென் கமரூன் இணைக்கப்பட்டது. தென்காமரூனானது ஆங்கில மொழி பேசுவோரையும் இதர பகுதிகள் பிரெஞ்சு மொழி பேசுவோரையும் கொண்டதாக இருந்தது.

இந்நிலையில் 1972 ஆம் ஆண்டு மே 21 ஆம் நாளன்று வாக்கெடுப்பின் மூலம் கமரூன் கூட்டமைப்பு "ஒற்றையாட்சி" முறைக்கு மாறியது. தென் கமரூன் பிரதேசம் சுயாட்சியை இழந்தது. கமரூன் குடியரசினது வடமேற்கு மற்றும் தென்மேற்கு மாகாணங்களாக தென் கமரூன் மாற்றமடைந்தது. கூடுதலாக சுயாட்சி உரிமை கோரி தென் கமரூன் பிரதேசத்தில் போராடினர். 1961 ஆம் ஆண்டு அமுலில் இருந்த கூட்டமைப்பு முறை மீள உருவாக்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் கமரூன் நாட்டிலிருந்து 1994 ஆம் ஆண்டு தென் கமரூன் பிரதேசம் விடுதலை கோரியது. அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் நாள் தென் கமரூன் மக்கள் ஒன்றியத்தினால் அம்பஜானியா குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையை போலவே விடுதலைக்குப் போராடும் அல்லது அங்கீகாரத்துக்குக் காத்திருக்கும் நாடுகளினது ஒன்றியமாக யு.என்.பி.ஓ. என்ற அமைப்பு செயல்படுகிறது. இதில் கடந்த 2005 ஆம ஆண்டு முதல் தென் கமரூன் உறுப்பு நாடாக இருந்து வருகிறது.

இதேபோல் செசன்யா, புண்ட்லாந்து, நாகர்னோ கராபக், தென் ஒசீட்டியா, அப்கையியா மற்றும் டிரான்ஸ்னிஸ்திரியா ஆகிய பிரதேசங்களும் 1990 ஆம் ஆண்டு முதல் தன்னிச்சையாக தமது சுதந்திர நாட்டுப் பிரகடனங்களை வெளியிட்டுள்ளன.

### தோல்வியில் முடிந்த சுதந்திரப் பிரகடனங்கள்

அமெரிக்க பிரதேசத்தில் உள்ள கரோலினா 1712 ஆம் ஆண்டு இரண்டு தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளாகப் பிரிந்தன.

*1776 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் நாளன்று தெற்கு கரோலினா, பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்து தனக்கான சுய அரசாங்கத்தை அமைத்தது. 1788 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 8 ஆவது மாகாணங்களில் ஒன்றாக அது இணைந்தது.*

இருப்பினும் 1860 ஆம் அண்டு டிசம்பர் 20ஆம் நாள், அமெரிக்கக் கூட்டமைப்பி லிருந்து வெளியேறுவதாக தெற்கு கரோலினா சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க உள்நாட்டு யுத்தம் உருவானது. அதன் பின்னர் அமெரிக்கக் கூட்டமைப்பிலேயே தொடர்ந்து நீடித்து வருகிறது.

### குடியேற்றப்பட்ட வெள்ளை இனத்தவரின் 'ரொடீசியா' பிரகடனம்

பிரித்தானிய தென்னாப்பிரிக்க நிறுவனத்தின் உரிமையாளரான சீசில் ரொட் என்பவர், ஆப்பிரிக்காவின் ஜிம்பாவே மற்றும் ஜாம்பியாவில் ஒப்பந்தம் செய்து கொண்டு தங்கங்களை வெட்டி எடுக்கும் உரிமை பெற்றார்.

உரிமை பெற்ற சீசில் ரொட் ஏராளமான வெள்ளை இனத்தவரை ஜிம்பாப்வே மற்றும் ஜாம்பியாவில் குடியேற்றினார். இதனால் 1893 இல் யுத்தம் வெடித்தது.

ஜிம்பாப்வே மற்றும் ஜாம்பியாவின் பெரும் பகுதிகளை ரொட், தனது சொந்த கூலிப்படையின் துணையுடன் கைப்பற்றினார்.

அதனைத் தொடர்ந்து ஜாம்பியா சீசில் ரொட்டின் பெயரால் வடக்கு ரொடீசியாகவும், ஜிம்பாப்வே தெற்கு ரொடீசியாகவும் மாறின. ரெண்டு ரொடீசியாக்களுமே 1911 ஆம் ஆண்டு வரை தனித்தே இயங்கின.

*1923 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் செல்வாக்குட்பட்ட பகுதியில் அமைந்த சுயாட்சி அரசாங்கமாக தெற்கு ரொடீசியாவை பிரித்தானிய தென்னாப்பிரிக்க நிறுவனம் மாற்றியது. 1924 ஆம் ஆண்டு வடக்கு ரொடிசியாவின் நிர்வாகத்தை பிரித்தானிய அரசாங்கத்திடம் பிரித்தானிய தென்னாப்பிரிக்க நிறுவனம் ஒப்படைத்தது.*

1930 ஆம் ஆண்டு வெள்ளை இனத்தவரின் மேலாதிக்க ஆட்சி நிலை நிறுத்தப்பட்டது. முறைசார் வர்த்தகங்கள் மற்றும் தொழில்களில் ஈடுபட்ட பூர்வகுடி கறுப்பின மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆகையால் தங்களது சொந்த மண்ணில் வெள்ளை இனத்தவர்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளப் பட்ட பண்ணைகளிலும் தங்கச் சுரங்கங் களிலும் தொழிற்சாலைகளிலும் வேலை பார்த்தாக வேண்டிய நிலைக்கு பூர்வகுடி கறுப்பின மக்கள் தள்ளப்பட்டனர்.

1953 ஆம் ஆண்டு தெற்கு ரொடீசிய காலனித்துவ சுயாட்சி அரசாங்கம் மற்றும்

பிரித்தானிய நிர்வாகத்தின் கீழாக வடக்கு ரொடீசியா மற்றும்

நியஸலாந்த் (தற்போதைய மலாவி) ஆகிய இணைக்கப்பட்டு ரொடீசியக் கூட்டரசு உருவாக்கப்பட்டது.

தொடர்ந்தும் பூர்வகுடி கறுப்பின மக்கள் ஒடுக்குமுறைக்குள்ளாகினர். ஜிம்பாப்வே ஆப்பிரிக்க மக்கள் ஒன்றியம், ஜிம்பாப்வே ஆப்பிரிக்க தேசிய ஒன்றியம் ஆகியவை பூர்வ குடி கறுப்பின மக்களுக்காகப் போராடின. அப்போது ஜிம்பாப்வே பூர்வகுடி கறுப்பின மக்களின் விடுதலை இயக்கங்களைத் தடை செய்த தெற்கு ரொடீசிய நிர்வாகம், அதன் தலைவர்களை சிறையிலடைத்தது.

*1960களில் ஆப்பிரிக்காவிலிருந்த பிரித்தானிய காலனி நாடுகள் விடுதலை பெற்றன. இதனால் ரொடீசியக் கூட்டரசு கலைந்தது.*

*1963 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் பிரித்தானிய நிர்வாகத்தின் கீழிருந்த வடக்கு ரொடீசியாவான ஜாம்பியா விடுதலை பெற்றது. நியாஸலாந்த் என்ற மலாவியும் விடுதலை பெற்றது.* (தொடரும்)

# இலங்கையின் 13வது சட்டத் திருத்தம் தமிழர்களுக்கு

# உரிமைகளை வழங்குகிறதா? பறிக்கிறதா?

*இலங்கை அரசின் 13வது அரசியல் சட்டத் திருத்தம் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கிட வில்லை. மாறாக சிங்களர்களுக்கு தமிழர்களை இரண்டாம்தர குடிமக்களாக்குகிறது என்று, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விளக்கினார். சென்னையில் கடந்த 26 ஆம் தேதி ஈழப் பிரச்சினையில் ஊடகங்கள் போக்கு என்ற தலைப்பிலும், 28 ஆம் தேதி தகவல் தொழில் நுட்பத் துறையினர் லயோலா கல்லூரியில் நடத்திய ஈழத் தமிழர் கருத்தரங்கிலும் இது குறித்து அவர் ஆற்றிய உரை:*

ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு பற்றி இப்போது சிறீலங்கா அரசு பேசி வருகிறது. மாபெரும் மனித இனப் படுகொலையை நடத்தி முடித்த இராஜபக்சே தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப் போவதாக அவ்வப்போது கூறி வருகிறார். இனப்படுகொலைக்கு தூபமிட்டு உதவிகளை வழங்கி, உலக அரங்கில் அவமானப்பட்டுக் கிடக்கும் பார்ப்பனிய இந்திய ஆட்சியும் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் என்று பேசி வருகிறது. இவர்கள் எல்லோருமே பார்ப்பன இந்து ஏடு உட்பட இப்போது அரசியல் தீர்வுக்காக ஒரு திட்டத்தை முன் வைத்துப் பேசி வருகிறார்கள். அரசியல் சட்டத்தில் - 1988 ஆம் ஆண்டு ஜெய வர்த்தனா கொண்டு வந்த 13வது அரசியல் சட்டத் திருத்தத்தை அமுல்படுத்தினாலே தமிழர்களுக்கு சமஉரிமை கிடைத்து விடும் என்று பேசி வருகிறார்கள். ஆனால், 13வது சட்டத் திருத்தத்தில் என்ன உரிமைகள் வாரி வழங்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் கூறவோ, விவாதிக்கவோ, இவர்கள் தயாராக இல்லை. உலகத்தின் அரசியல்களை எல்லாம் கட்டுரைகளாக வெளியிடும் சிங்களத்தின் அதிகாரபூர்வ ஏடாக செயல்படும் 'இந்து' ஏடும், 13வது சட்டத் திருத்தம் என்ன கூறுகிறது என்பதை விளக்கிட முன்வரவில்லை. பார்ப்பனப் பிடியில் சிக்கியுள்ள ஆங்கில ஊடகங்கள் எல்லாமுமே ஈழத் தமிழர் போராட்டங்களின் நியாயங்களை விவாதப் படுத்தவே இல்லை. திட்டமிட்டு, ஒரு சார்பாக இலங்கை ராணுவத்தின் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஊது குழல்களாகவே வெட்கமின்றி செயல்பட்டன.

1988 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இலங்கையின் 13வது அரசியல் சட்டத் திருத்தம் என்ன கூறுகிறது என்பதையும் பார்ப்போம். தோழர்களே! தமிழர்களை சிங்களப் பேரினவாதத்துக்கு அடிமைப்பட்டிருப்பதை சட்ட ரீதியாக உறுதி செய்வதுதான் இந்த 13வது திருத்தம்.

இந்த சட்டத் திருத்தத்தின்படி தமிழர் பகுதியில் மாகாண கவுன்சில்களையும், அமைச்சர்களையும் நியமித்துக் கொள்ளலாம். ஆனால், அமைச்சர்களுக்கு அதிகாரங்கள் ஏதும் இல்லை. இலங்கை குடியரசுத் தலைவரால் மகாண கவுன்சிலுக்கு நேரடியாக நியமனம் செய்யப்படும் - ஆளுநருக்குதான் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிங்கள குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் ஆளுநருக்கு உறுதுணையாக இருந்து அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'உரிமை'. மாகாண கவுன்சில் முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நிர்வாகம் தடைபட்டால், மாகாண கவுன்சிலின் உரிமைகளை, இலங்கை நாடாளுமன்றம் முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம். எனவே அப்படி இலங்கை குடியரசுத் தலைவர் மாகாண கவுன்சிலை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவரும்போது அதை விசாரிக்க நீதிமன்றங்களுக்கு உரிமை கிடையாது. மாநில ஆளுநருக்கு அமைச்சரவை ஆலோசனை வழங்கி, அவருக்கு உதவியாக செயல்பட வேண்டும் என்பதன் அர்த்தம் - ஆளுநருக்கு, சேவகர்களாக அவர்கள் செயல்படவேண்டும் என்பதுதான். நிதி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் பொது ஒழுங்கை பாதுகாக்கும் அதிகாரங்களும் ஆளுநருக்குத்தான் உண்டு; அமைச்சரவைக்கு அல்ல. மாகாண ஆளுநராக நியமிக்கப்படுபவர் நிதி மற்றும் பொது நிர்வாக அமைச்சருக்குரிய அதிகாரங்களோடு செயல்படுவார். அவரது ஆணைப்படி அமைச்சரவை செயல்படவேண்டும். அவர்கள் கூறும் சட்டங்களை இயற்ற வேண்டும்.

அதே போல் மாநில காவல்துறையைக் கட்டுப் படுத்தும் உரிமை - அமைச்சரவைக்கு இல்லை. மூன்று உறுப்பினர்களைக் கொண்ட மாகாண காவல் ஆணையம் ஒன்றின் கட்டுப்பாட்டிலே தான் காவல்துறை செயல்படும். இந்த மூன்று உறுப்பினர்களில் தலைமை அதிகாரியை நியமிப்பவர் இலங்கையின் குடியரசுத் தலைவர். மாநில முதல்வரால் நியமிக்கப்படும் ஒரு பிரதிநிதியும் இதில் இருப்பார். ஆனால், காவல்துறையினருக்கு பயிற்சித் தரும் அதிகாரம் மாகாண கவுன்சிலுக்கு கிடையாது. இலங்கையின் மத்திய அரசு தான் பயிற்சிகளை அளிக்கும் மாகாணத்தின் பொது ஒழுங்குக்கு பொறுப்பு - காவல்துறை தான். மாகாண அமைச்சர்கள் இதில் தலையிட முடியாது. இதிலும் ஒரு அதிகாரி மீது தேசப் பாதகாப்புக்கு எதிராக செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கவோ, விசாரணை நடத்தவோ, தடுப்புக் காவலலில் கைது செய்யவோ, காவல்துறை ஆணையத்துக்கும் உரிமை கிடையாது. இலங்கையின் மத்திய அரசு கட்டுப்பாட்டிலுள்ள தேசிய காவல்துறைப் பிரிவுக்குத்தான இந்த உரிமை உண்டு. இலங்கையில் இப்போதும் அமுலிலுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டம் கொடூரமான பிரிவுகளைக் கொண்டது. பிரேதப் பரிசோதனைகூட நடத்தாமல் சுட்டுக் கொல்லப்பட்டவர்களை எரித்து விடலாம் என்கிறது இந்தச் சட்டம். சர்வதேச நீதிமன்றமே இந்தச் சட்டத்தின் கொடூரமான பிரிவுகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்து, தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. நாகரிகம் உள்ள எந்த சமூகமும் தனது சட்டப் புத்தகத்தில் இது போன்ற சட்டங்கள் இடம் பெறுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று சர்வதேச நீதிமன்றம் கூறியது. இலங்கை அரசுக்கு இதனால் என்ன மானம் கெட்டுப் போய்விடப் போகிறது? மானமற்ற கொடூரமான அரசு தானே? இந்த சட்டத்தை தமிழர் பகுதியில் அமுல்படுத்தும் உரிமையை இலங்கை அரசு தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறது.

## தமிழர்கள்ஒருபோதும் சிங்களதேசத்தை அங்கீகரிக்க மறுத்ததேஇல்லை

இது மட்டுமல்ல, தமிழர்களின் நிலம் தொடர்பான உரிமையும், மாகாண கவுன்சில்களுக்கு கிடையாது. இது தொடர்பான முழு உரிமையையும் இலங்கை அரசே தன் வசம் வைத்திருக்கிறது. இலங்கை அரசியல் சட்டத்தின் 33(டி) பிரிவின் கீழ் தமிழர் பகுதியின் நிலம் கொண்டு வரப்பட்டுவிட்டது. இந்தப் பிரிவு இலங்கை முழுமைக்குமான நிலத்தில் ஒரு பகுதியை வழங்குவதற்கோ, விற்பதற்கோ முழு உரிமையையும் இலங்கை குடியரசுத் தலைவருக்கே வழங்குகிறது. நிலம் மட்டுமல்ல, அசையா சொத்துகளுக்கும் இது பொருந்தும். மாகாண கவுன்சிலுக்கான அதிகாரத்தின் கீழ் - 'நிலம் - அது தொடர்பான தீர்வுகள்' இடம் பெற்றிருந்தாலும் - வழங்குதல் மற்றும் விற்பனை செய்வதற்கான உரிமைகளை சிங்கள மத்திய அரசே எடுத்துக் கொண்டுவிட்டது.

இலங்கையின் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் 1987 ஆம் ஆண்டு அன்றைய அதிபர் ஜெயவர்த்தனா சார்பில் வாதாடிய எச்.டபுள்யூ ஜெயவர்த்தனா வெளிப்படையாகவே கூறினார்.

"இந்த சட்டத்திருத்தத்தின்படி அரசுக்கான நிலங்கள் தொடர்பான அதிகாரம் - மாகாண கவுன்சில்களுக்கு கிடையாது. வேறு வார்த்தைகளில் கூறுவது என்றால், மாகாண கவுன்சில்களுக்கு, அரசுக்குரிய நிலங்களைக் கையாளும் வழிகளைத் திறந்து விட முடியாது."

("Under the Land Policy as envisaged in the Amendment, no state land will be vested in a provincial council; in other words no giving away of state land to the provinces...." - Srinlanka Sun, Oct.1987)

தமிழர்களின் மாகாண கவுன்சிலுக்கு தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு தமிழர்களின் மண் மீது உரிமை கிடையாது. அந்த உரிமையை சிங்கள மத்திய அரசுக்கே வழங்குகிறது. இந்த 13வது சட்டத்திருத்தம், சட்டரீதியாகவே தமிழர் மண்ணை பறித்துக் கொள்கிறது இந்த சட்டத்திருத்தம்.

தமிழ் மண்ணின் நிலத்தை மற்றவர்களுக்கு வழங்குவதற்கான உரிமையை இலங்கை அரசு சட்டப்பூர்வமாக தனது உரிமையாக்கிக் கொண்டு விட்டதால் தமிழர் பகுதிகளில் சிங்களர்களின் குடியேற்றம் சட்டப்படி நடக்க கதவு திறந்து விடப்பட்டுள்ளது. இப்போது நடந்து வரும் சிங்களக் குடியேற்றத்துக்கு சட்ட வடிவம் தந்துவிட்டார்கள். அதே போல் ஏற்கனவே நாம் கூறியவாறு காவல் துறை மீதான கட்டுப்பாட்டு உரிமையும், பொது ஒழுங்கை பாதுகாக்கும் உரிமையும், அமைச்சரவைக்கு கிடையாது. அது மாநில ஆளுநரிடம் போய்விட்டது.

அது மட்டுமல்ல, மாகாண கவுன்சிலுக்கு வரி விதிப்பு அதிகாரமும் கிடையாது. மாகாண ஆளுநர் பரிந்துரைத்த வரி விதிப்புகளுக்கு மட்டுமே, கவுன்சில் சட்டம் இயற்ற முடியும்.

அதேபோல், ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கை தயாரிக்கும் உரிமையும், கவுன்சிலுக்கு வழங்கப்படவில்லை. மாகாண நிதி ஆதாரங்கள் தொடர்பான அனைத்து உரிமைகளும், மத்திய அரசால் நியமிக்கப்படும் ஆளுநருக்கே உண்டு. ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையை அவர்தான் தயாரித்து சமர்ப்பிப்பார். கவுன்சில்களுக்காக மத்திய அரசு ஒதுங்கும் நிதியிலிருந்து - செலவு செய்யக் கூடிய நிதிக்கு மாகாண கவுன்சிலிடமிருந்து அனுமதி பெறவும் தேவை இல்லை. கவுன்சிலில் வைத்து விவாதிக்கவும் அவசியமில்லை. அப்படி கவுன்சிலிடம் வாக்கெடுப்பு நடத்திடும் உரிமை சில செலவினங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அவை என்ன தெரியுமா? மாகாண ஆளுநருக்கான ஊதியம்; மத்திய அரசு கடனாக வழங்கும் தொகைக்கான வட்டி; இது தவிர, நாடாளுமன்றம் சட்டப்படி அறிவிக்கக்கூடிய வேறு செலவினங்கள். அதாவது, ஆளுநரின் பரிந்துரை இல்லாத எந்த மான்ய கோரிக்கையையும் கவுன்சில் முன் வைக்க முடியாது.

இலங்கையின் குடியரசுத் தலைவர் ஏதாவது, ஒரு மாகாணத்தில் நிதி நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாக கருதினால் ஒரு பிரகடனத்தை வெளியிட்டு நிதிநிலையை ஒழுங்குப்படுத்தக்கூடிய ஒழுங்குமுறை விதிகளை மாகா ண ஆளுநருக்கு அறிவிப்பார். ஆக, மாகாண கவுன்சிலின் நிதி தொடர்பான அதிகாரங்கள் முழுவதும் ஆளுநரிடமும், குடியரசுத் தலைவரிடமுமே தங்கியுள்ளன.

இவைகூட நிலையானது அல்ல. இந்த 13வது அரசியல் சட்டத்திருத்தத்தில் இலங்கை நாடாளுமன்றம் எந்த மாற்றங்களையும் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு கொண்டு வந்து மாற்றிக் கொள்ள முடியும். பொதுவாக அரசியலமைப்பு சட்டத் திருத்தங்களுக்கு மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிபந்தனை கூட இதற்குக் கிடையாது. இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு வாக்கு அதிகம் பெற்றுகூட இந்தத் திருத்தங்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

இந்த 13வது சட்டத் திருத்தத்திலேயே இலங்கை நாடாளுமன்றம் மெஜாரிட்டி ஆதரவுடன்

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# துரோகிகளை வரலாறு மன்னிக்காது

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்களைக் கொண்டு வந்துவிடலாம். ஆக - 13வது சட்டத்திருத்தம் என்பது தமிழர்களுக்கு உரிமை வழங்கும் சட்டத் திருத்தம் அல்ல. சிங்களர்கள் - தமிழர்கள் மீது நடத்தும் அரசியல் விளையாட்டு, இந்த 'சட்டத்திருத்தம்' என்ற நாடகத்தின் காட்சிகள் எப்போதும் எந்த வடிவிலும் மாற்றங்களை எடுத்துக் கொண்டிருக்கும்.

1983 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் 6வது திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அது இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 'குரலை' நெரிக்கும் திருத்தம். இதன்படி தமிழர்களுக்கு தனித்தாயக உரிமை வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் - நாடாளுமன்றத் துக்குள்ளேயோ அல்லது வெளியேவோ பேசினால், அவர்கள் பதவி பறிக்கப் பட்டுவிடும். சர்வதேச நீதிமன்றத்தால் இந்த சட்டத்திருத்தம் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. இப்போது 13வது திருத்தத்தின்படி மாகாண கவுன்சில் உறுப்பினர்களும், அமைச்சர்களும் இந்த 6வது சட்டத்தின் கீழ் தான் உறுதிமொழி ஏற்று பதவி ஏற்க வேண்டும்.

1987 ஆம் ஆண்டு உருவான ராஜிவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம்கூட - தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணப் பகுதிகளை 'தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழும் பிரதேசம்' (have been areas of historical habitation) என்பதை அங்கீகரித்தது. பிறகு - அந்த அங்கீகாரத்தையே கூடுதலாக ஒரு விளக்கத்தை இணைத்து பலவீனப்படுத்திவிட்டார்கள். 'தமிழர்கள் வரலாற்றுப் பகுதி' என்பதோடு - கூடுதல் விளக்கமாக "நீண்டகாலமாக தமிழர்களும் இந்த எல்லைப் பகுதியில் பிற இனக்குழுக்களோடு ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தனர்" என்ற பிரிவை இணைத்துக் கொண்டு விட்டார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சிங்களர்களைப்போல் 'இன வாதம்' பேசியவர்கள் அல்ல. இனத்துக்கான உரிமையைத்தான் கேட்டார்கள். 1985 இல் அனைத்து தமிழ்ப் போராளி குழுக்களும் பங்கேற்ற இலங்கை அரசு பிரதிநிதிகளுடன் இந்தியாவின் ஏற்பாட்டில் நடந்த திம்பு பேச்சுவார்த்தையில் பங்கேற்ற தமிழர்கள் ஒருமித்து முன்வைத்த கோரிக்கையில் நான்கு அம்சங்கள் இடம் பெற்றிருந்தன.

1. இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களை ஒரு தேசமாகவோ, தேசிய இனமாகவோ அங்கீகரிக்க வேண்டும்.
2. அவர்களுக்கு பாரம்பர்ய பிரதேசம் இருப்பதை அங்கிகரிக்க வேண்டும்.
3. அவர்களின் தேசிய சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.
4. இலங்கைத் தீவை தங்களது தேசமாகக் கருதுவோர் தமிழர் குரலுக்கு குடி மக்களுக்கான உரிமைகளையும், அவர்களுக்கான அடிப்படை உரிமை களையும் அங்கீகரிக்க வேண்டும்.

இந்த நான்கு அடிப்படை கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு, இலங்கை அரசு முன் வைக்கும் எந்தத் தீர்வுத் திட்டத்தையும் பரிசீலிக்கத் தயார் என்றுதான் தமிழர்களின் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தையில் பங்கேற்க முன் வந்தனர். அப்படி நிபந்தனை வைத்த குழுக்கள்தான் - இப்போது அனைத்து உரிமைகளையும் உதறிவிட்டு, இலங்கைக்கு அடிமைப் பத்திரம் எழுதிக் கொடுத்து, அதன் அமைச்சரவையிலும் இடம் பிடித்துக் கொண்டு தமிழினப் படுகொலைக்கு துணை நின்று இன்று இராணுவத்துக்கு ஆள்காட்டி வேலை செய்யும் துரோகத்திலும், மான வெட்கமின்றி இறங்கியுள்ளனர். இந்த துரோகத்தை வரலாறு மன்னிக்காது. மக்கள் மன்றத்தில் இவர்கள் அவமானப்பட்டு நிற்கிறார்கள். இவர்களை இந்திய உளவு நிறுவனங்களும், பார்ப்பன ஊடகங்களும் தலை மீது தூக்கி வைத்துக் கூத்தாடுகின்றன. நாம் எதற்காக, இதைக் குறிப்பிடுகிறோம் என்றால், தமிழர்கள் ஒருபோதும் சிங்களர் வாழும் தேசப் பகுதிக்கு உரிமை கொண்டாடியது இல்லை. ஒட்டு மொத்த இலங்கையையும் தமிழர்கள் ஆண்ட வரலாறுகள் உண்டு என்றாலும்கூட, அதன் பிறகு உருவாக்கிக் கொண்ட சிங்களர்களின் தனி தேசத்தை, தமிழர்கள் அங்கீகரிக்க மறுக்கவில்லை. தமிழ் ஈழத்துக்குப் போராடிய போராளிகள், விடுதலைப்புலிகள் சிங்களப் பிரதேசத்தின் மீது போர் தொடுக்கவும் இல்லை. இஸ்ரேல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்ததுபோல் ஒரு காலத்திலும், அவர்கள் சிங்களப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கவும் இல்லை.

மாறாக - தமிழர் பகுதிகளில் சிங்கள ராணுவத்தின் ஆக்கிரமிப்பை அடக்குமுறையை எதிர்த்துத்தான் போராடினார்கள். தமிழர்கள் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கும் அதே நேரத்தில் சிங்களர்கள் தமிழர்களின் தேசியத்தை அங்கீகரிக்கவே தயாராக இல்லை என்பதே உண்மை. சிறீலங்கா தேசியத்தை முன் வைத்து தமிழர்களின் தனித்த தேசியத்தை அங்கீகரிக்க மறுத்தார்கள். அந்தப் பார்வையோடு தங்களின் அரசியல் சட்டத்தையும் உருவாக்கிக் கொண்டு விட்டார்கள். இலங்கை அரசின் சட்டம் ஒற்றையாட்சியையே முன் வைக்கிறது.

இரு தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு நாடு என்பதை அங்கீகரிக்க மறுக்கிறது. இந்த 'ஒற்றை ஆட்சி' என்ற சட்டத்துக்குள் சிங்களர் பேரினவாதத்துக்கு தமிழர்கள் அடிபணிந்து வாழ்வதை சட்டபூர்வமாக்கும் ஒரு முயற்சிதான் 13வது சட்டத்திருத்தம் என்பதைத் தவிர, இது, தமிழர்களுக்கு சம உரிமைகளை வழங்கிடும் திருத்தமல்ல. எவருடனும் இதை நாம் விவாதிக்கத் தயார். உரிமைகளை மறுத்துவிட்டு, உரிமைகளற்ற நிர்வாகங்களை மட்டுமே பகிர்ந்தளிக்கும் இந்த சட்டத்திருத்தத்தை ஊடகங்கள் விவாதத்துக்கு உட்படுத்தவில்லை. ஆனால், ஏதோ '13வது சட்டத் திருத்தம்' என்ற 'அலாவுதீன் அற்புத விளக்கை' இலங்கை தமிழர் களுக்கு வழங்க தயாராக காத்துக் கொண்டிருப்பது போலவும், விடுதலைப் புலிகள் கண்மூடித்தனமாக ராணுவ நடவடிக்கைகளிலே ஈடுபட்டு தோல்வியைத் தழுவியது போலவும் திட்டமிட்ட பிரச்சாரங்கள் - இந்திய உளவுத்துறையிலும் பார்ப்பனிய ஊடகங் களாலும் திட்டமிட்டு பரப்பப்பட்டு வருவதை தமிழர்கள் உணர வேண்டும்.

**(அடுத்த இதழில் நாடு கடந்த தமிழீழப் பிரகடனம் பற்றிய விளக்கம்)**

"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857
**தமிழர்களே! ஒடுக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!**

## கழக புதிய கிளைத் திறப்பு

கோவை மாநகர் இரத்தினபுரி கக்கன் தெருவில் கழகத்தின் பெயர் பலகை திறப்பும், கொடியேற்று விழாவும் 20.4.2009 திங்கள் மாலை 6 மணிக்கு நடந்தது. கிளை செயலாளர் நாகராஜ் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை க.இரா சேந்திரன் பெயர் பலகையை திறந்து வைத்தார். பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் கொடியேற்றி வைத்தார். இந்நிகழ்வில் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, மாநகர அமைப்பாளர் இ.மு.சாஜித், தமிழ்நாடு மாணவர் கழக அமைப் பாளர் ந.பன்னீர்செல்வம், பகுதி கழக செயலாளர் சண்முகசுந்தரம், தமிரசன், ஜெயந்த், பூங்கா பாண்டியன், ரகு, பிரவீன் ஆகியோர் கலந்து கொண் டனர். இரத்தினபுரி கிளை தோழர்கள் ஐம்பது பேர் கழகத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர்.

## சேலம் மாவட்டக் கழகக் கூட்டம்

சேலம் மாவட்டக் கழகக் கூட்டம் ஜூலை 4 ஆம் தேதி மாலை 4 மணி யளவில் மேட்டூர் தாய்த்தமிழ்ப் பள்ளி யில் கூடுகிறது என்று மாவட்ட செய லாளர் சக்திவேலு அறிவித்துள்ளார். பெரியார் முழக்கம் சந்தா வழக்கு நிதி மற்றும் கழக செயல் திட்டங்கள் பற்றி முடிவுகள் எடுக்கப்படும்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்கும் கழகப் பொதுக் கூட்டங்கள்

| | | |
|---|---|---|
| ஜூலை 1 | - | பெரம்பலூர் |
| 2 | - | குடந்தை (திருமணம்) |
| 4 | - | அய்தராபாத் (உஸ்மானியா பல்கலைக்கழகம்) |
| 5 | - | குமாரபாளையம் |
| 6 | - | மதுரை |
| 9 | - | விழுப்புரம் |
| 10 | - | கும்பகோணம் |
| 11 | - | மயிலாடுதுறை |
| 12 | - | திருச்சி |
| 14 | - | பொள்ளாச்சி |
| 15 | - | உடுமலை |
| 16 | - | தாராபுரம் |
| 17 | - | பல்லடம் |
| 18 | - | திருப்பூர் |
| 21 | - | சென்னை |

**குறிப்பு :** 9, 10 மற்றும் 14லிருந்து 18 தேதி வரையுள்ள நிகழ்ச்சிகளில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொள் கிறார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மணன், ம.தி.மு.க. கோவை மாவட்ட மாணவரணி செயலாளர் புதூர் சந்திரசேகர் ஆகியோரை தேசிய




**சேலம்**

பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்த தமிழக அரசைக் கண்டித்தும், தமிழுணர்வாளர்களை விடுதலைச் செய்யக் கோரியும் கண்டன ஆர்ப் பாட்டம் 26.6.2009 அன்று மாலை 4 மணிக்கு சேலம் மத்திய தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலை வர் மார்ட்டீன் தலைமை தாங்கினார்.




**மதுரையில்**

கழக இளைஞரணி தலைவர் கோகுல கண்ணன் மற்றும் ஆத்தூர் சண்முகம், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், சேலம் காமராசு ஆகிய தோழர்கள் கண்டன உரையாற்றினர். டேவிட் நன்றியுரை கூறினார். 100-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### புதுவை


ஈழத் தமிழர்களை படு கொலை செய்ய இந்திய அரசால் இலங்கை சிங்கள ராணுவத்திற்கு வழங்குவதற் காக ஆயுதங்கள் ஏற்றி சென்ற லாரிகளை கோவை யில் பொதுமக்கள் ஆதர வோடு தடுத்து நிறுத்தி போராடிய கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட் டிணன் மற்றும் தோழர் களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்த தமிழக அரசின் தமிழர் விரோத போக்கைக் கண்டித்து 26.06.09 அன்று 10 மணியளவில் புதுவையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமை வகித்தார். துணை தலை வர் வீராசாமி, செயலாளர் விசய சங்கர், அமைப் பாளர் தந்தை பிரியன், இளைஞரணி செயலாளர் சுரேஷ், பொறுப்பாளர் ரவிச்சந்தர், ம.தி.மு.க. பொறுப்பாளர் செல்வ ராசு மற்றும் கழகத் தோழர்கள் பெரும் அள வில் கலந்து கொண்டனர்.

**வைகோ உரை தொடர்ச்சி அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 03rd July 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூலை 09, 2009 புரட்சி 8 முழக்கம் 26 விலை: ரூ.2.50


## ‘இந்து’ பார்ப்பானின் அடங்காத் திமிர்

ஈழத் தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியிருக்கிறது இலங்கை அரசு. அவர்களை நிரந்தரமாகவே அடைத்து வைக்க முடிவெடுத்து விட்டதாகவே தெரிகிறது. இந்தக் கட்டுமானப் பணிகளில் தமிழ் அகதிகளையே ஊதியமில்லாத வேலைக்காரர்களாக அரசு வேலை வாங்குகிறது. ‘மெனிக்பாம்’ பகுதியில் இத்தகைய நிரந்தர கட்டுமான வேலைகள் தொடங்கியுள்ளன.

**– இது மனிதாபிமானப் பணியாளர்களின் அறிக்கை**

விடுதலைப் புலிகளை வீழ்த்தி விட்டதாக வெற்றி விழாக்களை நடத்தி வரும் இலங்கை அரசு, போர் முடிந்து 6 வாரங்களுக்குப் பிறகும், அகதிகள் முகாமைப் பார்வையிட, அய்.நா.வின் உதவிப் பணியாளர்களையோ, அனைத்துலக நிறுவனப் பிரதிநிதிகளையோ, தொண்டு நிறுவனங்களையோ இன்னும் அனுமதிக்கவில்லை.

**– ‘லண்டன் டைம்ஸ்’ ஏடு இப்படி எழுதுகிறது.**

வவுனியா மாவட்டம் செட்டி குளம் பகுதியில் உள்ள முகாமில் நோய் பரவி, சிறுவர்கள் இறந்து விடுகிறார்கள். நோயாளிகளுக்கு சிகிச்சை இல்லை; தேவையான அளவு மருத்துவர்களும் இல்லை; நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்களை ஒவ்வொருவராக அழைத்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும்போது, இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவரும் உடனிருந்து கவனிப்பது, நோயாளிகளுக்கு அச்சத்தை உருவாக்குகிறது.

மேல் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் - மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டுமானால், மருத்துவ அதிகாரிகளாக உள்ள சிங்களர்கள் அனுமதிப்பதில்லை. அப்படி அனுமதிக்கப்பட வேண்டுமானால் ரூ.500 முதல் 1000 வரை அவர்களுக்கு லஞ்சம் தர வேண்டியிருக்கிறது. வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் நோயாளிகள் பிணங்கள் ஏற்றும் வண்டியிலோ அல்லது அரசு பேருந்திலோ தான் கொண்டு செல்லப்படுகிறார்கள். இவ்வளவுக்குப் பிறகும் போகும் வழியில் உள்ள இராணுவச் சாவடியில் நோயாளிகள் இராணுவ சோதனைக்கு உள்ளாக வேண்டும்.

நிமோனியாவால் பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்கள் இப்படி இராணுவ பரிசோதனைக்கு உள்ளானபோது இராணுவ மருத்துவர்கள் அவர்களை மருத்துவமனை போகத் தேவையில்லை என்று கூறி மீண்டும் முகாமுக்குத் திருப்பி அனுப்பினர். அந்த சிறுவர்கள் முகாமில் பிணமானார்கள்.

**– இணையதளங்களில் வெளிவந்த செய்தி.**

அகதி முகாம்களை பார்வையிட்டபோது அதிர்ச்சியடைந்தேன். காலைக்கடன்களை கழிப்பதற்குக்கூட மக்கள் மணிக்கணக்கில் கியூவில் நிற்கிறார்கள். 5 பேர் மட்டும் இருக்கக்கூடிய கூடாரத்தில் 30க்கும் அதிகம் பேர் உள்ளனர். கூடாரத்தில் எழுந்து நின்றால், இடுப்பு எலும்பே முறிந்துவிடும்.

**– இலங்கை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி**

இப்படி அகதிகள் முகாமில் நடக்கும் அவலங்கள் உள்ளத்தையே உறையச் செய்யும்போது, பார்ப்பன ‘இந்து’ நாளேடு மட்டும் அகதி முகாம்கள் சிறப்பாக நடப்பதாக பொய்ச் செய்தி போடுகிறது. ராஜபக்சேயின் சிறப்பு பேட்டியை முதல் பக்கத்தில் வெளியிட்டு அந்த இனப்படுகொலைக்காரனை மக்கள் தலைவன் போல் சித்தரிக்கிறது.

இந்தியாவின் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்கூட இலங்கை அரசின் நிவாரணப் பணிகள் சரியாக நடக்கவில்லை என்கிறார். ஆனால், ‘இந்து’வுக்கோ, தமிழன் அவதியும், அகதிகளாக உள்ளவர்கள் ஒவ்வொரு நாளும் மரணத்தின் விளிம்புக்குச் சென்று மீண்டு வருவதும் மகிழ்ச்சி கும்மாளமாக இருக்கிறது.

அதனால் தான் கச்சத் தீவை இலங்கைக்கு கொடுத்ததை ‘இந்து’ நியாயப்படுத்துகிறது.

சிங்களக் கடல்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை அனுமதிக்க முடியுமா என்று ராஜபக்சே வழக்கறிஞராகவே மாறி தமிழ்நாட்டு மீனவர்களை குற்றம் சாட்டுகிறது.

யார் இந்த ‘இந்து’?

தமிழர்கள் சாட்சிகள் இல்லாமலே ஒரே நாளில் 20000 பேர் படுகொலை செய்யப்பட்டபோது, அங்கே சாட்சியாக இருந்தது ‘இந்து’ செய்தியாளர்தான். **அந்த செய்தியை உலகுக்கே தெரியாமல் ‘இந்து’ பார்ப்பான் மறைத்தான்.**

புலிகளின் அரசியல் பொறுப்பாளர்கள் புலித்தேவனும், நடேசனும் வெள்ளைக் கொடியுடன் சிங்கள ராணுவ தளபதியை சந்திக்கப் போனபோது ராணுவம் அவர்களை சர்வதேச நெறிகளுக்கு எதிராக சுட்டுக் கொன்றது; அதைத் தட்டிக் கேட்ட அரசியல் பிரிவுத் தலைவர் நடேசன் மனைவியையும் சுட்டுக் கொன்றது. அப்போது அங்கே ராணுவக் கட்டுப்பாட்டு அறையில் இருந்தது - ‘இந்து’ நிருபர் தான்.

**அந்த செய்தியையும் உலகின் முன் ‘இந்து’ பார்ப்பான் மறைத்தான்.**


எங்கோ லண்டனில் இருந்த ‘டைம்ஸ்’ பத்திரிகை தான் வெளிக் கொண்டு வந்தது.

‘இந்து’ பார்ப்பானின் பார்ப்பனத் திமிர், தமிழன் அவமதிப்பு இன்னும் அடங்கவில்லை.

ஈழத் தமிழன் சிந்திய ஒவ்வொரு துளி ரத்தத்துக்கும் ‘இந்து’ பார்ப்பனக் கூட்டமே! நீ பதில் சொல்லும் காலம் வந்தே தீரும்! ●

## அய்தராபாத் மத்திய பல்கலையில் ஈழத்தமிழர் ஆதரவுக் குரல்!

ஆந்திர மாநிலத் தலைநகரான அய்தராபாத் நகரில் ‘ஈஎப்எல்யு’ என்ற மத்திய பல்கலைக்கழகத்தில் ஈழத்தில் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரியும், ஈழத் தமிழர் களுக்கு சம உரிமை வழங்கக் கோரியும் கருத்தரங்கம் ஒன்றை ‘ஈஎப்எல்யு’ மாணவர் பேரவை ஏற்பாடு செய் திருந்தது. தமிழ்நாடு மாணவர் கழகம் மற்றும் ஏபிசிஎல்சி மற்றும் டிஏபிஎம்சிஏ ஆகிய அமைப் புகள் இணைந்து 4.7.2009 சனிக்கிழமை மாலை பல்கலைக்கழக வளாகத்திற் குள்ளேயே உள்ள அரங்கத்தில் கருத்தரங்கை நடத்தினர்.




ஈஎப்எல் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் தலைவரும் ஆய்வு மாணவருமாகிய தோழர் இரவிச் சந்திரன் வரவேற்புரையோடு, சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட் டிருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி பற்றிய ஒரு முன்னுரையையும் வழங்கினார். இந்தப் பல்கலைக்கழ கத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்கள், பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பயில்கின்றனர். ஆங்கில மொழி வளர்ச்சிக்காக இந்திய அளவில் மிகப் பெரிய அளவில் பணியாற்றி வருவது இப் பல்கலைக்கழகமாகும். ஆங்கிலத் திலும், உலகின் பல்வேறு மொழிகளி லும் உயர் படிப்பு படித்துக் கொண் டிருக்கும் மாணவர்கள் இக்கருத்தரங் கில் பங்கேற்றனர். அரங்கு நிறைந்த அளவில் கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்த ஒரே நிகழ்வு இந்தக் கருத்தரங்கம் தான் என்பதை பங்கேற்ற மாணவர்கள் கூறினர்.

இக்கருத்தரங்கில் முதலில் தோழர் கொளத்தூர் மணி ஈழ வரலாற்றை, இனப்படுகொலையின் தொடக்கத்தி லிருந்து விரிவாக ஆங்கிலத்திலேயே பதிவு செய்தார். ஆய்வு மாணவர்கள் பலரும் அந்த உரையைக் கவனமாகக் குறிப்பெடுத்து நிகழ்ச்சியின் நிறைவில் உரை தொடர்பான தமது கேள்வி களைத் தொடுத்து பதிலைப் பெற்றனர். கழகத் தலைவரைத் தொடர்ந்து ஏபிசிஎல்சி அமைப்பின் கலைக் குழுவின் தோழர்

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## 377வது பிரிவு

*1860 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சி உருவாக்கிய சட்டப் பிரிவு 377. ஓரினச் சேர்க்கையை குற்றம் என்று அறிவிக்கும் இந்தச் சட்டப் பிரிவை நீக்கக் கோரி அரவாணிகள், ஓரினச்சேர்க்கையாளர்கள் மனித உரிமையாளர்கள் தொடர்ந்து போராடி வந்தனர். அவர்கள் மகிழ்ச்சியடையக்கூடிய தீர்ப்பு ஒன்றை டெல்லி உயர்நீதிமன்றம் கடந்த ஜூலை 2 ஆம் தேதி வழங்கியுள்ளது. தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி முரளீதர் அடங்கிய அமர்வு "வயது வந்தவர்கள் – தங்களுக்கான தனிப்பட்ட பாலுறவுகளைத் தேர்வு செய்யும் உரிமையை குற்றமாகக் கருத முடியாது. அப்படி குற்றமாகக் கருதுவது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கான பிரிவு 21, 14, 15-க்கு எதிரானவையாகும்" என்று தீர்ப்பளித்துவிட்டது. இதன் மூலம் 149 ஆண்டுகால பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் சட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஏற்கனவே 126 நாடுகள் ஓரின சேர்க்கை குற்றமாகாது என்று அறிவித்துள்ளன.*

*டெல்லி உயர்நீதிமன்றத்தில் தொண்டு நிறுவனம் ஒன்று இந்த பொது நலன் வழக்கைத் தொடர்ந்தபோது, இந்தியாவின் உள்துறை மற்றும் சட்ட அமைச்சகங்கள் – இந்தக் கோரிக்கைக்கு எதிராகவும், மருத்துவர் அன்பு மணியின் சுகாதாரத்துறை அமைச்சகம் கோரிக்கைக்கு ஆதரவாகவும், நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்தன. எனவே இந்திய ஆட்சி நிர்வாகத்தில் இதில் கருத்தொற்றுமை இல்லாத நிலையே இருந்தது. தற்போது பதவிக்கு வந்துள்ள சட்டத்துறை, உள்துறை அமைச்சர்கள் கோரிக்கைக்கு ஆதரவாகவே உள்ளனர்.*

*பாலின அடிப்படையில் வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள் எந்த வடிவிலும் நிலவக் கூடாது என்பதுதான் நாகரிக சமூகத்தின் பார்வையாகும். பாலின வேறுபாடுகள் காட்டப்பட்டதால்தான் 'கற்பு' என்ற 'புனிதம்' பெண்கள் மீது மட்டும் திணிக்கப்பட்டு, அவர்களை அடக்கியாளக் கூடிய வலிமையான ஆயுதமாக, பார்ப்பனிய மற்றும் ஆண் ஆதிக்க சக்திகளால் மாற்றப் பட்டது. அதனால் தான் பெண்ணடிமை ஒழிப்புக்கு குரல் கொடுத்த பெரியார், 'கற்பு', 'ஆண்மை' என்ற வார்த்தைகளே தமிழ் அகராதிகளிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்றார். பால் உறவு சுதந்திரம் என்பது தனி மனித உரிமைகளைச் சார்ந்ததுதான். உணவு, உடைகளைப் போல், பால் உறவுகளைத் தேர்வு செய்யும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. இயற்கைக்கு மாறான உறவுகள் என்று எந்த வரையறையும் இல்லை. "ஆணையும், பெண்ணையும் கடவுள் படைத்ததே – சந்ததிகளை உருவாக்குவதற்குத்தான்" என்று நம்பும் மதவிதிகள், இந்தத் தீர்ப்பைக் கடுமையாக எதிர்க் கிறார்கள். மதங்கள் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில், திணிக்கப்பட்ட விதிகளை, பழக்க வழக்கங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடிய மதங்களோ, மதவாதிகளோ ஏதுமில்லை. அப்படியே வாதிட்டாலும்கூட – இந்துக் கடவுள்கள் பலவும் ஓரினச் சேர்க்கையில் பிறந்ததாகவே புராணங்கள் கூறுகின்றன. தண்டனைச் சட்டத்தின் 377வது பிரிவு ஒன்று இருந்ததே இந்துக் கடவுள்களுக்கு எதிரானதுதான். நாரதரின் 60 குழந்தைகளான வருடங்கள், அரிஹரபுத்திரன் என்ற அய்யப்பன், கணபதி, அஸ்வினி, ஜாம்பவர்தன், நரகாசுரன், இராமன் போன்ற 'கடவுள்', 'தேவர்' எல்லாம் '377வது' பிரிவுக்கு எதிராகப் 'பிறந்தவர்கள்' தான்.*

*மைனர்கள் மீதும் வன்முறையாகவும் நடக்கும் பாலுறவுகள் தொடர்ந்து குற்றமாகவே கருதப்படும் என்றும், இதற்கேற்ப 377-வது பிரிவை மாற்றி அமைக்கலாம் என்ற கருத்தை உயர்நீதிமன்றம் முன் வைத்துள்ளது.*

*2001 ஆம் ஆண்டு டெல்லி உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது, அதை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. உச்சநீதிமன்றத்துக்கு மேல்முறையீடு 2004 ஆம் ஆண்டு செய்யப்பட்டபோது, மீண்டும் உயர்நீதிமன்ற பரிசீலனைக்கு உச்சநீதிமன்றம் திருப்பி அனுப்பியதில் இப்போது இத் தீர்ப்பு கிடைத்துள்ளது.*

*'கடவுளுக்கு' எதிரான தீர்ப்பு என்று மதவாதிகள் இதை எதிர்க்கிறார்கள். கடவுளுக்கு எதிரான தீர்ப்புகள் தான் மனித குலத்துக்கு ஆதரவான கருத்துகளாகும். மனித உரிமைக்கும், பாலின சுதந்திரத்துக்கும் ஆதரவான தீர்ப்புகளை இனி கடவுளே நேராக வந்து "அப்பீல்" செய்தால்தான் உண்டு! நிச்சயம் வர மாட்டார் என்பது மதவாதிகளுக்கும் தெரியும்.*

*இது வரவேற்கத்தக்க முற்போக்கான தீர்ப்பு!*

# ஒரு சார்பு சுதந்திர பிரகடனம்: சில வரலாற்று தகவல்கள் (4)

***ஒரு சார்பு சுதந்திரப் பிரகடனங்கள் வரலாற்றில் விடுதலைக்கு முன் நிகழ்ந் துள்ளன. அது பற்றிய சில வரலாற்றுத் தகவல்கள்:***

இந்நிலையில் தெற்கு ரொடீசியாவின் நிர்வாகப் பொறுப்பில் இருந்த இயான் சிமித், பிரித்தானி யாவிடம் தெற்கு ரொடீசியா வுக்கான விடுதலையைக் கோரினார். ஆனால், பிரித்தானிய அரசாங்கமோ, பூர்வகுடி கறுப்பின பெரும் பான்மையினரின் ஆட்சி ஒப்படைக்கின்ற போதுதான் சுதந்திரம் பற்றி பரிசீலிக்க முடியும் என்று அறிவித்தது.

இதனால் குடியேற்றப்பட்ட வெள்ளை இன மக்களின் சார்பில் 1965 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் தெற்கு ரொடீசியா ஒருதலைபட்சமான சுதந்திர பிரகடனத்தை வெளியிட்டது. இயான் ஸ்மித் தன்னை பிரதமராக அறிவித்தார். ரொடீசி யாவின் இந்தப் பிரகடனத்துக்கு முன்னோடிப் பிரகடனமாக அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை ஸ்மித் சுட்டிக்காட்டினார்.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபையும் பொது நலவாய சபையும் இதனை எதிர்த்தன. அனைத்துலக சமூகம் அங்கீகரிக்க மறுத்தது. ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் முதல்முறையாக ரொடீசியா மீது 1968 ஆம் ஆண்டு பொருளாதாரத் தடை விதிக்கப் பட்டது. இதனிடையே தடை செய்யப்பட்ட இயக்கங்கள், கொரில்லா யுத்தங்களைத் தொடங்கின.

தென்னாப்பிரிக்க நாடு, ரொடீசியா மீது கரிசனை காட்டியபோதும் அங்கீகரிக்க வில்லை. 1979 ஆம் ஆண்டு நார்வேயில் இருந்த தனது மகனின் திருமணத்தில் பங்கேற்க தெற்கு ரொடுசியாவின் பிரதமராக அறிவித்துக் கொண்ட ஸ்மித்துக்கு நார்வே அரசாங்கம் அனுமதி அளிக்கவும் மறுத்தது. ஒருதலை பட்சமான சுதந்திரப் பிரகடனத்துக்குப் பின்னர் அனைத்துலகத்திலிருந்து தெற்கு ரொடீசியா தனிமைப்படுத்தப்பட்டதாக மாறியது. அனைத்துலக நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் முயற்சியில் 1979 ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதன் பின்னர் 1980 ஆம் ஆண்டு இனப்பாகுபாடற்ற தேர்தல் நடத்த தெற்கு ரொடீசிய அரச தலைவராக இருந்த ஸ்மித் ஒப்புக் கொண்டார். 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்மித்தின் நிறவெறி அரசாங்கத்தை பூர்வகுடி கறுப்பின மக்கள் தூக்கியெறிந்தனர். ஜிம்பாப்வே ஆப்பிரிக்கர்கள் தேசிய ஒன்றியத்தின் தலைவர் முகபே வெற்றி பெற்று தொடர்ந்தும் ஆட்சியில் உள்ளார். தெற்கு ரொடீசியா, மீண்டும் ஜிம்பாப்வே என்ற பெயர் மாற்றம் அடைந்தது.

### கடங்கா

காங்கோ ஜனநாயகக் குடியரசின் தென் மாகாணம் கடங்கா என்பதாகும். காங்கோ அரசாங்கமானது கடங்காவுக்கு 1960 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கூடுதல் சுதந்திரத் துக்கான அனுமதியை அளித்தது. அதனைத் தொடர்ந்து கடங்கா, தன்னிச்சையான சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. இதற்கு பெல்ஜியம் ஆதரவளித்தது. இதனிடையே 1961 ஆம் ஆண்டு காங்கோவின் பிரதமர் லூமூமாம்பா படுகொலை செய்யப் பட்டார். லூமூமாம்பாவின் மரணத்தைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டப் பட்டது. 1962 ஆம் ஆண்டு ஐநா. படை, கடங்கா மீது தாக்குதல் நடத்தியது. 1963 ஆம் ஆண்டு கடங்காவின் தனிநாட்டுப் பிரகட னத்தை ஐநா. முடிவுக்கு கொண்டு வந்தது.

### மினெர்வா

1852 ஆம் ஆண்டு பசிபிக் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாடு மினெர்வா. இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்கா இத்தீவை ஆக்கிரமித்திருந்தது. 1972 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் நாள் தன்னை ஒரு சுதந்திர நாடாக மினெர்வா பிரகடனம் செய்தது. சொந்த நாணயத்தையும் அது உருவாக்கியது. மினெர்வாவின் சுதந்திரப் பிரகடனம் குறித்து அண்டை நாடுகளான ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, டோங்கா, பிஜி உள்ளிட்டவை விவாதித்தன. இந்நிலையில் 1972 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் நாள், டோங்கா நாட்டு மக்களின் மீன்பிடித்தளமாக மினெர்வா இருப்பதாகவும் மினெர்வா மீது தமது நாட்டுக்கே உரிமை இருப்பதாகவும் டோங்கா அரசாங்கம் வெளியிட்டது. தற்போது வரை மினெர்வா விடுதலைப் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

### வடக்கு சைப்ரசின் துருக்கிய குடியரசு

பிரித்தானிய காலனி ஆதிக்கத்திலிருந்து சைப்ரஸ் 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் நாள் விடுதலை பெற்றது. அந்நாட்டில் கிரேக்க சைபீரியர்கள் 80 விழுக்காட்டினரும் துருக் கிய சைப்ரீயர்கள் 18 விழுக்காடும் உள்ளனர்.

1963 ஆம் ஆண்டு அந்நாட்டு முதலாவது அரச தலைவர் ஆர்ச்பிசம் மகாரியஸ், 13 அரசியல் சட்ட திருத்தங்களை பரிந்துரைத் தார். ஆனால் இத்திருத்தங்களை துருக்கிய சைபீரியர்கள் நிராகரித்தனர். இதனைத் தொடர்ந்து சைப்ரஸ் அரசாங்கத்துக்கும் சைபீரிய துருக்கியர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை 1965 ஆம் ஆண்டு அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் சைப்ரஸ் மீது 1974 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் நாள் துருக்கி தாக்குதல் நடத்தியது. 1960 ஆம் ஆண்டைய அரசியலமைப்பு முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த துருக்கி அழுத்தம் கொடுத்து இத்தாக்குதலை நடத்தி யது. அதன் பின்னர் ஜெனீவாவில் அமைதிப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அப்பேச்சுக்கள் தோல்வியடைய சைப்ரசுக்குள் துருக்கியப் படை உள் நுழைந்தது. 37 விழுக்காட்டு பிர தேசத்தை துருக்கி ஆக்கிரமிக்க இலட்சக் கணக்கான கிரீக் சைபீரியர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர்.

இந்நிலையில் 1983 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாளன்று வடக்கு சைப்ரசில் துருக்கிய குடியரசுப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் 541 ஆம் தீர்மானத்தின்படி 1983 ஆம் ஆண்டு நவம்பர் 18 இல் இந்தப் பிரகடனம் சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டது. மேலும் வடக்கு சைப்ரசி லிருந்து துருக்கிய படைகள் வெளியேற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் பட்டது. துருக்கி மட்டுமே அந்நாட்டை அங் கீகரித்தது. சைப்ரஸ் நாட்டை குறிப்பிடுகை யில் "கிரீக் சைப்ரஸ் நிர்வாகப் பகுதி" என்றே இன்றளவும் துருக்கி குறிப்பிட்டு வருகிறது.

### நாகாலாந்து

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நாகாலாந்துக்கு பிரித்தானியர்கள் 1832 ஆம் ஆண்டு சென்றனர். அது வரை எந்தவித அன்னிய தலையீடு இல்லாமல் சுதந்திர நாடாக நாகா பிரதேசம் இருந்து வந்தது. பிரித்தானிய இந்திய நிர்வாகத்தில்கூட நாகாலாந்து இணைக்கப்படவில்லை. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. அதற்கு முன்னர் 1947 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் நாள் இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் களில் ஒருவரான காந்தியை நாகா முழுவினர் நேரில் சந்தித்துப் பேசினர். நாகா தேசிய இனமக்கள் சுதந்திரமாக வாழ்வதற்குரிய உரிமை படைத்தவர்கள் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையை காந்தியார் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாளன்று நாகலாந்து சுதந்திர நாடாக தன்னைப் பிரகடனம் செய்தது. 1947 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்துக்கும் சுதந்திர நாகாலாந்து நாட்டின் தேசிய சபைக்கும் இடையே 9 அம்ச ஒப்பந்தம் ஒன்றும் உருவானது. அதில் நாகா மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரித்தது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை இந்தியா பின்னர் நிராகரித்து இந்திய அரசியல் சட்டத்தை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இந்திய அரசியல் சட்டத்தை

*4 ஆம் பக்கம்*

## ‘நாடு கடந்த தமிழ் ஈழ அரசு’ உருவாக்கம்

# உலகத் தமிழினத்துக்கு வலிமை சேர்க்கும்

*சென்னையில் கடந்த ஜூன் 26 ஆம் தேதி ‘ஈழப் பிரச்சினையில் ஊடகங்கள் போக்கு’ என்ற தலைப்பிலும், 28 ஆம் தேதி தகவல் தொழில் நுட்பத் துறையினர் லயோலா கல்லூரியில் நடத்திய ஈழத் தமிழர் கருத்தரங்கிலும் பங்கேற்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நாடு கடந்த தமிழீழ அரசுக் குறித்து ஆற்றிய உரையிலிருந்து:*

உலக வரலாற்றில் விடுதலைப் போராட்டத்தில் புதிய அத்தியாயங்களை எழுதிய இயக்கம் - விடுதலைப் புலிகள் இயக்கம் என்பதை உலக நாடுகளின் பல்வேறு விடுதலைப் போராளிகள் இயக்கங்களே பெருமையுடன் கூறுகின்றன. உலகத்தின் எந்த ஒரு நாட்டின் ஆதரவுமின்றி - எந்த ஒரு நாட்டின் உதவியை எதிர்பாராமல் தங்களுக்கான ராணுவ கட்டமைப்புகளை அவர்களே உருவாக்கிக் கொண்டு தங்களது சுய சார்பில் உறுதியாக நின்றார்கள். தெற்காசியப் பகுதியில் இந்தியப் பெருங்கடலில் உரிமை கோருவதற்கு 47 நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கும் போது ஒரு போராளி இயக்கம் கடற்பரப்பின் ஒரு பகுதியை தங்கள் ஆளுகையின் கீழ் வைத்திருந்ததை எந்த ஒரு ‘அரசும்’ - ஏற்கத் தயாராக இல்லை. உலகில் விமானப் படை வைத்திருந்த ஒரே இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் தான். அந்த விமானப் படையின் செயலாற்றலை முறியடித்திட துடித்த இந்திய பார்ப்பனிய ஆட்சி, ஓடோடிச் சென்று - ராடார் கருவிகளையும், அதனை இயக்கும் தொழில்நுட்ப வியலாளர்களையும் இனப்படுகொலை நடத்தும் சிங்களப் பேரினவாத ஆட்சிக்கு வழங்கி உதவியது இந்தியப் பார்ப்பனிய ஆட்சி. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வலிமையான ராணுவ கட்டமைப்பும் எந்த ஒரு நாட்டையும் சார்ந்திடாத சுயசார்பும் தான் அவர்களுக்கு எதிராகவே திரும்பி விட்டது. தமிழர்களாகிய நாம் - இதில் பெருமையடைந்தோம்; உணர்வு பெற்றோம்; உதவிட துடித்தோம்; இயக்கங்கள் நடத்தினோம்; இந்திய அரசே, இனப் படுகொலைக்கு துணை போகாதே என்று போராடினோம். ஆனால், இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி - தமிழர்களின் குரலை திரும்பிப் பார்க்கக்கூட தயாராக இல்லை. நம்மை - இந்தியா அந்நியர்களாகவே கருதியது. நாமும் இந்தியக் குடிமக்கள் என்பதை இந்திய தேசிய ஆட்சி அங்கீகரிக்கத் தயாராக இல்லை. நம்முடைய உணர்வுகளை அவமதித்தது; புறக்கணித்தது. இந்த அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் அங்கீகாரம் தேடித் தரவே தி.மு.க.வும் அதனுடன் கூட்டணி வைத்துக் கொண்ட கட்சிகளும் முயற்சித்தன. தமிழகத்தில் தேர்தல் களம் சூடு பிடித்த அதே நேரத்தில் ஈழத்தில் தமிழினம் இருந்த பகுதி கொலைக்களமாகியது. இங்கே தேர்தல் முடிவுகள் துரோக காங்கிரசுக்கும் அதன் கூட்டணிகளுக்கும் வெற்றிகளை அறிவித்த அதே காலகட்டத்தில் அங்கே தமிழினப் படு கொலையை நடத்தி முடித்த சிங்களம் வெற்றிப் பரணி பாடியது. காலம் உள்ளவரை இந்த இனத்துரோகத்தை அதற்கு துணை நின்ற சக்திகளை வரலாறு மன்னிக்கவே போவதில்லை. எல்லாமுமே முடிந்துவிட்டது. இப்போது என்ன நிலைமை? மறந்து விடாதீர்கள்!

இனத்துக்கான விடுதலைப் போராட்டம் எப்போதுமே ஓய்ந்துவிடாது. விடுதலைப் போராட்டத்துக்கான நியாயங்கள் உயிர்த்துடிப்புடன் இருக்கும்வரை, விடுதலைப் போராட்டமும் உயிர்த்தெழுந்து கொண்டே இருக்கும். அணுகுமுறைகள் மாறலாம்; போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் - இலக்கு நோக்கிய பயணம் மாறாது.

இப்போது ஆயுதப் போராட்டம் அங்கே தற்காலிகமாக முடிவுக்கு வந்துவிட்டது. உண்மை தான். ஆனால், ஆயுதப் போராட்டத்தின் விளைவால் மேலெழுந்த அரசியல் - அரசில் நகர்வை நோக்கி நகர்த்தக்கூடிய சூழலை, அதற்கான அடித்தளத்தை உருவாக்கி வைத்திருக்கிறது. 15,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை தங்களது நிர்வாகப் பகுதியாக விடுதலைப்புலிகள் இயக்கம் - மக்கள் பேராதரவோடு வைத்திருந்த காலத்தில்கூட சர்வதேசத்தின் அரசியல் கவனம் ஈழப் பிரச்சினையில் திரும்பவில்லை. அய்.நா. மன்றத்தின் விவாதத்துக்கும் உள்ளாக்கப்படவில்லை. ஆனால், எல்லாவற்றையும் இழந்த நிலையில் அய்.நா.வில் ஈழத் தமிழர் பிரச்சினை விவாதத்துக்கு வந்துவிட்டது. உலக நாடுகள் சிங்களத்தின் மனித இனப்படுகொலையைக் கண்டிக்கத் தொடங்கி விட்டன. மேற்கு உலக நாடுகள் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்களத்தை வெளிப்படையாகக் கண்டிக்கத் தொடங்கிவிட்டன. ஆனால் இடதுசாரி கொள்கையாளர்களாக நாம் மதித்த நாடுகள் - கியூபாவானாலும், சீனாவானாலும் அவை எல்லாம் இந்தியா, பாகிஸ்தானோடு கைகோர்த்துக் கொண்டு இனப்படுகொலை நடத்தும் சிங்களத்துக்கு ஆதரவாகவே நிற்கும் அவலத்தைப் பார்க்கிறோம்.

இந்த நிலையில் நல்ல சேதிகள் வருகின்றன. உலகம் முழுதும் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் வலிமையோடு ஒன்று திரளத் தொடங்கியிருக்கிறார்கள். ஏற்கனவே ஒவ்வொரு நாட்டிலும் தமிழ் ஈழத்துக்கு ஆதரவான அமைப்புகள் வலிமையான கட்டமைப்புகளோடு செயல்பட்டு வருகின்றன. அந்தந்த நாடுகளில் இயங்கிய தலைமையகங்கள் தமிழ் ஈழத்துக்கான தூதரகங்களாகவே கருதப்பட்டன. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள் மீது இப்போது ஒரு வரலாற்றுக் கடமை சுமத்தப்பட்டுள்ளது. தமிழ் ஈழ லட்சியத்தை நகர்த்திச் செல்லக்கூடிய வரலாற்றுக் கடமையை, முன்னெடுத்தாக வேண்டும். தோழர்களே! தமிழ் ஈழ தேசியத் தலைவர், வரலாற்று நாயகன் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா என்ற வாதத்துக்குள் நம்மை முடக்கி கொண்டு விடக்கூடாது. இதில் நாம் எச்சரிக்கையாக விழிப்புடன் செயலாற்ற வேண்டிய தருணம் இது. அந்த வாதங்களின் வலைகளுக்குள் நாம் சிக்கிக் கொள்ள வேண்டும் என்பதே. இந்திய சிங்கள உளவு நிறுவனங்கள் விரும்புகின்றன. எனவே தான் உளவு நிறுவனங்கள் தலைவர் பிரபாகரன் மரணமடைந்து விட்டதாகக் கூறியதோடு மட்டுமல்ல; மரணத்தைப் பற்றி அவ்வப்போது புதிய புதிய கற்பனைகளை கதைகளாக உருவாக்கிப் பரப்பி வருகின்றன.

தலைவர் பிரபாகரன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாத செய்தியைத்தான் நாட்டுக்கு நமக்கு விடுத்துள்ளார். அதே வேளையில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது என்று பரப்பப்பட்டு வரும் கருத்துக் களத்தின் ஊடாக நாம் பயனளிக்க வேண்டியுள்ளோம். இந்தப் பின்னணியில் தமிழ் ஈழ விடுதலையை முன்னெடுக்கக்கூடிய செயல் உத்திகளை வகுக்க வேண்டிய அவசியமிருக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இப்போது நாடு கடந்த தமிழ் ஈழ அரசு பற்றிய கருத்து ஒன்று சர்வதேச அரங்கில் புலம் பெயர்ந்த தமிழர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். பல நாடுகள் தன்னிச்சையாக தங்களை சுதந்திர நாடுகளாக அறிவித்து, நிழல் அரசுகளை நடத்தியதை வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. ஸ்காட்லாந்து, லத்தீன், அமெரிக்க நாடுகள், மத்திய அமெரிக்க நாடுகள், எஸ்தோனியா, பின்லாந்து, கினியா பிசாவு, ஹைட்டி, அமெரிக்கா, இந்தோனேசியா, கொரியா, லிதுவேனியா - இப்படிப் பல நாடுகள் தன்னிச்சையாக தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தன. இவை அய்.நா. மன்றம் உருவாவதற்கு முன்பே வெளிவந்த பிரகடனங்கள். அய்.நா. உருவான பிறகு, வியட்நாம், இஸ்ரேல், பாலஸ்தீனம், கிழக்கு திமோர் போன்ற நாடுகள், ஒரு சார்பாக தங்கள் விடுதலையை அறிவித்தன. பிறகு, அய்.நா.வில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இப்போது, விடுதலையை அறிவித்துவிட்டு அங்கீகாரத்துக்காக காத்திருக்கக்கூடிய நாடுகளும் இருக்கின்றன. சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள திபெத் - தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்துள்ளது. ஆனால், இப்படி ஒரு சார்பு சுதந்திரப் பிரகடனத்துக்கு ஏதேனும் ஒரு நாட்டின் ஆதரவு அவசியமாகிறது.

இந்த நிலையில் ஒரு சார்பு சுதந்திர பிரகடனம் என்பதற்கு பதிலாக, ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ (Trans national Government) என்ற கருத்து முன் வைக்கப்பட்டு, அதற்காக சட்ட நிபுணர்கள் தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சார்பாக சுதந்திரப் பிரகடனம் செய்து, நிழல் அரசு அமைப்பதிலிருந்து (Govt. in Exile) மாறுபட்டது. இரண்டும் வெவ்வேறானவை; நாடு கடந்த தமிழீழ அரசு பிரகடனத்துக்கு எந்த ஒரு நாட்டின் ஆதரவு வேண்டும் என்ற அவசியமில்லை. இப்படி ஒரு அரசு அறிவிப்பு என்பது - இதுவே முதல் முறை. இதற்கு முன் உலகில் முன் உதாரணம் இல்லை.

தமிழர்களுக்கு என்று ஒரு அரசு இல்லை என்றாலும் கூட - இன்று சர்வதேசம் தமிழர்கள் தனித் தேசிய இனம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறது. சிங்களம் - இந்தியா, சீன உதவியோடு நடத்திய இனப்படுகொலையை சர்வதேச சமூகம் உணர்ந்து, சிங்களத்துக்கு எதிராக அய்.நா.வில் தீர்மானம் கொண்டு வரும் நிலை கூட வந்துவிட்டது. சர்வதேச சமூகம் முழுமையான நியாயங்களையோ, நியாயத்திற்கான செயல்பாடுகளையோ தமிழர்களுக்கு வழங்கிடவில்லை என்பது உண்மைதான். என்றாலும் - ஒரு தனித்த தேசிய இனத்தை சிங்களப் பேரினவாதம் அழித்தொழிக்கும் செயல்பாடுகளிலிருந்து சர்வதேசம் - கண்களை முழுமையாக மூடிக் கொண்டு விடவில்லை. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையாக கைகழுவிடவும் இல்லை. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சர்வதேச நாடுகளுக்கு அந்தந்த நாட்டின் புலம் பெயர்ந்த தமிழர்கள் தொடர்ச்சியான அழுத்தத்தைத் தந்து, அந்த நாடுகளை செயல்படுத்த வைக்க வேண்டிய நிலையில் தமிழினம் இருக்கிறது.

இந்த செயல்பாட்டுக்கான அரசியல் தளத்தை ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ உருவாக்கித் தருவதாகவே நாம் கருதுகிறோம். இந்த தனித்துவமான புதிய யுக்தியைப் பயன்படுத்தி, தமிழர்களின் அடையாளம், மாண்பு, உணர்வுகள், நலன்களைக் காப்பாற்றும் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டும். தமது ராணுவ வலிமை மூலம் தமிழர்கள் அடையாளத்தை முற்றாக ஒழித்து, சிங்கள அடையாளத்துக்குள் திணிக்க முயற்சிக்கும் சிங்களத்தையும், அதற்கு துணை போகும் பார்ப்பனிய இந்தியாவையும் சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்த வேண்டும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்களின் அமைப்புகளுக்கு இணையாக ‘தமிழ் ஈழ அரசு’ உருவாக்கத்தை படிப்படியாக வளர்த்தெடுக்க வேண்டும். (உதாரணமாக இப்போது பிரான்சி

(4 ஆம் பக்கம்)

## ஒரு கேள்வி

**உ.பி. முதல்வர் மாயாவதி - அரசுப் பணத்திலிருந்து 1000 கோடியை செலவிட்டு, தனது சிலைகளையும், தனது கட்சி சின்னமான யானையின் சிலைகளையும் கன்ஷிராமின் சிலைகளையும் நிறுவி வருகிறாராம்.**

**மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல், இப்படி சிலைகளை நிறுவுவது நியாயம் தானா என்று காங்கிரஸ் தலைவர்களும், முலாயம் சிங்கும், பார்ப்பன ஊடகங்களும் கேள்வி எழுப்புகின்றன.**

**கேள்வி நியாயம் தான், ஒப்புக் கொள்கிறோம்.**

**ஆனால், மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு செலவிடாமல், வீணாக சிலைகளுக்கு செலவிடக் கூடாது என்ற கேள்வியை எல்லா நியாயங்களுக்கும் நீட்டிக்காதது ஏன்?**

**ஏழுமலையான் உட்பட பிரபல நட்சத்திர அந்தஸ்துள்ள பகவான்களுக்கு பல கோடி செலவில் வைர செருப்பும், வைர கடுக்கனும், தங்கக் கூரையும், தங்க முலாம் பூசிய தேரும் - ஏன்? நாட்டின் பொது வளங்களான தங்கமும், வைரமும், வைடூரியமும், வெள்ளியும் இப்படி வீண் விரயமாக்கப்படுவது ஏன்?**

**இவைகளை மக்கள் நலத்திட்டங்களுக்கு செலவிடக் கூடாதா என்று இவர்கள் ஏன் கேட்பதில்லை?**

**தலித் மாயாவதியை நோக்கி எழுப்பும் கேள்வியில் நியாயம் உண்டு. அதே நேரத்தில் கல் சிலைக்கு பார்ப்பனர்களால் பக்தர்களால் - நாட்டின் பொன்னும் பொருளும் முடக்கப்படுவதையும் கண்டிக்க வேண்டாமா?**

# கருட தரிசனக்காரனைப் போல்....

“நமது அரசியல் சீவனாடிகளையெல்லாம் டெல்லியில் ஒப்புவித்துவிட்டு, நமது மதச் சீவனாடியைப் பார்ப்பானிடம் ஒப்புவித்துவிட்டுக் கருட தரிசனத்திற்கு ஆகாசத்தைப் பார்த்து நிற்கும் பக்தனைப் போல் தொட்டதெற்கெல்லாம் டெல்லி நோக்கிப் பார்ப்பானை நோக்கித் தண்டமிடுவதுதானா நமது சுதந்திரத்திற்கு அறிகுறி?”

**– பெரியார், 15.10.1947 ‘விடுதலை’**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள 35க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் தங்களின் அமைப்புப் பிரதிநிதிகளைக் கொண்டு ரகசிய வாக்கெடுப்பு நடத்தி, ஈழத் தமிழர்களுக்கு, தமிழ் ஈழமே ஒரே தீர்வு என்று அறிவித்திருக்கிறது) புலம் பெயர்ந்த தமிழர்கள் ஒவ்வொரு நாட்டிலும் ‘தமிழ் ஈழ அரசை’ உருவாக்கிடும்போது அதன் வழியாகக் குரல் கொடுப்பதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினையை சிங்களமோ, பார்ப்பனிய இந்தியாவோ, தனது மைதானத்தில் பந்தாக உருட்டி விளையாடிக் கொண்டிருக்கவும் முடியாது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவுக் கரங்களாக பல்வேறு தளங்களில் ஊக்கத்துடன் செயல்பட்ட அனுபவங்களைக் கொண்டு மிளிருகின்றன. புலம் பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள். இதற்கான உத்வேகத்தையும், செயலாற்றலையும், நிர்வாகத் திறனையும் வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறது விடுதலைப்புலிகள் இயக்கம். இந்த அனுபவங்களும், ஆற்றல்களும் ஒருங்கிணைப்பும், உந்தும் சக்தியும் வீணாகிப் போய்விடக் கூடாது. உலகின் பல நாடுகளில் விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட நிலையிலும், அந்தத் தடைகளைக் கடந்தும் இந்த தமிழர் அமைப்புகள் செயல்பட்டபோது, ‘நாடு கடந்த தமிழ் ஈழ அரசு’ உருவாக்குவது என்பது இயலாத ஒன்றும் அல்ல.

ஏற்கனவே 1976 ஆம் ஆண்டு வட்டுக் கோட்டையில் தமிழர் தலைவர்கள் தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய்து, அந்த ஒற்றைக் கோரிக்கையை மட்டுமே முன் வைத்து, தமிழர் பிரதேசமான வடக்கு கிழக்குப் பகுதியில் தேர்தல் களத்தில் நின்று, அந்தக் கோரிக்கைக்கு மக்களின் பேராதரவை வாக்குகளாகப் பெற்று, இலங்கை நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த வரலாற்றுப் பதிவு இப்போதும் அப்படியே நீடிக்கிறது. அதே கோரிக்கையை இப்போது சர்வதேச சமூகத்துக்கு ‘நாடு கடந்த தமிழீழ அரசுகள் வழியாகக் கொண்டு செல்வதற்கான நியாயமான உரிமைகள் இருக்கின்றன. இந்த முயற்சிகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்த முடியாது; பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் படையணிகளைத் திரட்டி, இன அழிப்பை நடத்த முடியாது. இந்த கோரிக்கை வலிமை பெறும் போது, எதிரிகளை அது குலை நடுங்கச்செய்யும். எதிரியின் இனவாத இனஒழிப்பு நடவடிக்கைகளின் முகத்திரையும் கிழித்தெறியப்படும். நாம் ஒன்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

நிழல் அரசு அமைத்துள்ள திபேத்தியர்களுக்கு இந்தியாவில் அகதிகளுக்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. உலகம் முழுதும் திபேத்திய அகதிகள் கவுரவத்துடன் நடத்தப்படுகிறார்கள். தங்களுக்கான கூட்டுறவு சங்கங்களை நடத்துகிறார்கள். சீனா - திபேத்தியர் நிழல் அரசை எதிர்த்தாலும், உலக நாடுகள் - திபேத்தியர்களை கவுரவத்துடன் அங்கீகரிக்கிறார்கள். அதே நேரத்தில் திபேத்திய அகதிகளுக்கு வழங்கும் கவுரவத்தையோ, மரியாதையையோ, இந்தியா ஈழத் தமிழ் அகதிகளுக்கு வழங்குகிறதா என்றால் இல்லை.

‘நாடு கடந்த தமிழ் ஈழ அரசு’ உருவாகும் போது, ஒவ்வொரு நாட்டிலும் வாழும் தமிழர்கள் சர்வதேச தமிழர் சமூகம் என்ற அடையாளத்தைத் தழுவுகிறார்கள். ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ ஒன்று உருவாகும் போதே நாடு கடந்த தமிழினம் என்ற உருவாக்கமும் நிகழ்கிறது. இனத்தின் அடையாளத்தோடு எல்லைகளைக் கடந்து நிற்கும் இந்த இனத்தின் ஒருமைப்பாடு தமிழினத்தின் குரலுக்கு உலக அரங்கில் வலிமை சேர்க்கும்; வலிமையை சேர்க்க வைப்போம். அதற்கான உறுதி ஏற்போம்.

எல்லைகளைக் கடந்த - எல்லைகளைப் பற்றி கவலைப்படாத கலைஞர்கள், இது போல் சர்வதேச கலைஞர்களுக்கான குடியரசு ஒன்றை 1996 இல் ஜெர்மன் மூனிச் நகரில் அறிவித்தனர். ஒத்த சிந்தனை, ஒத்த உணர்வு என்ற அடித்தளத்தில் நாட்டின் எல்லைகளைப் புறந்தள்ளி உருவாக்கப்பட்ட இந்த நாடு கடந்த கலைஞர் குடியரசில் 4300 பேர் குடிமக்களாக பதிவு செய்துள்ளனர். இந்த அமைப்பு, சர்வதேச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதே போல் நாடுகளைக் கடந்த தொண்டு நிறுவனங்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் பலவும் செயல்படுகின்றன. அய்.நா.வின் பல்வேறு தளங்களில் இவைகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ என்பது இனத்தின் அடையாளத்தோடு - ‘தமிழ் ஈழம்’ என்ற தேசியத்தை, தேசிய இனத்துக்கான சுயநிர்ணய உரிமையின் கீழ் முன் வைக்கிறது.

யூதர்கள் மீது நமக்கு கருத்து வேறுபாடுகள் உண்டு; பாலத்தீனர்களின் தாயகத்தை அவர்கள் ஆக்கிரமித்து, இஸ்ரேல் நாட்டை உருவாக்கிக் கொண்டார்கள். ஆனாலும்கூட, உலக நாடுகளில் வாழ்ந்த யூதர்களின் ஒற்றுமையை நாம் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். உலகத்திலே நாடற்ற இனங்களாக இருந்தவர்கள் யூதர்களும், பார்ப்பனர்களும் தான். யூதர்கள் இஸ்ரேலை உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் பார்ப்பனர்களோ, இந்தியா என்ற தேசியத்தை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து, இந்தியாவில் திணிக்கப்பட்டுள்ள தேசிய இனத்தின் உரிமைகளை அதன் வழியாக நசுக்கிக் கொண்டு, அண்ணா சொன்னது போல் ‘விதைக்காது விளையும் கழனிகளாக’ உழைக்காது சுரண்டும் சக்திகளாக, பன்னாட்டு ஏகபோக சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு வாழ்கிறார்கள். அதே பார்ப்பனிய இந்திய தேசியம் தான் பார்ப்பனர்கள் ஆதிக்கம் இல்லாத ஈழத் தமிழர் தேசிய இனத்தின் வலிமையை, அதன் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்கியிருக்கிறது. தமிழ்நாட்டின் பார்ப்பனரல்லாத தமிழர்களுக்கு வலிமை சேர்த்து விடும் என்ற அச்சத்தில், ஈழத் தமிழினப் படுகொலைக்கு உதவிடும் சக்தியாக செயல்பட்டுள்ளார்கள். ஈழத் தமிழர்களும் இந்தப் படிப்பினையை நாடு கடந்த தமிழ் ஈழ அரசின் அரசியல் முன் நகர்த்தலில் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# ஏழுமலையானும் பாம்பும்

திருப்பதி எழுமலையானை தரிசிக்க நின்ற பக்தர்கள் வரிசையை நோக்கி நல்ல பாம்பு ஒன்று வரவே பக்தர்கள் ஓட்டமெடுத்தார்களாம்!

ஏழுமலையான் மீது பக்தர்களுக்கு நம்பிக்கை இல்லையா? நல்ல பாம்பு கடித்தால் - பகவானால்கூட காப்பாற்ற முடியாது என்று பக்தர்கள் நம்பு கிறார்களா?

ஏழுமலையான் பாம்பு உருவெடுத்து வந்ததாக ஒரு காலத்தில் துண்டறிக்கை அச்சடித்து, விநியோகித்த பக்தர்கள் இப்போது பாம்பு உருவில் பகவான் வந்ததாகக் கருதாமல், ஏன் பயந்து ஓட வேண்டும்?

பக்தர்களே, பதில் சொல்வீர்களா?

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்கும் கழகப் பொதுக் கூட்டங்கள்

ஜூலை 10 - கும்பகோணம்
11 - மயிலாடுதுறை
12 - திருச்சி
16 - தாராபுரம்
17 - பல்லடம்
18 - திருப்பூர்
21 - சென்னை

**குறிப்பு :** 9, 10 மற்றும் 16லிருந்து 21 ஆம் தேதி வரையுள்ள நிகழ்ச்சிகளில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொள்கிறார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857

## தமிழர்களே! ஒடுக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகர் குழுவினர் இந்தியிலும், தெலுங்கிலும் எழுச்சிப் பாடல் களைப் பாடினர். அதனைத் தொடர்ந்து இந்திய அரசின் ஐசிஎஸ்எஸ்ஆர் என்ற அமைப்பின் தலைவரும் பல்கலைக்கழகப் பேராசிரியருமான பேரா. ஜாவீத் அலம் கருத்துரையாற்றினார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த குடியுரிமைப் பாதுகாப்பு நடுவத்தின் தோழர் வழக்கறிஞர் கேசவன், ஏபிசிஎல்சி-யின் திருப்பதி தோழர் சைதன்யா ஆகியோர் உரையாற்றினர். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருத்தரங்கில் மாற்றுக் கருத்துக்களை வைத்தவர்களுக்கு உரிய பதிலைத் தரும் வகையில் உரையாற்றினார். சிவாஜி லிங்கம் உரையை பல்கலைக்கழகப் பேராசிரியர் மாதவப் பிரசாத் மொழி பெயர்த்துப் பேசினார்.

ஈழத்து இனப்படுகொலை குறித்து தெளிவான கண்டனங்களைப் பதிவு செய்த இக்கருத்தரங்கு சிறப்பாக நடைபெற தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் கோவை பன்னீர்செல்வம், பிச்சுமணி, ஐதராபாத் ஈஎப்எல் பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் இரவிச்சந்திரன், மருந்தியல் துறை ஆராய்ச்சியாளர் கண்ணதாசன், பூங்குழலி, மென்பொருள் வல்லுநர் ராம்குமார் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றினர். நிகழ்ச்சியில் செந்தில்நாதன் என்ற தோழர் வழக்கு நிதியாக 500 ரூபாய் கழகத் தலைவரிடம் வழங்கினார்.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து ஐதராபாத் நகருக்குச் சென்று ஆந்திர மாணவர்களைச் சந்தித்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்து பெரியார் திராவிடர் கழகத்துக்கு ஒரு அறிமுகத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் கோவை பன்னீர்செல்வம், பிச்சுமணி ஆகியோர்.


(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்க மறுத்த நாகாலாந்துக்கு இந்திய ஒன்றியத்தில் இணையுமாறு பகிரங்க அழைப்பையும் இந்தியா விடுத்தது. இந்நிலையில் 1951 ஆம் ஆண்டு மே 16 ஆம் நாளன்று நாகாலாந்து தேசிய சபையானது பொதுமக்களின் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்தியது. 99.9 விழுக்காடு நாகா தேசிய இனமக்கள், இறைமையுள்ள நாகா சுதந்திர அரசாங்கத்துக்காகவே வாக்களித்தனர். இந்த வாக்கெடுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கும் தெரிவிக்கப்பட்டது. மேலும் நாகாலாந்து தனிநாட்டு அரசாங்கத் துக்கான இராணுவம் உருவாக்கப்பட்டது. ஆனால் 1960களில் நாகாலாந்தை இந்தியா ஆக்கிரமித்து தனது மாநிலங்களில் ஒன்றாக்கிக் கொண்டது. நாகா லாந்தின் சுய நிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. 1993 ஆம் ஆண்டு ஐ.நா. சபையைப் போன்ற அங்கீகரிக்கப்படாத நாடுகளின் ஒன்றியத்தில் நாகா விடுதலை அமைப்பான நாகாலாந்து தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் இணைந்து கொண்டது. **(நிறைவு)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th July 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூலை 16, 2009 புரட்சி 8 முழக்கம் 27 விலை: ரூ.2.50

# ஜெர்மானியர்கள் ஹிட்லரை வெறுப்பது போல் காங்கிரசை நாம் வெறுக்க வேண்டும்


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறைகூவல்

*"ஈழம் இனி செய்ய வேண்டும்" என்ற தலைப்பில் ஜூலை 10 ஆம் தேதி குடந்தையிலும், 11 ஆம் தேதி மயிலாடுதுறையிலும் நடந்த கழகப் பொதுக் கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:*

ஈழத் தமிழர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை பரிசீலிப்பதற்கு முன்னால், இதுவரை, நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஈழம் என்ற சொல், கடந்த காலங்களில் ஒட்டு மொத்த இலங்கையைக் குறிக்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருந் தாலும், இப்போது அது தமிழர்களின் தமிழர் தாயகத்தைக் குறிப்பதற்கான சொல்லாகவே நாம் பயன்படுத்தி வருகிறோம்.

தமிழர்களுக்கு தனி மாநிலம், 'மாகாண சபை', 'மாநில சுயாட்சி' என்ற கோரிக்கைகளை முன் வைத்த தமிழர்கள், 1976 இல் வட்டுக்கோட்டையில் கூடிய மாநாட்டில் தமிழ் ஈழக் கோரிக்கையை வைத் தார்கள். மாநாட்டின் தலைவர் தமிழர் கூட்டணியின் தலைவர் செல்வநாயகம் தலைமை தாங்கினார். அதே மாநாட்டில் தமிழர் கூட்டணியின் பெயர் 'தமிழர் விடுதலை கூட்டணி' என்று மாற்றப்பட்டது.

இனி சிங்களர்களுடன் இணைந்து வாழ முடியாது என்று அறவழியில் போராடிய அரசியல் தலைவர்கள் எடுத்த முடிவு தனி ஈழம் என்பதாகும். பிறகு அதே கோரிக்கைக்காக விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திய போராட்டத்தைத் தொடங் கினார்கள். விடுதலைப்புலிகள் மட்டுமல்ல, ஈழத் துக்காக போராடிய ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, புளோட் போன்ற அமைப்புகளின் ஆதரவாளர் களாக இருந்து, பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் களாக தேர்வு பெற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப் பினர்கள் விடுதலைப்புலிகளை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு தமிழ் ஈழக் கோரிக்கையையே முன் வைத்தனர். இன்று துரோகக் குழுக்களாக செயல் பட்டுக் கொண்டிருக்கிற குழுவினரும் தமிழ் ஈழக் கோரிக்கையையே முன் வைத்தனர். அங்கே - அமைதிப்படை என்ற பெயரில் சென்ற இந்திய ராணுவம் தான் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற குழுவின் சார்பில் வரதராஜப் பெருமாள் என்பவரை வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக அமர வைத்தது. அந்த வரதராஜப் பெருமாளே



முதலமைச்சராக இருந்தபோது, தமிழ் ஈழத்தையே பிரகடனம் செய்தார். அமைதிப் படை வெளியேறிய போது இனி அமைதி யாக இருக்க முடியாது என்று இந்தியாவுக்கு ஓடி வந்த வரதராஜப் பெருமாள் தமிழ் ஈழத்தை அறிவித்து விட்டுத்தான் ஓடி வந்தார். அவர்கூட தமிழ் ஈழத்தை எதிர்க்கவில்லை. இப்போது அரசுக்கு ஆதரவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஆனந்த சங்கரி போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட தமிழ் ஈழத்தை எதிர்க்கவில்லை. ஆக, 1976 இல் வட்டுக் கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலத்தி லிருந்து அந்த நாட்டில் விடுதலைப்புலிகள் ஆனா லும் புலிகளை எதிர்ப்பவர்கள் ஆனாலும் பொது மக்களும் தமிழ் ஈழத்தை ஆதரிப்பவர்களாகவே இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த நாட்டில் வாழவே முடியாது என்று கருதி, புலம் பெயர்ந்து சென்ற தமிழர்கள்கூட அந்த நாடுகளில் தமிழ் ஈழத்துக்காகப் போராடிக் கொண் டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் அகதிகளாக வந்துள்ள ஈழத் தமிழர்கள் உரிமையற்றவர்களாக கேவலமானவர்களாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு போராட வேண்டும் என்ற உணர்வு இருக்கிறது. ஆனால் போராடுவதற்கான உரிமைகள் தமிழ்நாட்டில் இல்லை.

தமிழ்நாட்டில் 1938 இல் பெரியார் முன் வைத்த தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கத்தை நெஞ்சில் ஏந்திக் கொண்டிருக்கிற எங்களைப் போன்ற அமைப்புகளும் தமிழ்த் தேச தன்னுரிமை கோரும் தமிழ் தேசியவாதிகளும் ஈழத் தமிழர் விடுதலையை ஆதரித்தார்கள். இந்திய தேசியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற பொதுவுடைமை கட்சியினரும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவே போராடினார்கள். நமது 'அகில இந்திய' தி.மு.க.வின் தலைவர் கலைஞர்கூட ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக வாயள விலாது பேசியே வந்தார். தமிழக அரசு கூட்டிய காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அக்டோபர் 2 ஆம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, உண்ணா விரதப் போராட்டத்தை அனைத்துக் கட்சி ஆதரவு டன் நடத்தியதைத் தொடர்ந்து மயிலை மாங் கொல்லையில் தி.மு.க. கூட்டத்தைக் கூட்டிப் பேசிய கலைஞர்கூட ஈழத் தமிழர்களைப் பாதுகாக்காத இந்த அரசு இருக்கக்கூட தேவை இல்லை என்றார். பிறகு இந்த அரசு என்பது தமிழக அரசு என்று விளக்கம் கூறினார். ஒரு வேளை 'இந்த அரசு' என்பதை 'மத்திய அரசு' என்று தவறாக கருதி, தமது அரசு மீது 356' பாய்ந்து விடக் கூடாது என்று அவர் கருதியிருக்கக் கூடும்.

அதற்குப் பிறகு அக்.14 இல் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூடியது. மூன்று தீர்மானங்களை நிறை வேற்றினார்கள். ஈழத்தில் இனப்படுகொலை நிறுத்தப்பட வேண்டும். போரை நிறுத்த வேண்டும் என்பது முதல் தீர்மானம். இந்திய அரசு அந்தப் போருக்கு ஆயுதங்களை வழங்கக் கூடாது என்பது இரண்டாவது தீர்மானம். குறிப்பிட்ட காலத்துக்குள் போர் நிறுத்தப்படாவிட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும் என்பது. மூன்றாவது தீர்மானம் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உட்பட, அதில் பங்கேற்ற எல்லா கட்சிகளும், இத் தீர்மானங்களை ஆதரித்தன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளியே சென்று, பதவி விலகல் என்பது பற்றி மட்டும் பின்னால் கருத்து கூறுவதாக கூறியது. காங்கிரஸ் கட்சி, பதவி விலகல் பற்றி கூற முடியாது என்று கூறிவிட்டது. ஆனால், அதற்கு முன்னால் இருந்த இரண்டு தீர்மானங்களை எல்லா கட்சிகளுமே ஏற்றுக்கொண்டன. எந்தக் கட்சியும் மறுக்கவே இல்லை.

அந்தக் கூட்டத்துக்கு வராத ம.தி.மு.க.வும், ஜெய லலிதாவும் தீர்மானத்தை ஆதரித்தன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும் என்பதில் கருத்து வேறுபட்டாலும், போர் நிறுத்தப்பட வேண்டும் என்பதையும், இந்தியா ஆயுதங்களை வழங்கக் கூடாது என்பதையும், எந்தக் கட்சியும் இன்று வரை மறுக்கவே இல்லை. அதற்குப் பிறகு, மாணவர்கள், பொதுமக்கள், அரவாணிகள், பார்வையற்றவர்கள் என்று எல்லா பிரிவினரும் போராட்டம் நடத்தி, ஈழத் தமிழர்களுக்கு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினார்கள். உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மறியல், மனிதச் சங்கிலி என்று அனைத்து வடிவங்களிலும் போராட்டங்கள் நடந்தன. நமது சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட சபையில் தீர்மானங்களை மூன்று முறை நிறை வேற்றினார்கள். கடைசியாக 'அய்யகோ, தமிழினம் அழிகிறதே' என்று அழுதுகொண்டே கலைஞர் தீர்மானத்தைப் படித்தார். எல்லோரும் சேர்ந்து போய் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள். ஆக ஒட்டு மொத்த தமிழினமும் போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

இப்படிப்பட்ட கோரிக்கைக்கு என்ன விளைவு ஏற்பட்டது? நமது தலைவர்களும் இந்த அடிமைப் பட்ட தமிழினமும் முன் வைத்த கோரிக்கைக்கு மத்திய அரசிடமிருந்து நாம் என்ன பதிலைப் பெற்றோம்? கடைசியாக கலைஞர், மன்மோகன் சிங்கிடம் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியையாவது கொழும்புக்கு அனுப்புங்கள் என்றார். கோரிக்கைகளைக்கூட இலங்கை அரசிடம்

(2 ஆம் பக்கம்)

### தமிழீழ ஆதரவாளர்கள் மீதான வழக்கு நிதி

**முதல் தவணையாக**

| | |
|---|---|
| கோவை மாநகரம் | ரூ. 70,000 |
| உடுமலைப்பேட்டை | ரூ. 40,000 |
| ஆனைமலை முருகானந்தம் | ரூ. 10,000 |

தோழர்கள் வழக்கு நிதி திரட்டுதலை, காலம் கடத்தாது விரைந்து முடித்து கழகத் தலைவரிடம் அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்ளகிறோம்.

**– தலைமைக் கழகம்**

### தி.க.விலிருந்து விலகி கழகத்தில் இணைகிறார்கள்

திராவிடர் கழகத்திலிருந்து பல தோழர்கள் விலகி பெரியார் திராவிடர் கழகத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மற்றும் பொறுப்பாளர்கள் முன்னிலையில் இணைகிறார்கள். இந்த இணைப்பு நிகழ்ச்சி 21.7.2009 அன்று மாலை 4 மணிக்கு எம்.ஜி.ஆர். நகர் செல்வமணி திருமண மண்டபத்தில் நிகழ இருக்கிறது.

# தமிழகத்தின் ஒருமித்த கோரிக்கையை அலட்சியப்படுத்திய இந்திய அரசு, நமக்கான அரசா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்த வேண்டாம். விமானத்திலாவது ஒருமுறை கொழும்பு போய் வந்தால் போதும். அவ்வளவுதான். அதுதான் கடைசியாக பிரதமரிடம், கலைஞர் வைத்த கோரிக்கை.

அதுகூட பல மாதங்களாக நிறைவேற்றப்படவில்லை. இந்தக் கோரிக்கைக்குக்கூட அதாவது, பிரணாப் போய் வரவேண்டும் என்பதற்காக - சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தி.மு.க. பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழகம் வந்த மன்மோகன்சிங்குக்கு கறுப்புக்கொடி காட்டினோம். எங்கள் தோழர்கள் ஆயிரம் பேர் கைதானார்கள். அப்போதும் மன்மோகன் சிங் விரைவில் பிரணாப் கொழும்புக்கு செல்வார் என்றுதான் கூறினார். அப்புறம் பிரணாப் போய் வந்தார். போய் வந்தவர் சொன்னார், 48 மணி நேர போர் நிறுத்தம் வர இருக்கிறது என்று. உடனே, இது போர் நிறுத்தம் அல்ல; 48 மணி நேர கெடு. அதற்குள் எல்லோரும் போரில்லாப் பகுதிக்கு வந்து விட வேண்டும், அதற்கான கெடு என்று இலங்கை அரசு கூறியது.

ஆக, தமிழகத்தில் போராட்டங்கள், கோரிக்கைகள் எதற்கும் வளைந்து கொடுக்காத மத்திய அரசு, இவ்வளவு அழுத்தங்களுக்குப் பிறகும், ஒரே ஒரு முறை - பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்பி வைத்தது. அவ்வளவு தான். தமிழகத்தின் ஒட்டு மொத்தமான கோரிக்கைக்கு மத்திய அரசு எந்த விதமான அசைவைக் கூட தமிழர்களுக்கு சாதகமாகக் காட்டவில்லை.

ஆனால், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் வாழும் தேசிய இனங்கள், பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்கிறார்கள். மராட்டியத்தில் வாழும் மராட்டியர்கள், இந்தியில் பேசக் கூடாது என்ற கோரிக்கையை முன் வைக்கிறார்கள். மராட்டியில் பேசு என்கிறான். இந்தி பேசுவோரை மராட்டியத்தை விட்டு விரட்டுகிறான். சிறிய கோரிக்கைகளுக்கு எல்லாம் கூட தாக்குதல் நடத்துகிறான். ரயில்களை கொளுத்துகிறான். கன்னட செய்தி நேரத்தை தள்ளி வைத்து, சமஸ்கிருதத்தில் செய்தியை ஒளிபரப்பியதற்காக கலவரம் நடத்தினான்.

கருநாடகத்தில் உள்ள இந்திய தொலைக்காட்சி அலுவலகத்துக்குள்ளேயே நுழைந்து கன்னடர்கள் தாக்கினார்கள். ஆஸ்திரியாவில் சீக்கிய மதகுரு தாக்கப்பட்டதற்காக பஞ்சாபில் சீக்கியர் கலவரம் நடத்தி ரூ.7000 கோடி பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தார்கள். இதற்கெல்லாம் அம்மாநில அரசுகள் அவர்கள் மீதெல்லாம் வழக்குகள் போடவில்லை. தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யவில்லை. பாதுகாப்புப் பகுதியாக கருதப்படும் மத்திய அரசு தொலைக்காட்சி நிலையத்தில் புகுந்து தாக்கியவர்கள் மீது கூட அத்துமீறி நுழைந்ததாக மட்டும் வழக்கு தொடர்ந்தார்கள். அடுத்த நாளே அனைவரும் வெளியே வந்துவிட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் ஆதரித்துப் பேசினாலே தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்கிறது. ஆனால், உச்சநீதிமன்றம் தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது பொடா சட்டப்படியே குற்றமல்ல என்று பலமுறை கூறிவிட்டது. ஆனாலும், தி.மு.க. ஆட்சி வழக்கு போடுவதை நிறுத்தவே இல்லை. ஒவ்வொரு வழக்கிலும் உயர்நீதிமன்றம் இந்த அரசின் கன்னத்தில் ஓங்கி அறைகிறது. அதற்குப் பின்னாலும் தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் போடுகிறார்கள். சட்டம் ஒழுங்கு குலைந்து போனால் தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது. பொது ஒழுங்கு குலைந்து போனால்தான் பயன்படுத்த வேண்டும்.

சட்டம் ஒழுங்கு என்பது வேறு; பொது ஒழுங்கு என்பது வேறு. ஏற்கனவே பார்ப்பனர் பூணூலை அறுத்த 'குற்றத்துக்காக' இந்த ஆட்சி, எங்கள் தோழர்கள் பெரம்பலூர் லட்சுமணன், தாமோதரன் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்தியது. வேறு எந்த முன் வழக்கும் அவர்கள் மீது இல்லை. இந்த ஒரே வழக்குக்காக, அவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் போட்டார் கலைஞர்.

மத்திய அரசுக்கு பயந்து அவர்களைத் திருப்திப்படுத்தவே தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்துவதாக சமாதானம் கூறினார்கள். இப்போது மத்திய அரசே கூறிவிட்டது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தியது தவறு என்று. இராணுவ வாகன மறிப்பு வழக்கில் ம.தி.மு.க. மாணவரணி செயலாளர் சந்திரசேகர் மீது தி.மு.க. ஆட்சி போட்ட தேசிய பாதுகாப்பு சட்டத்தை தவறாக போடப்பட்டுள்ளதாகக் கூறி மத்திய அரசே ரத்து செய்து விட்டது. அதற்குப் பின்னரும்கூட எங்கள் தோழர் சூலூர் வீரமணி மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தை போடுகிறார்கள். ஷேக்ஸ்பியர் நாடகத் தில் வருவதைப்போல் 'அரசனை விட அரசனை மிஞ்சிய இராஜ விசுவாசியாக' இவர்கள் செயல் படுகிறார்கள்.

பிற மாநிலத்தில் பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தினால் கூட வழக்குப் போடுவது இல்லை. ஆனால், தி.மு.க. ஆட்சியில் பேசினாலே தேசிய பாதுகாப்பு சட்டம் என்றால், என்ன காரணம்? ஏன் விடுதலை இயக்கங்கள் மீது இவர்களுக்கு இவ்வளவு ஆத்திரம்?

தமிழர்களை எப்படி அடக்கினாலும் அதை ஏற்றுக் கொண்டு விடுவார்கள். எதிர்க்க மாட்டார்கள் என்பதுதான் காரணம். சீக்கியர்கள் கலவரம் நடத்தினால் பயப்படுகிறான்; மத்திய அரசு பணிகிறது. ஆனால், ஆறரை கோடி எண்ணிக்கையாக உள்ள ஒரு இனத்துக்கு ஏன் செவி சாய்க்க மறுக்கிறார்கள்? இந்த சிந்தனையோடுதான் ஈழத் தமிழர்களுக்குநாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சேர்த்து சிந்திக்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் - தங்கள் விடுதலைக்காகப் போராடுகிறார்கள். அதில் உறுதியாக இருக்கிறார்கள். எல்லாம் முடிந்து விட்டது என்று அறிவிக்கப்பட்ட இந்த நிலையிலும்கூட முள்வேலிக் கம்பிக்குள் அகதிகளாக அடைக்கப்பட்ட நிலையிலும்கூட அந்த அகதி முகாமுக்குள் இருந்த தமிழன், உயரமான கம்பத்தில் ஏறி புலிக் கொடியைக் கட்டிப் பறக்க விடுகிறான் (கைதட்டல்). அந்தத் துணிச்சல் அவனுக்கு இருக்கிறது. தன்னுடன் முகாமுக்குள் உள்ள பெண்ணிடம் ராணுவம் அத்து மீறி நடக்கும்போது அதை எதிர்த்துக் கேட்கும் துணிச்சல் அவனுக்கு இருக்கிறது. அப்படி எதிர்த்துக் கேட்ட இரண்டு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அத்துமீறி நடந்த ராணுவ அதிகாரியின் துப்பக்கியைப் பிடுங்கி அடித்திருக்கிறார்கள். அதற்காகவும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். முகாமில் அடைத்தாலும் விடுதலை உணர்வை அப்படியே காத்துக் கொண்டிருக்கிற உணர்வோடு அந்தத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதாக இங்கே நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அடக்குமுறைகளை நேரில் அறிந்திடாத புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்கள்கூட ஆயுதம் ஏந்திப் போராடத் தயாராக இருப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களுக்கு உதவுவதாக எதுவும் செய்யாத, எதுவுமே செய்யும் துணிவில்லாதவர்களாகிய நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்; என்ன செய்ய வேண்டும் என்று! என்ன செய்ய முடியும்? மீண்டும் ஆர்ப்பாட்டம்; ஊர்வலம்; இதைத்தான் செய்வோம். அதற்கு அரசு செவி சாய்க்குமா? பலன் ஏதும் தராமல் கோரிக்கைகளை முன் வைப்பது மட்டுமே பலன் சேர்க்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கலைஞர் வேண்டுமானால் கடிதம் எழுதுவார். பிற்காலத்தில் - வரலாற்றில் கடிதம் எழுதியதாக சொல்லிக் கொள்வதற்கு அது பயன்படும். அல்லது அஞ்சல் துறைக்கு 5 ரூபாய் லாபம் சேர்ப்பதற்கும் பயன்படும். வேறு எந்தப் பயனும் நிகழ்ந்து விடாது. பதிவு செய்யக்கூடிய போராட்டங்களாக நமது போராட்டங்கள் இருக்கக் கூடாது. சிறு போராட்டமாக இருந்தாலும் அதற்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டு நடத்துகிற போராட்டமாக நமது போரட்டம் இருக்க வேண்டும். அது அறவழிப்பட்ட போராட்டமானாலும் சரி, வேறு வகைப் போராட்டமானாலும் சரி, அரசு செவி சாய்க்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணைக்குச் சட்டப்படியான தீர்ப்பை நாம் பெற்ற பிறகும்கூட அதை கேரள மார்க்சிஸ்ட் ஆட்சி அமுல்படுத்த மறுக்கிறது. அதையும் நாம் பொறுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்; இது தானே நமது நிலை.

ஈழத் தமிழர் மீதான இனப் படுகொலைகளை இலங்கை அரசு விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக்கூட சீனாவும், கியுபாவும் தோற்கடிக்கின்றன. மாறாக, பயங்கரவாதத்தை ஒழித்து விட்டதாக நிதி உதவி கோரும் இலங்கை அரசு தீர்மானத்தை இந்தியாவும், சீனாவும் ஆதரிக்கின்றன. சாட்சிகளற்ற இனப்படுகொலையை அங்கே நடத்தி இருக்கிறார்கள். படுகொலைகளுக்கு சாட்சியாக இருந்த பத்திரிகையாளர் 'இந்து' பார்ப்பான் இராம் - மார்க்சியவாதி போல பேசிக் கொள்ளும் அந்த இராம் - தமிழர் அகதி முகாம்கள் மிகச் சிறப்பாக செயல்படுவதாக எழுதுகிறார். ஆனால் இலங்கை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சரத் நந்தன் சில்வா என்பவர் சுப்பிரமணியம் என்ற தமிழ் புகைப்படக்காரரை உடன் அழைத்துக்கொண்டு போய் அகதிகள் முகாமைப் பார்வையிட்டார். எல்லாவற்றையும் படம் பிடிக்கச் சொன்னார். அவர் தலைமை நீதிபதி என்பதால் புகைப்படம் எடுப்பதை தடுக்க முடியாது. அவர் அறிக்கை கொடுத்தார்.

"இலங்கை நாட்டின் குடிமகனாக இருப்பதை நான் கேவலமாக உணருகிறேன்". அகதி முகாம்களில் எல்லாவற்றுக்கும் கியூ நிற்கிறார்கள். கூடாரத்துக்குள் தலைநிமிர்ந்து நிற்க முடியாது. இடுப்பு ஒடிந்து விடும். 5 பேர் இருக்கவேண்டிய கூடாரத்தில் 30-க்கும் மேல் இருக்கிறார்கள் என்றெல்லாம் அந்த நாட்டின் தலைமை நீதிபதி அறிக்கை விடுத்தார்.

அந்நாட்டு தலைமை நீதிபதி கூறுவதையாவது உலக நாடுகள் காது கொடுத்து கேட்க வேண்டாமா? அதற்குப் பின்னால் அவர் பதவி ஓய்வு பெற்றார். இப்படிக் கூறுவதால், தனது உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து நேரிடலாம் என்று கூறிவிட்டே பேட்டி கொடுத்தார். எங்கள் நாட்டில் மனித உரிமைகளை மதிப்பதே இல்லை. எங்கள் நாட்டில் மனித உரிமைகளுக்கும், அறவழிகளுக்கும் யாரேனும் இருந்ததாக உதாரணம் கூறவேண்டுமானால் அது பிரபாகரன் ஒருவர் தான் என்று, அந்நாட்டின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, தனது பதவி ஓய்வு பெறும் நாளில் பேசும் போது கூறியிருக்கிறார். (கைதட்டல்) எத்தனையோ வழக்குகளில் தமிழர்களுக்கு எதிராகத் தீர்ப்பளித்ததை எல்லாம் பட்டியல் போட்டுக் காட்டிவிட்டு கூறியிருக்கிறார். புலிகள் கட்டுப் பாட்டுப் பகுதியில் கிரிமினல் குற்றவாளிகள் இருப்பதை பட்டியல் போட்டுக் காட்டி நீதிமன்றம் வழியாக கேட்ட போது புலிகள் அந்த கிரிமினல் குற்றவாளிகளை இலங்கை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால், அதேபோல் புலிகள் கேட்ட குற்றவாளிகளை ஒருமுறைகூட இலங்கை நீதிமன்றம் ஒப்படைத்தது இல்லை என்று, அந்த நிகழ்ச்சியில் நீதிபதி கூறியிருக்கிறார்.

3 ஆம் பக்கம்

## கோவை சிறையில் கழகத்தினர்

பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன், மாவட்ட செயலாளர் இலட்சுமணன், சூலூர் ப. வீரமணி ஆகியோர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உள்ளனர்.

காளப்பட்டி ஜெயப்பிரகாசு, அம்பேத்கர்; ஆவாரம்பாளையம் விக்னேஷ், செல்வகுமார், சண்முகசுந்தரம்; பொள்ளாச்சி பிரகாசு, கலங்கல் வேலு, கணபதி ஆனந்த், இரத்தினபுரி சீனிவாசன், பனைமரத்தூர் நேருதாசு, கணபதி சோமசுந்தரம், சித்தா புத்தர் தமிழரசன், பல்லடம் விஜயன், ஜெகதீசன், பிரகாஷ், சூரி (எ) ஆறுமுகம்; சூலூர் பன்னீர்செல்வம், அரசூர் அ.ப. சிவா, திருமலையம்பாளையம் பாலமுரளி, திருப்பூர் சண்முகம், தியாகு, இராவணன், குமார் ஆகிய தோழர்கள் இரண்டு மாதங்களுக்கு மேலாக சிறையில் உள்ளனர்.

## அகில இந்திய கட்சிகள் – மாநில உரிமைக்கு போராடுகின்றன

# மாநில உரிமை பேசிய தி.மு.க. ‘அகில இந்தியமாகி’ விட்டது

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாக தலைமை நீதிபதி கூறியிருக்கிறார்: நான் புலிகள் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குப் போன போது அவர்கள் மரியாதையுடன் நடத்தினார்கள். இவ்வளவு அறவழியைப் பின்பற்றுகிற விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், பிரபாகரனையும் நான் பாராட்டுகிறேன் என்று.(பலத்த கைதட்டல்)

சிங்கள தேசிய இனத்திலிருந்தே இந்தக் குரல் கேட்கிறது, எத்தனையோ சிங்கள பத்திரிகையாளர்கள் இலங்கையைக் கண்டித்து எழுதியதற்காக உயிருக்கு பாதுகாப்பு தேடி இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அவர்கள் கூட தமிழ்நாட்டில் இல்லை. காரணம், தமிழ்நாடு அரசை நம்பத் தயாராக இல்லை. அதைவிட டெல்லியில் இருக்கும் ஆட்சியை நம்பலாம் என்று டெல்லியில் இருக்கிறார்கள்.

ஒரு சிங்கள பத்திரிகையாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படி சிங்கள இனத்தில் கூட சிலர் தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாது உரிமைக்கு குரல் கொடுக்கும்போது நம்முடைய தொப்புள்கொடி உறவான தமிழர்களுக்கு நாம் என்ன செய்தோம்? இங்கிருந்து செய்யும் கடமையை நாம் முழுமையாக செய்திருக்கிறோமா என்று கேட்டுக் கொள்ள வேண்டிய தருணம் இது.

புலிகள் என்று பேசினாலே குற்றம் என்ற நிலை இங்கு இருந்தது. இனி அந்த நிலை வராது. காரணம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒழித்து விட்டதாக அவர்களே கூறுகிறார்கள். எனவே தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரிப்பது குற்றமாகிவிடுமே என்ற அச்சம் நீங்கி நீங்கள் செயல்படலாம். ஆபத்து இல்லாத இத்தகைய போராட்டங்களில் ஆயிரக் கணக்கில் நீங்கள் திரண்டு நமது ஆதரவுக் குரலை எழுப்பவேண்டும். நூற்றுக்கணக்கில் கூடினால் மட்டும் போதாது.

சிறைக்குப் போகும் போராட்டத்துக்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும். காலையில் போராட்டம் நடத்தி, மாலையில் விடுதலையாகும் போராட்டத்துக்கு நாம் பழகிவிட்டோம். எனவே 15 நாள் சிறையிலிருக்கும் போராட்டத்துக்காவாவது உணர்வுள்ள இளைஞர்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் தமிழன் என்று உணர வேண்டும்; நமக்கான அடையாளத்துடன் தனித்த அரசை அமைத்து, நமக்கான அதிகாரம் நம்மிடம் வேண்டும் என்ற ஆவல் நம்மிடம் இருக்க வேண்டும் . அந்த ஆவல் வலுப்பட்டால்தான் இயக்கமாகும்; அந்த எண்ணத்தையாவது நாம் எழுப்ப வேண் டாமா? அதைப் பற்றி சிந்திக்க வேண்டாமா, என்பது தான் முக்கியம். குரல் எழுப்புவது மட்டும் போதாது; இதைச் சொன்னால் பிரிவினைவாதம் என்கிறார்கள்? என்ன பிரிவினைவாதம்? அய்.நா.சபை தோன்றிய பிறகு எத்தனை நாடுகள் தோன்றியிருக்கின்றன? ஏதாவது ஒரு நாட்டிலிருந்து பிரிந்துதான், மற்றொரு நாடு உருவாகிறது. எந்த நாட்டிலும் பிரிவினை வாதம் என்று பேசவில்லை.

இங்கேதான் பிரிவினை வாதம் என்று கூச்சல் போடுகிறான். ஆனால், அய்.நா.மன்றம், ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனது உரிமையை நிர்ணயித்துக் கொள்ள உரிமை உண்டு என்று தெளிவாகக் கூறியிருக்கிறது. அய்.நா. மன்றத்தின் சிவில் அரசியல் உரிமை பிரகடனத்தின் முதல் விதி அது தான். தேசிய இனம் பற்றிய புதிய சிந்தனைகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. கனடா நாட்டின் அம்மையார் கரண்பார்க்கர். அவர் தொடர்ந்து தமிழ் ஈழத்துக்கான குரலை எழுப்பி வருகிறார். அதற்காக உலக நாடுகளில் உள்ள எல்லா வழக்கறிஞர்களையும் சந்தித்து, தனது குரலை பதிவு செய்து வருகிறார். அவர்களுக்கான தனித்த நிலம்; தனித்த அடையாளம்; தொடர்ந்த அரசுகள் பற்றி எல்லாம் அவர் சொல்கிறார். இவைகளைத் தவிர மேலும் இரண்டு புதிய கோட்பாடுகளை அவர் சொல்கிறார். அதுதான், இப்போது நம்மிடம் இல்லை. சுதந்திர வேட்கை (will to freedom) இருக்க வேண்டும் என்பது ஒன்று; அதை நிறைவேற்றிக் கொள்கிற ஆற்றல் (capability) இருக்கவேண்டும் என்பது மற்றொன்று. இந்த இரண்டு மட்டும் நமக்கு இல்லை. ஆனால், நிலம், தொடர்ந்து நடந்த தமிழர் அரசுகள், கலாச்சாரம் என்ற மூன்றும் நம்மிடம் இருக்கிறது. நாம் சுதந்திர வேட்கையை அதை நிறைவேற்றிக் கொள்கிற ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாததைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அல்லது அந்த நியாயமான உணர்ச்சிகள் நம்மிடம் இல்லை என்பதை விவாதத்திற்காகவாவது நாம் உட்படுத்த வேண்டும். அதைத்தான் தமிழர்களுக்கு உள்ள கடமையாக இப்போது நாம் உணருகிறோம்.

ஈழத் தமிழர்களுக்கான பிரச்சினை ஒரு நாளில் தீர்ந்துவிடப் போவது இல்லை. அது நீண்ட நாள் போராட்டம்; ஒன்றரை லட்சம் தமிழர்கள் ஒரு நாட்டில் இருந்தால் அதில் ஒரு லட்சம் பேர் ஊர்வலத்துக்கு வருகிறார்கள். ஆனால் ஆறரை கோடிப் பேராக இருக்கும் தமிழ்நாட்டில் 650 பேர்தான். அவ்வளவுதான் போராடியிருப்போம். எவ்வளவு வெட்கக்கேடான நிலை? எளிய போராட்டத்தைக்கூட நாம் நடத்த முன்வருவதில்லை. இப்படி எல்லாம் உள்ள ஒரு இனத்தை அல்லது மக்களை அரசும், அரசு அதிகாரங்களும் அடக்குகின்றன என்று சொன்னால், ஏன் அடக்க மாட்டார்கள்? அடக்கத்தான் செய்வார்கள். இந்த அடக்குமுறை அதிகமானால், நமக்கு ஒரு வேளை உணர்வு வரலாம். வீண் பெருமை பேசிக் கொண்டிருந்தால் போதாது. தமிழன் இமயத்தில் கொடி நாட்டினான் என்றெல்லாம் பேசுவதை விடுங்கள். முதலில் நமது நாட்டில் கொடியை உயர்த்த வேண்டும். நம் நாட்டில் நம் கொடியைப் பறப்பதற்கான சுதந்திரத்தைப் பெறுவதற்கு அதற்கான ஆற்றலை நாம் வளர்த்துக் கொள்வோம். வேட்கையை வளர்ப்போம். ஆற்றலை வளர்த்துக் கொள்ள முயற்சிப்போம். இதைத்தான் ஈழத் தமிழர்களுக்காக இந்தியத் தமிழர்கள் எடுக்க வேண்டிய முயற்சியாக நாங்கள் கருதுகிறோம். இதைத் தொடர்ந்து செய்யலாம். அதுவரை நமது நாட்டில் இருக்கிற, நமக்கு எதிரானவர்களை என்ன செய்யலாம்? முதலாவதாக எதிரானவர்களைப் புறக்கணிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; வெறுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரியாருடைய உழைப்பு, ஒரு சமூகச் சூழலை உருவாக்கி வைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா இருக்கிறார் என்றால், ஏறத்தாழ வேறு பெயரில் இருக்கிற பா.ஜ.க. அவர், நரேந்திர மோடிப் பதவி ஏற்றால், பதவி ஏற்புக்குப் போவார். சென்னைக்கு நரேந்திர மோடி வந்தால், வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுப்பார். ஆனால், அக்கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ள மாட்டார். ஏனென்றால், இந்த மண்ணின் சூழல் பா.ஜ.க.வின் கூட்டணியைப் புறக்கணிக்கும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். எனவே அந்த உள்ளம் இருந்தாலும் உணர்வு இருந்தாலும், அவர்களோடு கூட்டுச் சேர அவர் துணியவில்லை. அதே போல, தீண்டத்தகாத கட்சியாக புறக்கணிக்க, வெறுக்கத்தக்க கட்சியாக காங்கிரஸ் கட்சியை நாம் கருத வேண்டும். அந்த எண்ணத்தை மற்றவர்களுக்கு ஊட்ட வேண்டும். (கைதட்டல்) தொடர்ந்து, நமக்கு துரோகமே செய்து வந்திருக்கிற கட்சி, காங்கிரஸ். நமது உரிமைகளைப் பறித்தவன் யார்? ஈழத்தில் தமிழ்மொழி உரிமையை சிங்களன் பறித்தான் என்றால் - இங்கே நமது மொழி உரிமையைப் பறித்தது யார்?

கடந்த நாடாளுமன்ற இறுதிக் கூட்டத்திலேகூட 47 உயர்கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டைப் பறித்து, மாநிலங்களவையில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள். மக்களவையில் நிறைவேற்றுவதற்கு முன்பு, தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டது. ஒருவேளை, நாடாளுமன்றத்தில் இனி நிறைவேற்றப்படலாம். தமிழர்களை மட்டுமல்ல, சமுதாயத்தில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்குக்கூட, அவர்கள் துடிக்கிறார்கள். உச்சநீதிமன்றமும் நடுவர் மன்றமும் நமது மாநில உரிமைக்காக காவிரி நீர் உரிமைக்கு வழங்கிய தீர்ப்பைக் கூட அமுல்படுத்த மறுக்கிறார்கள். ஆனால், நாம் அவர்களோடு கூட்டணி சேர்ந்து கொண்டு நமது கூட்டணியில் இருக்கிறார்களே, எப்படி கண்டிப்பது என்று, கூட்டணி தர்மம் பேசி, காங்கிரஸ் கட்சியை நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அய்ரோப்பிய நாடுகளில், மனித உரிமையை மிகவும் மதிக்கிறார்கள். அப்படிப்பட்ட நாடுகளில்கூட ஜெர்மனியில் ஹிட்லரைப் பாராட்டிப் பேசினால் குற்றம். இன்று வரை, அதை குற்றமாக வரையறுத்து வைத்துள்ளனர்.

அதுபோல் - தமிழ்நாட்டில் காங்கிரசை ஆதரிப்பது குற்றம் என்ற மனப்பான்மை நமக்கு வரவேண்டும். அதை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும். இப்போது காங்கிரஸ்காரனைவிட நமது ‘அகில இந்திய’ திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமாக ஒருமைப்பாடு பேசுகிறது. கலைஞர் எல்லாம், இப்போது நமக்கு மட்டுமல்ல, ஈழத் தமிழர்களுக்கு கூட அறிவுரை கூறுகிறார். தனி ஈழம் எல்லாம் வேண்டாம். அதை எல்லாம் கைவிடுங்கள் என்று அறிவுரை கூறுகிறார். ஏனென்றால், தி.மு.க.- அந்தக் கொள்கை எல்லாம் கைவிட்டு விட்டது அல்லவா? எனவே எல்லோருமே கொள்கைகளை கைவிட்டுவிட்டால், மக்கள் கொள்கைகளைப் பற்றி கேள்வியே கேட்க மாட்டார்கள் அல்லவா?

ஆனால், அறிவு மிக்க இளைஞர்கள் எழுச்சி பெறத் தொடங்கிவிட்டார்கள். முத்துக்குமார் தனது மரண சாசனத்தில் அரசியல் தலைவர்களையெல்லாம் நம்பாதீர்கள் என்று எழுதி வைத்துவிட்டுப் போனார். எனவே பல இளைஞர்கள் அரசியல் கட்சிகளிலிருந்து விலகி முத்துக்குமார் பெயரில் இயக்கங்களைத் தொடங்கி வருகிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி - முத்துக்குமார் மன்றம் தொடங்கியிருப்பதாக திருப்பரங்குன்றத்தில் தோழர்கள் என்னிடம் கூறினார்கள். கட்சிக் கட்டுப்பாடு என்று சொல்லிக் கொண்டு நமது உணர்வுகளைக்கூட வெளிப்படுத்த முடியாத மடையர்களாக இனிவரும் இளைஞர் சமூகம் இருக்காது; இருக்கவும் கூடாது. கட்சியில் இருப்பதற்காகவே கட்சியின் கொள்கை துரோகங்களுக்கு துணை போய்க் கொண்டு, உணர்வுகளையேகூட வெளிப்படுத்தாது இருக்க வேண்டுமா?

இந்த மாநிலக் கட்சிகளுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இவர்கள் மசோதா நிறைவேற்றினாலும் கூட, டெல்லியில் உள்ளவர்கள் ஒப்புதலைத்தான் பெற வேண்டும். பதவிக்குப் போகிறவரை கொள்கையை நிறைவேற்றுவதற்காக ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்பார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கெள்கையைக் கைவிடுகிறோம் என்பார்கள். இதைத் தானே பார்த்துக் கொண்டிருக்கிறோம். **எனவே இந்தக் கட்சிகளை வழிநடத்துகிற சக்திகளாக நாம் மாறவேண்டும்.**

அகில இந்தியா பேசுகிற கட்சிகள்கூட வேறு மாநிலத்தில் எப்படி செயல்படுகிறான்? கருநாடகத்தில் அகில இந்தியாவைப் பேசும் கட்சிகள் தான் இருக்கின்றன. ஆனால், அவன் தனது மாநிலத்திற்காகத்தான் குரல் கொடுக்கிறான். கருநாடகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கட்சியின் பெயரில் அகில இந்தியா என்று இருக்கும். ஆனால் அவன் தனது மாநிலத்துக்காகத்தான் குரல் கொடுக்கிறான். தி.மு.க.வின் பெயரில் அகில இந்தியா இல்லை. ஆனால் அக்கட்சியின் சிந்தனை அகில இந்தியாவாகி விட்டது. இதுமட்டுமல்ல, சர்வ தேசியம் பேசுகிற கியுபா போன்ற நாடுகள் கதை என்ன? குறைந்த பட்சம், தமிழர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு கண்டனமாவது தெரிவித்திருக்கக் கூடாதா?

வியட்நாமில் மைலாய் எனும் கிராமத்தில் 148 பேரை குண்டுவீசி, அமெரிக்க படை கொன்றது.

(4 ஆம் பக்கம்)

### பால் வாங்க வந்தவரையும் விடாத காவல்துறை

**கோவை நீலாம்பூரில் இராணுவ வாகனங்களை எதிர்த்து நடந்த போராட்டத்தின் போது, போராட்டத்துக்கு தொடர்பே இல்லாத நெற்றியில் விபூதி பட்டையுடன் காட்சியளிக்கக்கூடிய ஒருவர், பால் வாங்குவதற்கு வந்தார். பால் வாங்க வந்த அவரையும் நமது காவல்துறை விடவில்லை. உன் பெயரென்ன என்று கேட்டிருக்கிறார்கள். பிரபாகரன் என்று கூறியிருக்கிறார். ஏறு வண்டியில் என்று கூறி விட்டார்கள். 60 நாட்களாக அவர் கோவை சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.**

**– கொளத்தூர் மணி உரையிலிருந்து**

# அறிவுரை கழகத்தினர் முன் பெரம்பலூர் இலட்சுமணன்

தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்ட பெரம்பலூர் மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் இலட்சுமணன் ஜூலை 9 ஆம் தேதி அன்று பகல் 2 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திலுள்ள அறிவுரைக் குழுமத்தின் முன் நேர் நிறுத்தப்பட்டார். தன் மீதான வழக்கு முறைகேடாகப் போடப்பட்டுள்ளதை நீதிபதிகளிடம் சுட்டிக் காட்டிய இலட்சுமணன், குடியரசுத் தலைவரே இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் சந்திரசேகர் மீது போட்டுள்ள தேசிய பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்துள்ளதை சுட்டிக்காட்டினார், அறிவுரைக் குழுமம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இம்முறையாவது நீதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கழகத் தோழர் கேசவன், இலட்சுமணன் சார்பில் நீதிபதிகளிடம் வழக்கை ரத்து செய்யக் கோரி பேசினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உமாபதி, தபசி. குமரன், அன்பு தனசேகர் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர்.

# சென்னையில் வழக்கு நிதியளிப்பு விழா பொதுக் கூட்டம்

சென்னையில் பெரியார் திராவிடர் கழக சார்பில் 21.7.09 அன்று மாலை வழக்கறிஞர் குமாரதேவன் தலைமையில் மாபெரும் கழகப் பொதுக் கூட்டம் எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் அருகில் நடைபெற விருக்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைசாமி, இயக்குனர் சீமான், பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர்கள் இளங்கோவன், அமர்நாத் ஆகியோர் உரையாற்றுகிறார்கள். சென்னை மாவட்ட கழக சார்பில் வழக்கு நிதி வழங்கப்படுகிறது. தேனிசை செல்லப்பா இசை நிகழ்ச்சியும் உண்டு. தோழர்களே திரண்டு வாரீர் என்று சென்னை மாவட்ட கழகம் அழைக்கிறது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு அமெரிக்க நாட்டிலேயே கொந்தளிப்பு எழுந்தது. அப்பாவி மக்களைக் கொல்லாதே என்று வீதிக்கு வந்து போராடினார்கள். வியட்நாமிலிருந்து அமெரிக்கப்படை விலகுவதற்கு அதுவும் ஒரு காரணம். அந்த ஆத்திரம் நமக்கு வந்ததா? நமது நாட்டுப் படை அமைதிப்படை என்ற பெயரில் இங்கிருந்து போய் கொன்றதே. 64000 பேரைக் கொன்றதாக, கணக்கு 70000 பேர் வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள். 148 பேரைக் கொன்றதற்காக ஒரு ஆதிக்க நாட்டுக்காரன் நாட்டில் அவன் நாட்டிலேயே மக்கள் போராடியபோது நாம் 70000 மக்களைக் கொன்றதற்காக என்ன போராட்டத்தை நடத்தினோம்? அந்த அமைதிப் படையில் தளபதிகளாக இருந்தவர்கள் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். அசோக் மேத்தா, ஹர்கரந்த்சிங் போன்றவர்கள் எல்லாம் தாங்கள் சொன்னதை இந்தியா கேட்கவில்லை என்று பேசுகிறார்கள். புத்தகங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். திலீபன் எதற்காக உண்ணாவிரதம் இருந்தார்?

இப்போது ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் என்று பேசுகிறார்களே. அந்த ஒப்பந்தத்தை முறையாக அமுல்படுத்து என்று வலியுறுத்திதான், திலீபன் உண்ணாவிரதம் இருந்தான். இப்போது அந்த ஒப்பந்தத்தை ஆதரித்துப் பேசும் காங்கிரசார், அப்போது, திலீபன் உண்ணாவிரதத்தை ஆதரித்து அல்லவா இருந்திருக்க வேண்டும்? திலீபனை போய் பார்ப்பதற்குக்கூட இந்திய அரசு அங்குள்ள இந்திய அதிகாரிகளுக்கு அனுமதி அளிக்கவில்லை. அதற்கு உத்தரவிடவில்லை.

இங்கேயும், நமது நாட்டிலும், என்ன நிலைமை? மக்கள் ரேஷன் கிடைக்கவில்லை, தண்ணீர் லாரி வரவில்லை என்று போராடினால், அதில் தொடர்புடைய அதிகாரிகளா வருகிறார்கள்? காவல்துறையைத்தான் எந்தப் போராட்டமானாலும் கைது செய்வதற்கு அனுப்புகிறான். தொடர்புடைய அதிகாரிகள் வருவது இல்லை. குடிமை உரிமைகளுக்கான போராட்டங்கள் நடக்கும்போது அதிகாரிகளோ, அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ வருவதில்லை. எல்லாவற்றுக்கும் காவல்துறைதான் வரும். மக்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும், அதை காவல்துறை தான் தீர்த்து வைக்கும் என்று அரசு செயல்படுகிறது. இதை நாம் எதிர்க்காதவரை, அரசு இதைத் தானே செய்யும்? **இந்தப் போராட்ட உணர்வுகளை நாம் வளர்த்துக் கொள்ளாமல், வெறும் ரசிக மனப்பான்மையோடு விடுதலைப் புலிகளைப் பாராட்டிக் கொண்டு குதிரைப் போட்டிக்கு பந்தயம் கட்டுகிறவனைப் போல் நாம் நமது வேட்கையை வளர்த்துக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.**

ஈழத் தமிழினம் போராட்டத்துக்கு தயாராகிவிட்ட இனம். தங்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற இனம். அந்தப் போராட்ட உணர்வு இன்றும் குன்றாமல் அவர்களிடம் இருக்கிறது. எனவே அவர்கள் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவார்கள். தங்களுக்கான உரிமையுள்ள ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டு விடுவார்கள்.

ஆனால், தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாம் என்ன செய்ய போகிறோம்? நமது குரலுக்கு செவி சாய்க்காத அரசோடு நாம் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா அல்லது இணைந்திருக்க முடியுமா என்பதுபற்றி சிந்திக்கக்கூடத் தயங்கினோம் என்றால் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்பதை மட்டுமே, ஈழத் தமிழர்களுக்கு எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்விக்கான விடையாய் உங்களிடம் விட்டு விடைபெற விரும்புகிறேன்.

# தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழர் ஆதரவாளர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ஏவிய அரசைக் கண்டித்து திருச்சியில் 26.6.2009 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிந்தாமணி அண்ணாசிலை அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கழக மாவட்ட தலைவர் செ.த.ராஜேந்திரன் தலைமை வகித்தார். ஸ்ரீரங்கம் பகுதி தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து முன்னிலை வகித்தார்.




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் த.இந்திரஜித், மாநகரச் செயலாளர் க.சுரேஷ், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் அ.மலர்மன்னன், பா.ம.க. மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் இரா.தாமோதரன், திருச்சி கலை, தமிழர் தேசிய இயக்க மாவட்டத் தலைவர் புலிவலம் சோழராஜன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க அமைப்பாளர் நிலவழகன், மாணவர் முன்னேற்றச் சங்கத் தலைவர் என்.எஸ். திலீப் உள்ளிட்டோர் பேசினர்.

### புதுச்சேரி

புதுச்சேரி அண்ணா சிலை அருகில் ஈழத் தமிழர்களை படுகொலை செய்ய இந்திய அரசால் இலங்கை சிங்கள இராணுவத்திற்கு வழங்குவதற்காக




ஆயுதங்களை ஏற்றிச் சென்ற லாரிகளை கோவையில் பொது மக்களோடு இணைந்து தடுத்து நிறுத்தி போராடியவர்கள் மீதும், பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன் மற்றும் தோழர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்த தமிழக அரசின், தமிழர் விரோத போக்கைக் கண்டித்தும் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில செயலாளர் விசயசங்கர் தலைமையில், மாநில அமைப்பாளர் இர.தந்தை பிரியன், வீராசாமி துணைத் தலைவர் முன்னிலையிலும், கண்டன முழக்கங்களுடன் மாநில தலைவர் லோகு. அய்யப்பன் கண்டன உரையாற்றினார். மற்றும் செம்படுக்கை நன்னீரகம், பார்த்திபன், ம.தி.மு.க. செல்வராசு, சந்திரசேகரன், கழகத் தோழர்கள் இரவிச்சந்திரன், இராசேந்திரன், சுரேசு தீனா, சுப்புராயன், சார்லஸ், எத்திராசு, பரமகுரு, செயக்குமார், வீரகுமார், ராசா, சங்கர், தாஸ், வினோத், அன்பு எழிலன், ஆனந்தன், முருகன், முகிலன், கனகராஜ், ஜிக்கந்தர், குமார் மற்றும் எண்ணற்ற தோழர்கள் கலந்து கொண்டனர்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857

**தமிழர்களே! அடக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th July 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூலை 23, 2009 புரட்சி 8 முழக்கம் 28 விலை: ரூ.2.50


### ஏராளமான ஊர்களில் – தி.க.விலிருந்து விலகி

# கழகத்தில் தோழர்கள் இணைந்தனர்

## தி.க. தலைமை அதிர்ச்சி



கோவையில் இராணுவ வாகனங்களை மறித்ததாக - தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள கழகத்தினரின் மீதான வழக்குகளுக்கு நிதி வழங்கும் விழாவும் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி, பெரியார் திராவிடர் கழகத்தில் தோழர்கள் இணைந்த நிகழ்வும் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் எழுச்சியுடன் நடைபெற்றது.

மாநாடு போல் பொதுக் கூட்டத்துக்கு பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்திருந்தனர். வழக்கறிஞர் குமாரதேவன் தலைமையில் நடந்த கூட்டத்தில் வழக்கறிஞர்கள் அமர்நாத், அரியலூர் பகுத்தறிவாளன், விடுதலை இராசேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் (பா.ம.க.), இயக்குனர் சீமான், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் பேசினர். முன்னதாக தேனிசை செல்லப்பா குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக 4.30 மணியளவில் எம்.ஜி.ஆர். நகர் செல்வ மஹால் மண்டபத்தில் நடந்த இணைப்பு நிகழ்ச்சியில், அரியலூர் மாவட்டத்திலிருந்து 26 தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்.

இவர்களில் வழக்கறிஞர் பகுத்தறிவாளன் தி.க.வில் இருந்தவர். மற்றவர்கள் புதிதாக கழகத்தில் இணைந்தவர்கள்.

பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து 4 தோழர்களும், வடசென்னையிலிருந்து 8 தோழர்களும், தர்மபுரி மாவட்டத்திலிருந்து இரண்டு தோழர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து 10 தோழர்களும், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து 7 தோழர்களும், திராவிடர்கழகத்திலிருந்து விலகி பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர 18 தோழர்கள் புதிதாக கழகத்தில் இணைந்தனர்.

தோழர்களை வரவேற்றுப் பாராட்டி, வழக்கறிஞர் குமாரதேவன், வழக்கறிஞர் துரைசாமி, விடுதலை இராசேந்திரன், கொளத்தூர் மணி பேசினர்.

பெரியார் திராவிடர் கழகம் மட்டும் தான், பெரியார் கொள்கையைப் பரப்பிடவும், போராட்டக் குணம் கொண்டதாகவும் இருப்பதால் இந்தக் கழகத்தில் இணைவதாக இணைந்த தோழர்கள் தெரிவித்தனர்.

எழுச்சியுடன் நடந்த பொதுக் கூட்ட மேடையில் இணைந்த தோழர்கள் அனைவருக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆடைகள் போர்த்தி பாராட்டினார்.

(இணைந்த தோழர்களின் பெயர், முகவரி, கூட்டச் செய்திகள் பற்றிய முழுமையான செய்தி அடுத்த இதழில்)

**எம்.ஜி.ஆர்.நகரில் கூட்டத்தினிடையே வழக்கு நிதிக்காக துண்டேந்திச் சென்ற தோழர்களிடம் கூட்டத்தினர் அளித்த வழக்கு நிதி ரூ.29,036/-**

குடந்தை, மயிலாடுதுறை, டிதிருப்பரங்குன்றம், திருமானூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலிருந்தும் தோழர்கள் தி.க.விலிருந்து விலகி கழகத்தில் இணைந்துள்ள செய்திகள் அடுத்த இதழில்.

## தமிழர் தன்மைக்கு பொருந்தாது!

திரு.வி.க. முதலியாரிடத்திலும் மற்ற பண்டிதர்கள் இடத்திலும் எனக்கு மதிப்பு உண்டு. மரியாதையும் உண்டு. ஆனால் தமிழர் தொண்டுக்கு இவர்கள் முறையை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஆனாலும் அவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தாலேயே அவர்களைச் சிறிதும் விட்டுக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன். நம்மிலும் பெரிய பண்டிதர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு இவர்களைத்தான் பயன்படுத்திக் கொண்டு வருகிறேன். இவர்களது எழுத்தும் பேச்சும் சைவப் பண்டிதர் தன்மைக்கு மிகப் பொருத்தமாகவும் தகுதியாகவும் இருக்கலாம். தமிழர் தன்மைக்கு அவை பொருத்தமாகாது என்பதே எனது கருத்து.

– **'குடிஅரசு'** 24.11.1940

### 'குடிஅரசு' வழக்கு

## தடையை நீடிக்க உயர்நீதிமன்றம் மறுப்பு

பெரியார் எழுத்துப் பேச்சுகளைத் தொகுத்து பெரியார் திராவிடர் கழகம் 'குடிஅரசு' தொகுப்புகளை வெளியிடக் கூடாது என்று தி.க. தலைவர் கி.வீரமணி தொடர்ந்துள்ள வழக்கு ஜூலை 20 ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி சந்துரு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை எடுத்த உடனே நீதிபதி தி.க. வழக்கறிஞர் வீரசேகரனைப் பார்த்து "உங்களுக்கு பரந்த சிந்தனையே (Broad thinking) இல்லையா?" என்று கேட்டார்.

வழக்கறிஞர் வீரசேகரன் - "பாரதியின் கவிதைகளில் திரிபுகள் வந்ததுபோல், பெரியார் கருத்துகளும் திரிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்கே - வழக்கு தொடர்ந்துள்ளோம்" என்றார்.

மீண்டும் நீதிபதி, "நான் கேட்ட கேள்விக்கு, பதில் இல்லையே! உங்களுக்கு பரந்த சிந்தனை இல்லையா?" என்று கேட்டார்.

'குடிஅரசு' வெளியீட்டுக்கு, நீதிமன்றம் விதித்த தடையைத் தொடர வேண்டும் என்று, தி.க. வழக்கறிஞர் கேட்டார். "தடையின் கெடு முடிந்துவிட்டது. இப்போது தடைவிதிக்க முடியாது; வழக்கு விசாரணையை வரும் 22 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்படும்; முதல் வழக்காக இதை விசாரிப்பேன்" என்று நீதிபதி கூறினார்.

கழக சார்பில் வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி, இளங்கோ ஆஜரானார்கள்.

**தலையங்கம்**

## கட்டாயக் கல்வி

6-லிருந்து 14 வயதுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி உரிமையை உறுதி செய்யும் மசோதா மாநிலங்களவையில் கடந்த 20 ஆம் தேதி நிறைவேறியுள்ளது. இதன் மூலம் கல்வி குழந்தைகளின் அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, கட்டாயக் கல்வி பெறுவதற்கான வயதை 6-லிருந்து மூன்றாகக் குறைக்க வேண்டும் என்றும், நலிவுற்ற பிரிவினருக்காக 25 சதவீத ஒதுக்கீட்டில், சமூக கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என்ற சொற்றொடரையும் இணைக்க வேண்டும் என்றும் மிகச் சரியாகவே சுட்டிக்காட்டியுள்ளார். இளம் உள்ளங்களில் இயற்கையான ஆர்வத்தைத் தூண்டி அவர்களை ஊக்குவிக்க கல்வி இருக்க வேண்டுமே தவிர, வகுப்பறைக்குள்ளும், நிர்ணயிக்கப்பட்ட பாடத் திட்டங்களுக்குள்ளும் அவர்களை அடைத்து வைப்பதாகவோ மூன்று மணி நேர தேர்வுச் சோதனைகளை வைத்து அவர்களை மதிப்பீடு செய்வதாகவோ இருக்கக் கூடாது என்றும், கனிமொழி சுட்டிக்காட்டியிருப்பதும் சரியான படப்பிடிப்பாகும்.

பாடத் திட்டங்களுக்குள் குழந்தைகளை புதைப்பதுகூட பார்ப்பனிய மரபின் தொடர்ச்சிதான்.

வேதங்களை மனப்பாடம் செய்வதே கல்வி என்றிருந்த பார்ப்பனிய குருகுலக் கல்வியை மாற்றியமைத்த பெருமை - மெக்காலேவுக்கு உண்டு. அவரால் முறைசார் கல்வி முறையில் அனைவருக்குமான கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டாலும்கூட வருணாசிரமக் கல்வியின் தாக்கத்தி லிருந்து விடுபடாதவாறு பார்ப்பனர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டார்கள். ராஜகோபாலாச்சாரி, சென்னை மாகாண முதல்வராக இருந்தபோது, சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கை அமுல்படுத்தினார். அதனால் அரசுக்கு ஏற்பட்ட பொருள் இழப்பை ஈடு செய்ய அவர் ஆரம்பக் கல்வி நிறுவனங்களைத் தான் மூடினார். தகப்பன் தொழிலை பிள்ளைகள் கற்றுக் கொள்ளும் வர்ணாசிரமக் கல்விச் சட்டத்தையும் கொண்டு வந்தார். மெக்காலே கல்வித் திட்டத்தையும், பார்ப்பனியமாக்கிடும் நோக்கோடு இவைகள் நடந்தபோது அன்று பெரியார் இயக்கம் போராடி, இந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சமூக நீதிக்கான கல்விச் சூழலை தமிழகத்தில் வளர்த்தெடுத்தது. எந்த காங்கிரஸ் ஆட்சி அன்று கல்வியை அனைவருக்கும் பொதுவாக்க விடாது தடுத்ததோ, அதே காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி, இப்போது கல்வியை அடிப்படை உரிமையாக்கி சட்டம் கொண்டு வரும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது - வரலாற்றின் போக்கில் நிகழ்ந்துள்ள தலைகீழ் மாற்றம் தான்.

ஆனாலும்,இந்த சட்டங்களை செயல்படுத்தக் கூடிய அதிகார அமைப்புகள் இந்த சமூகநீதிக்கு எதிரான பார்ப்பனிய அதிகார அமைப்புகளிடமே தங்கியுள்ளதால், இந்த சீர்திருத்த சட்டங்கள் காகிதங்களோடு நின்று விடுகின்றன.

இத்தகைய சட்டங்களின் முழுமையான உரிமைகள், மத்திய அரசுகளிடம் போய் விடாமல், மாநில அரசுகளின் முழுமையான உரிமைகளுக்குக் கீழ் வரவேண்டும். சமூகநீதி உணர்வு கொண்ட நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்படும் போது தான், சட்டத்தின் நோக்கம் நிறைவேறும். மாநில உரிமைப் பட்டியலில் இருந்த கல்வியை 1976 அவசர நிலை காலத்தில் காங்கிரஸ் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு போய்விட்டது. மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு அதைக் கொண்டு வரவேண்டும். மாநில உரிமை பேசுகிற கட்சிகள்கூட இதில் வாய் திறக்காமல் இருப்பதுதான் வியப்பைத் தருகிறது.

ஆனாலும், கல்வி என்பது அனைத்து குழந்தைகளுக்கும் அடிப்படை உரிமை என்ற கோட்பாடு, ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசி, பாரம்பரிய குலத் தொழிலில் குழந்தைகளைக் கொண்டு போய் தள்ளிய பார்ப்பனியத்துக்கு விழுந்த மரண அடி என்ற முறையில் வரவேற்க வேண்டும். இதில் சமூகப் பார்வையோடு கருத்துகளை முன் வைத்த தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியைப் பாராட்ட வேண்டும்.

# சமூகநீதி: அமர்த்தியாசென் எழுப்பும் கேள்வி

**நமது பார்வையில்**

பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியாசென், முற்போக்கு சிந்தனை கொண்டவர். சமுக நீதி பற்றி ஆழமான பார்வை அவருக்கு உண்டு. பார்ப்பனக் கோட்டையான சென்னை அய்.அய்.டி. விழாவில் பேசும்போது, இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக பேசி, பார்ப்பன வட்டாரத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

கடந்த வாரம் லண்டனில் இலக்கிய விழா நிகழ்ச்சி ஒன்றில் அவர், எது சரியான நீதி என்பது குறித்து, சில ஆழமான சிந்தனைகளை முன் வைத்துள்ளார். அண்மையில் அவர் வெளியிட்ட நூலில், இது பற்றிய மாற்று சிந்தனையை விவாதப்படுத்தியுள்ளார். நீதியை வழங்குவதற்கு கடந்த காலங்களை நாம் புரட்டிக் கொண்டிருக்கக் கூடாது என்று கூறும் அமர்த்தியா சென், “இப்போது எங்கே நிற்கிறோம்? இதிலிருந்து எதை நோக்கி போகிறோம் என்பதையே, நிதிக்கான அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்கிறார். ஆனாலும், இப்போது ‘எங்கே நிற்கிறோம்’ என்பதை ஆய்வுக்குள்ளாகும்போது, பின் தங்கிய இடத்தில் நிற்கக் கூடியவர்கள், அதற்கான சமூக அரசியல் காரணிகளை கடந்தகால சமூக வரலாறுகளில்தான் தேட வேண்டியிருக்கிறது. தவறு எங்கே நடந்துள்ளது என்பதைக் கண்டறிந்து, அதை அகற்றும்போது தானே நீதி கிடைக்க முடியும்? அதே நேரத்தில்,

சமூக நீதிக்கு ஒற்றைத் தீர்வை முன் வைத்து விட முடியாது என்று அமர்த்தியா சென் கூறும் கருத்தில் நியாயம் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் ஒற்றைத் தீர்வையே முன் வைக்கும் கருத்தோட்டம், இப்போது மறுபரிசீலனைக்கு உள்ளாகிவிட்டது என்பது உண்மைதான். பல்வேறு பரிமாணங்களையும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். ஆனாலும் எது சரியான நீதி என்பதை எப்படி தீர்மானிப்பது?

இந்தக் கேள்விக்கு ஒரு கதையை முன் வைத்து அமர்த்தியா சென் விளக்குகிறார். ஒரு புல்லாங்குழலுக்கு மூன்று குழந்தைகள் சண்டை போடுகின்றனர். “மூன்று பேரில் எனக்கு மட்டுமே அதை வாசிக்கத் தெரியும், எனவே எனக்கே சொந்தம்” என்கிறது ஒரு குழந்தை. மற்றொரு குழந்தையோ, “எங்க அம்மா அப்பா ஏழை, என்னிடம் வேறு பொம்மை ஏதும் இல்லை. எனக்கு இது கிடைத்தால் தான் உண்டு” என்கிறது இரண்டாவது குழந்தை. “இதை செய்ததே நான்தான்; இது என்னுடையது; எனவே எனக்கே வேண்டும்” என்கிறது மூன்றாவது குழந்தை. இப்படி உரிமை கோரும் மூன்று குழந்தைகளும், அவரவர் நியாயங்களை முன் வைத்துள்ளார்களே தவிர, ஒருவர் நியாயத்தை மற்றவர் மறுக்கவில்லை. இந்த மூன்று குழந்தைகள் முன் வைக்கும் கோரிக்கைகளில் எது சரியானது என்பதை எப்படித் தீர்மானிப்பது? இது பற்றி தனது நூலில் 400 பக்கங்களில் விரிவாக அலசுகிறார். சரியான நீதி இதுவே என்று, எந்த நீதியையும் வரையறுக்க முடியாது என்று கூறும் அவர், ஒரு குறிப்பிட்ட சூழலில், அந்த சூழலோடு தொடர்பு படுத்தியே நீதியைத் தீர்மானிக்க வேண்டும் என்கிறார். மோசமாக வெளிப்படும் அநீதிகளை பெருமளவுக்கு அகற்றுவதற்கான நடவடிக்கைகளே நீதியாக இருக்க முடியும் என்று கூறும் அமார்த்தியாசென், இதற்கு மக்களின் எதார்த்தமான வாழ்க்கையோடு ஒப்பிடுகளைச் செய்ய வேண்டுமே தவிர, அமைப்புகளில் போய் ஆராய்ச்சி நடத்துவதில் பயன் இல்லை என்கிறார். அமர்த்தியா சென் முன் வைக்கும் இந்த வாதம் - மார்க்சியம் கூறும் அரசு, வர்க்கம், குடும்பம் என்று ‘சுரண்டும்’ நிறுவனங்களே சமூக அநீதிக்கு ஊற்றுக் கண்களாக திகழ்கின்றன என்ற பார்வையை கேள்விக்குள்ளாக்குகிறது.

### தாலி இல்லாத் திருமணம் செல்லும்

1967 ஆம் ஆண்டு அண்ணா சட்டமன்றத்தில் சுயமரியாதை திருமணத்துக்கு சட்ட ஏற்பு வழங்கினார். அதற்கான மசோதா சட்டமாகும் முன்பு, தந்தை பெரியார் பார்வைக்கு அனுப்பி வைத்தார். மசோதாவைப் படித்த பெரியார், “மாலை மாற்றி தாலி கட்ட வேண்டும்” என்று மசோதாவில் இடம் பெற்றிருந்த பிரிவை சுட்டிக்காட்டி, “தாலியை கட்டாயமாக்கத் தேவையில்லை” என்று, ஆலோசனை வழங்கினார். முதல்வர் அண்ணாவும் மசோதாவில் தாம் கவனியாது விட்ட பிழையை பெரியார் கண்டுபிடித்து விட்டதைப் பாராட்டி, மகிழ்ந்து திருத்தத்தை ஏற்றுக் கொண்டார்.

ஆனால், ‘திராவிட’ கட்சிகளின் முக்கிய தலைவர்கள் வீட்டுத் திருமணங்கள்கூட தாலியுடன்தான் நடந்து வருகின்றன. தஞ்சையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில், கலைஞர் பங்கேற்ற போது, மேடையில் திராவிடர் கழகத் தம்பியினர் அடிமைச் சின்னமான தாலியை அகற்றி, மேடையிலிருந்த கலைஞரிடம் தந்தபோது, அதை கையில் வாங்கிக் கொள்ளவே கலைஞர் மறுத்தார். தாலி - பெண்ணடிமையின் சின்னம் என்பதைவிட, தமிழர் பண்பாடு என்று ‘தமிழ்’ உணர்வாளர்கள் என்றே பலராலும் போற்றப்படுகிறது.

இந்த நிலையில் மதுரை உயர்நீதிமன்றத்தின் கிளை, கடந்த ஜூலை 17 ஆம் தேதி அளித்த ஒரு தீர்ப்பில், திருமணம் தாலி கட்டாமலே சட்டப்படி செல்லும். மாலை மாற்றிக் கொண்டாலே போதும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ், இத் தீர்ப்பை வழங்கியுள்ளார். 1987 ஆம் ஆண்டு கோயில் ஒன்றில் காதலர்களான மாலதி-நாராயணன், மாலை மாற்றி திருமணம் செய்து கொண்டனர். 1988 இல் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்தனர். தாலி கட்டாததால் திருமணம் செல்லாது என்பது கணவன் தரப்பு வாதம். மாலதி - இதை எதிர்த்து வழக்கை நடத்தினார். 1994 ஆம் ஆண்டு தீர்ப்பளித்த - கீழ் நீதிமன்றம், தாலி கட்டாமலே, மாலை மாற்றினாலே திருமணம் செல்லும் என்று தீர்ப்பளித்தது. மணமகன், உயர்நிதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்; உயர்நீதிமன்றமும் 21 ஆண்டுகால பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, கீழ் நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்துள்ளது.

### பெண் அர்ச்சகர்கள்

கோயில்களில் பெண்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று சட்டமன்றத்தில் இந்து அறநிலையத் துறை அமைச்சர் பெரிய கருப்பன் அறிவித்துள்ளார். உடனே, இந்து முன்னணி பார்ப்பன இராமகோபாலன் இது வழிபாட்டு முறைகளுக்கு எதிரானது என்று எதிர்ப்பு தெரிவித்து விட்டார். பெண் அர்ச்சகர்கள் பற்றிய அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டிய அதே நேரத்தில், ஏற்கனவே அர்ச்சகருக்கு உரிய பயிற்சி பெற்றுள்ள, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், ஏதாவது, ஒரு ஆகமக் கோயிலிலாவது நியமிக்கப்பட்டுள்ளார்களா, என்ற விவரத்தை அரசு வெளியிட வேண்டும். அப்படி, இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என்றே செய்திகள் கூறுகின்றன.

ராஜஸ்தான் மாநிலத்தில், ‘ஜகத்குரு இராமனாந்தாச்சாரியா பெயரில் சமஸ்கிருத பல்கலைக்கழகம் ஒன்று இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் வேதப் பயிற்சி வகுப்பில் தலித் மாணவர்களை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்கனவே திருப்பதி ஏழுமலையான் கோயில் அறக்கட்டளையும் ‘தலித்’ சமூகத்தினருக்கு அர்ச்சகர் பயிற்சியைத் தொடங்கியுள்ளது. ஆனாலும், இவர்கள் ஏதேனும் ‘கிராமக் கோயில்களில்’ பூசாரிகளாக்கப்படுவார்களே தவிர, ஏழுமலையான் கர்ப்பகிரகத்துக்குள் அர்ச்சகர்களாக்க அனுமதிக்கப்படுவார்களா என்பதுதான் விடை கிடைக்காத கேள்வி. ‘ஏழுமலையானின்’ தலைமை அர்ச்சகராக, ஒரு ‘தலித்’ வந்துவிட்டால், அதுதான் உண்மையான சமூகப் புரட்சி!

பூனாவில், ‘ஜனன பிரபோதினி’ எனும் சமூக அமைப்பு - பெண்களுக்கு, அர்ச்சகர் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. பயிற்சி முடித்தவர்கள்,

4 ஆம் பக்கம்

# இந்திய துரோகத்தை அம்பலப்படுத்தும் ஆவணம்


பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எழுதிய கடிதங்களும், அதற்கு பிரதமரின் பதில் கடிதங்களும் – வைகோநேரில் பிரதமரை சந்தித்த போது நிகழ்ந்த உரையாடல்களும், தொகுக்கப்பட்டு 'குற்றம் சாட்டுகிறேன்' எனும் தலைப்பில் ம.தி.மு.க. சார்பில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. ஜூலை 15 ஆம் தேதி சென்னையில் நடந்த வெளியீட்டு விழாவில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றுப் பேசினார். இந்தியாவின் துரோகத்தை அம்பலப்படுத்தும் ஆவணமாக இந்நூல் வெளிவந்திருப்பதை சுட்டிக் காட்டியும், அரசியல் தளத்தில் ஈழ விடுதலையை முன்னெடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் கழகப் பொதுச்செயலாளர் பேசினார். நூலில் அடங்கியுள்ள இந்திய துரோகத்தை அம்பலப்படுத்தும் செய்திகளின் சுருக்கமான தொகுப்பு இது.

- ஜன் 4, 2005 அன்று பிரதமர் மன்மோகன்சிங்கை நேரில் சந்தித்த வைகோ, இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே இராணுவ ஒப்பந்தம் ஒன்று உருவாக நடக்கும் முயற்சிகளைக் கூறி, அப்படி ஒரு ஒப்பந்தம் வருமானால் அது பெரும் கேடு என்று கூறினார். அதற்கு பதிலளித்த பிரதமர் - அப்படி ஒப்பந்தம் எதையும் செய்ய மாட்டோம் என்று பதிலளித்தார். பிரதமர், மறுத்த பிறகு வெளிநாட்டுத் துறை அமைச்சர் நட்வர்சிங், கொழும்புக்குச் சென்று 2005 ஜூன் 10 ஆம் தேதி அளித்த பேட்டியில், 'உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய-இலங்கை இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தத்துக்கு இறுதி வடிவம் தரப்பட்டு வருகிறது" என்று கூறினார். இதை பிரதமரிடம் வைகோ கூறியபோது, அது அவரின் தனிப்பட்ட கருத்து என்று கூறி விட்டார்.

- அந்த ஒப்பந்தத்தில் ஒரு பிரிவு, பலாலி விமான தளத்தையும், ஓடு பாதையையும் இந்தியா சரி செய்து தரும் என்பதாகும். ஆனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலே அதில் அடங்கியுள்ள பிரிவுகளை இந்தியா செயல்படுத்தியது. "யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி விமானத் தளமும் ஓடு தளமும் இந்திய பொருளாதார உதவியோடு, கடந்த 6 மாத காலமாகச் சீரமைப்பு பணிகளும், பழுது பார்ப்புப் பணிகளும் நடைபெற்று வருகிறது. இந்திய நிபுணர்கள் இது தொடர்பாகக் கூட்டாக விவாதிக்க, விரைவில் வருகிறார்கள்" என்று இலங்கை விமானப்படை துணைத் தளபதி டொமினிக் பெரைரா 9.12.2005 அன்று கொழும்பில் அறிவித்தார்.

- 14.8.2006 அன்று தாய் தந்தையை இழந்த குழந்தைகளுக்கான காப்பகமான 'செஞ்சோலை' மீது சிங்கள இராணுவம் குண்டுகளை வீசி 61 பெண் குழந்தைகளை படுகொலை செய்தது. 170க்கும் மேற்பட்ட குழந்தைகள் படுகாயமடைந்தனர். இலங்கை இதை மறுத்து பொய்யான அறிக்கை வெளியிட்டது. ஆனால், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம் பெற்றிருந்த அய்ரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கையிலுள்ள யூனிசெஃப் அமைப்பினரும் இதை உறுதி செய்தார்கள். இந்த படுகொலைகளைக் கண்டித்து 17.8.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாடு சட்டமன்றத்தின் தீர்மானத்தை "கற்பனையாக புனையப்பட்ட தீர்மானம்" என்று, சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதர் 17.8.2006 அன்றே ஓர் அறிக்கை வெளியிட்டார். இத்தகைய அதிகாரம் துணைத் தூதருக்கு இல்லை.

- 2004 டிசம்பர் மாதம் சுனாமி பேரலையால் 25000 தமிழர்கள் மடிந்து போனார்கள். பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வீடுகளை இழந்தனர். இந்தியாவின் மறுவாழ்வுக்கான உதவிகள் தமிழர்களை சென்று அடையவில்லை,. பிரஞ்சு நாட்டின் சுனாமி மறுவாழ்வுக்கான முகாமில் பணியில் ஈடுபட்டிருந்த 17 தமிழ் இளைஞர்கள் - 8.8.2006 அன்று சிங்கள ராணுவத்தால் தலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கொடூரக் கொலையை இலங்கை இராணுவம் செய்தது என்ற உண்மையை ஆஸ்திரேலிய வல்லுநர் குழு அறிவித்தது.




- 2006 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் வாகறையில் இலங்கை இராணுவம் விமானக் குண்டுகளை வீசி அகதிகளாக பள்ளிக் கட்டிடங்களில் தங்கியிந்த 75 அப்பாவி மக்களை கொன்று குவித்தது.

- செஞ்சோலை படுகொலையை - வாகறை படுகொலையை இந்தியா கண்டிக்கவில்லை. அதற்குப் பிறகு, இலங்கைக் கப்பல் படைக்கு இந்தியா தீவிரமாக உதவியது. இந்திய கப்பல் படையும், இலங்கை கப்பல் படையும் தகவல் பரிமாற்றம் செய்வதற்காக தொலைத் தொடர்பு சாதனங்களின் ஒருங்கிணைப்புச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக 13.2.2007 அன்று, இலங்கைக் கடற்படைக்கு சொந்தமான கப்பலில் இரு நாட்டின் உயர் அதிகாரிகள் சந்தித்துப் பேசினர்.

- இலங்கை விமானப் படைக்கு இந்தியா ராடார் கருவிகளை வழங்கியதை பிரதமரிடம் வைகோ சுட்டிக் காட்டியபோது, அவை தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும்போது திரும்பப் பெற்றுக் கொள்வோம் என்று, உறுதி அளித்திருந்தார். ஆனால், செஞ்சோலை படுகொலைக்குப் பிறகும் 2007 ஜனவரி, மற்றும் ஜூன் மாதங்களில் மேலும் ராடார் கருவிகளை இந்தியா வழங்கியது.

- இந்திய கடற்படையின் தமிழ்நாடு பொறுப்பாளர் கம்மோடர் வேன் ஹேல்டரென், 8.12.2007 இல் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் - "இலங்கை கடற்படைப் படகுகள் ஒரு போதும் இந்திய கடல் எல்லைக்கு உள்ளே வந்து, இந்திய மீனவர்களைத் தாக்கியது இல்லை" என்ற கூறினார். அதற்கு முன்பு 16.9.2006 அன்று இந்திய கடற்படையின் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ், "இலங்கைக் கடற்படை இந்திய மீனவர்களைத் தாக்கவில்லை. விடுதலைப் புலிகள் தான் தாக்குகிறார்கள்" என்று பேட்டி அளித்தார். இது பற்றி, பிரதமர் வைகோவிடம் கூறும்போது, "கடற்படைத் தலைவரின் கருத்து எங்களுக்கும் ஏற்புடையது அல்ல. இதை கவனிக்கிறேன்" என்று கூறினார்.

- சிங்கள இராணுவத்தை ஆனை இறவு கணவாயில் வீழ்த்திய பிறகுதான் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் நாள் விடுதலைப்புலிகள் தாங்களாகவே 30 நாள்களுக்கு போர் நிறுத்தம் அறிவித்தனர். மீண்டும், 2002 ஜனவரி 22 ஆம் நாளில் மேலும் 30 நாட்களுக்கு போர் நிறுத்தத்தை நீட்டித்தனர். இலங்கை இதை ஏற்கவில்லை. பிறகு உலக நாடுகள் தந்த அழுத்தத்தின் காரணமாக 2002 பிப்ரவரியில் இலங்கை தானும் போரை நிறுத்துவதாக அறிவித்தது.

- ரணில் விக்கிரமசிங்கே பிரதமராகப் பொறுப்பேற்ற பின், நார்வே அரசின் முயற்சியால் அமைதிப் பேச்சுகள், அந்நாட்டின் தலைநகர் ஆஸ்லோவில் தொடங்கியது. மூன்று சுற்றுப் பேச்சுகளுக்குப் பிறகு அதிபராக இருந்த சந்திரிகா குமாரதுங்க சதி செய்து, மூன்று அமைச்சர்களை பதவி நீக்கம் செய்து, அமைதிப் பேச்சுகளை முடக்கினார். அரசு தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்தது.

- அய்.நா.வின் மனித உரிமைக் கழகத்தின் தலைவர் திருமதி லூயிஸ் ஆர்பர் - இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை வருத்தத்துடன் சுட்டிக் காட்டினார். அதனால் ஆத்திரமடைந்த இலங்கை அரசு, அய்.நா.வின் மனித உரிமை அலுவலகத்தை கொழும்பில் திறக்க அனுமதிக்க மறுத்தது.

- யாழ்ப்பாணத்தை இணைக்கும் ஒரே சாலையான ஏ-9 பாதையை மூடியதால், மக்கள் உணவுப் பொருள், மரு(ந்தின்றி, பட்டினியால் தவித்தனர். தமிழகத்திலிருந்து சேகரித்து செஞ்சிலுவை சங்கம் வழியாக அனுப்பப்பட்ட உணவு, மருந்துகளையும் இலங்கை அரசு அனுமதிக்க மறுத்தது.

- மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர் தொடர்ந்து இலங்கை அரசின் படையினால் கொல்லப்பட்டனர். இதற்குக்கூட இந்தியா, தனது கண்டனத்தைத் தெரிவிக்கவில்லை. இவ்வளவுக்குப் பிறகும், இலங்கையின் இராணுவத் தளபதி இரத்தம் தோய்ந்த கைகளோடு இந்தியாவுக்கு வந்தார். இந்திய அரசு சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்து - கவுரவித்தது.

- 2008 ஜூன் 20 ஆம் தேதி இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், தேசிய பாதுகாப்பு செயலாளர் விஜயசிங் ஆகியோர் அடங்கிய குழு, கொழும்பு சென்று இலங்கை அரசுடன், இரகசிய ஆலோசனை நடத்தியது. இந்தப் பயணம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

- வெறும் 2 சதவீத வட்டியில் 100 மில்லியன் டாலரை இலங்கைக்கு இந்தியா கடனாக வழங்கியது. அந்தப் பணத்தில் சீனா, பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களை வாங்கி குவித்தது, இலங்கை அரசு.

- 2008 செப். 8 ஆம் தேதி நள்ளிரவுக்குப் பின் விடுதலைப் புலிகள் வன்னிப் பகுதியில் ஜோசப் முகாம் அமைந்து உள்ள இடத்தில், இலங்கை இராணுவத் தலைமையகத்தின் மீது வான்படைத் தாக்குதலையும், தரைப்படைத் தாக்குதலையும் மேற்கொண்டபோது, இந்திய இராணுவப் பொறியாளர்கள் ஏ.கே.தாகூர், மற்றும் சிந்தாமணி ரவுட் ஆகியோர் படுகாயமுற்றனர். இந்திய தொழில்நுட்ப வல்லுனர்கள் 265 பேர் இலங்கை ராணுவத்துக்கு உதவி செய்து வருவதாக இந்திய தூதரகத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

- 'தமிழ்நாட்டு அரசியல் கோமாளிகள் கூறும் கருத்துகளை காங்கிரஸ் தலைமையிலான அரசு கேட்காது; போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசை இந்திய அரசு ஒருபோதும் கேட்டுக் கொள்ளாது" என்று, இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியதை - இலங்கை அரசின் அதிகாரபூர்வ ஏடான 'சண்டே அப்சர்வர்' 7.12.2008 அன்று வெளியிட்டது.

- 2008 நவம்பர் 12 ஆம் நாள் தமிழக சட்டமன்றம் இலங்கையில் போர் நிறுத்தம் கோரி தீர்மானம் விறைவேற்றிய பிறகு, டெல்லி வந்த ராஜபக்சே ஒரு போதும் போரை நிறுத்த மாட்டோம் என்று ஆணவத்துடன் அறிவித்தார்.

- 2008 அக்டோபர் 2 ஆம் நாள் பிரதமர், வைகோவுக்கு எழுதிய கடிதத்தில், "இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக, நாங்கள் இத்தகைய பாதுகாப்பு உதவிகளைச் செய்து இருக்கிறோம்" என்பதை ஒப்புக் கொண்டார். இந்தியா - இலங்கைக்கு ஆயுத உதவிசெய்தது என்பதற்கான ஆவணச் சான்று, இந்த பிரதமரின் கடிதம்.

- 2007 ஆகஸ்ட் 6 ஆம் தேதி 'இந்து' ஏட்டின் பன்னாட்டுப் பதிப்பில் கீழ்க்கண்ட செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

- "2005 ஆம் ஆண்டு இந்தியா, இலங்கைக்கு இரண்டு ராடார்களைத் தந்தது. 2007 ஜனவரியில் ஒரு ராடாரும், ஜூன் மாதம் மற்றொரு ராடாரும்,

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கோயிலுக்குள் பெரியார் முழக்கம்

**குத்தூசி குருசாமி**

அன்று கல் போட்டவர்கள் சிலர்! இன்று மாலை போடுகிறவர்கள் பலர்! அன்று அவர் விதைத்த நெல் இன்று நமக்காக அறுவடையாகிறது!

1929 என்று நினைவு!

சீர்காழியில் ஒரு சுயமரியாதைப் பொதுக் கூட்டம். நாயக்கர் அவர்களும் (அன்று எல்லோரும் இப்படித்தான் அழைப்பது வழக்கம்) இயக்கத் தோழர்கள் மூவரும் ரயில் நிலையத்தில் இறங்கினோம். மாலை 4 மணி இருக்கலாம். ரயில் நிலையத்தின் மேடையில் (ப்ளாட்ஃபாரம்) பள்ளிக்கூடத்துக் கரும்பலகைகள் (ப்ளாக்போர்டு) 4-5 வரிசையாகக் காட்சியளித்தன! பெரிய பெரிய மண்டை எழுத்தில் - 2-3 வர்ணங்களில் - சாக்கட்டியினால் வரவேற்பு வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன.

"...... நாயே! திரும்பிப்போ!"

"ஞான சம்பந்தர் பிறந்த ஊரில் உனக்கென்ன வேலை?"

"நாத்திக நாயே! உள்ளே வராதே!"

"உள்ளே நுழைந்தால் உனக்குத் தக்க மரியாதை கிடைக்கும்!"

இவை போன்ற இன்னும் சில வரவேற்பு வாக்கியங்கள்!!

"அய்யா, படித்தீர்களா?" என்று கேட்டோம்.

படித்தார், ஒன்றும் சொல்லவில்லை.

ரயில் நிலையத்திற்கு வெளியே வந்தோம்.

ஒரு பழைய ஃபோர்டு மோட்டார் கார்! மேளம் வாசிப்போர் 5 - பேர்!கூட்டம் நடத்தும் தோழர்கள் இரண்டு பேர்! இவ்வளவுதான்! எதற்காக? ஊருக்குள்ளே எங்களையெல்லாம் ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்காக.

"மேளமும் வேண்டாம்; ஊர்வலமும் வேண்டாம். விடுங்கள் வண்டியை!" என்றார், பெரியார்.

நால்வரும் ஏறிக் கொண்டு புறப்பட்டோம். வழிநெடுக கறுப்புத் துணித் தோரணங்கள், வரிசை வரிசையாக - ஊர் நுழையும் வரையில். ஊருக்குள்ளே நுழைந்ததும் எல்லாக் கடைகளும் அடைப்பு! இரு ஓரங்களிலும் ஏராளமான கரும்பலகைகள்! அதே வரவேற்பு வாக்கியங்கள்!

வைதீகர்களுடன் அன்று காந்தீயவாதிகளும் சேர்ந்து கொண்டு ஊர் தவறாமல் நம் இயக்கப் பிரச்சாரத்துக்குக் கொடுத்த தொல்லை, அடடா! இன்று வர்ணிக்கவே முடியாது.

சீர்காழியில் சிவன் கோவில் கோபுர வாசலில் வண்டி நின்றது - இறங்கினோம். ஏராளமான போலீஸ் படை! 144 தடையுத்தரவு கோரியிருந்தார்களாம், எதிரிகள்! ஆனால் அதிகாரிகள் மறுத்துவிட்டனராம்.

"கூட்டம் எங்கே?" என்று கேட்டார் பெரியார்.

"உள்ளே தான்; முதல் பிரகாரத்தில்" என்றார், கூட்டத்தின் அமைப்பாளர்!

"வேறு இடமா இல்லை? வீண் வம்பு தானே இது?" என்று கேட்டுக் கொண்டே கோபுரத்துக்குள்ளே நுழைந்தார்!

உள்ளே பெருங்கூட்டம்! சுமார் மூவாயிரம் பேராவது இருக்கலாம் (ஒலிபெருக்கி பரவியில்லாத அக்காலப் பொதுக் கூட்டங்களில் மூவாயிரம் என்பது பெருங்கூட்டந்தான்! அதுவுமின்றி முப்பதாண்டுகட்கு முன்பு மக்கள் எண்ணிக்கையும் மூன்றில் ஒரு பங்கு தானே!)

பெரியார் உள்ளே சென்று கூட்டத்தில் அமர்ந்தார். அந்த ஊர்ப் பெரும் பணக்காரர் 2-3 பேரும் வந்தனர் - போலீஸ் மேல் அதிகாரியும், சப் மாஜிஸ்ரேட்டும் வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர்.

கூட்டத்தின் எதிரில் ஒரு மண்டபம். அதன் மேலும் சிலர் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

பெரியார் அமர்ந்தவுடனேயே "பேசாதே! திரும்பிப் போ!" என்று பெருங்கூச்சல்! உய், உய், என்ற ஊளை! நடுவில் சிலர் எழுந்தனர். போலீசார் அவர்களை அடக்கி உட்கார வைத்தனர். ஏறத்தாழ எல்லா மக்களுமே கூட்டத்தைக் கலைக்க வந்தவர்கள் என்றே கூறலாம்.

வழக்கம்போலப் பெரியார் கண்ணைச் சுழற்றிச் சுழற்றிக் கூட்டம் முழுவதையும் பார்த்தார்!

அன்று நாங்கள் மூன்று பேர் பேசுவதாக இருந்தது.

அவைத் தலைவரை நோக்கி, "நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம். ஒரே வாக்கியத்தில் "இன்னார் பேசுவார்" என்று மட்டும் சொல்லுங்கள். மற்றவர்களும் பேச வேண்டாம். நானே பேசிவிடுகிறேன்" என்று சொன்னார்.

அவ்வாறே ஆரம்பித்தார். அந்தப் பேச்சு இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது! அதே பீடிகையை அண்மையில் கூடச் சில தோழர்களிடம் பேசிக் காட்டியுமிருந்திருக்கிறேன் - அடடா! என்ன நாசுக்கு! என்ன குழைவு! என்ன மரியாதை! என்ன அடக்கம்!

பேச்சின் துவக்கத்தில், 10-15 நிமிடத்திற்கெல்லாம், மதிற்சுவருக்கு வெளிப்புறத்திலிருந்து 4-5 அரை செங்கற்கள் வந்து கூட்டத்தில் விழுந்தன - எதிர் மண்டபத்தின் மேல் வீற்றிருந்த பக்தர்களும் இரண்டொரு மலப் பிஞ்சுகளை வீசினர். மணி ஆறு இருக்கும். சிறிது இருட்டிவிட்டது. கல் வீச்சினால் இரண்டொருவருக்குச் சிறிது காயம் ஏற்பட்டது! போலீசார் பரபரப்பாக அங்குமிங்கும் ஓடினர்.

"கல்வீச்சுக்குப் பயப்படுபவர்கள் மட்டும் எழுந்து போய்விடுங்கள். பயப்படாதவர்கள் தலையில் துணியை சுற்றிக் கொள்ளுங்கள்!" என்றார் பெரியார்.

ஊசி குத்தி நரம்பில் மருந்தை ஏற்றுவதுபோல் சொல்லை நிறுத்தி நிறுத்தி, ஒவ்வொரு வாக்கியத்தையும் எடை போட்டு வீசிக் கொண்டேயிருந்தார். ஒரு மணி ஆனதும் பலர் சிரித்தனர். அடுத்த அரைமணிக்கெல்லாம் தலையாட்டினர். இடையில் சிலர் கை தட்டினர். மகுடிக்காரனிடம் பாம்பு மயங்கிவிட்டது! பெரியார் முடிக்கப் போகிறார். அடித்தார், கடைசியில் தம் துருப்புச் சீட்டை!

"இப்பேர்ப்பட்ட உருவமா, நம் கடவுள்? இதை ஏன் குப்புறப்போட்டு துணி துவைக்கக் கூடாது?" என்று அடித்தார்! எங்கே கோவிலுக்குள்ளே! ஞான சம்பந்தனுக்குக் காட்சி தந்த எம்பிரான் எழுந்தருளியிருக்கின்ற இடத்திலே!

ஒரே கைதட்டல்! யாரிடமிருந்து? கல்வீச வந்திருந்த நெற்றிப் பூச்சுத் திருமேனிகளிடமிருந்து!

கூட்டம் முடிந்தது. பெரியாரை நெருங்கிக் கூட்டம் ஓடி வந்தது! அடிப்பதற்கல்ல; அணைப்பதற்காக.

சப்மாஜிஸ்ட்ரேட் (திரு. இராமசாமி முதலியார் - பல ஆண்டுகட்கு முன்பே ஓய்வு பெற்று இன்று திருக்கண்ணபுரத்தில் இருக்கிறார்) பெரியாரை நெருங்கினார்! நெற்றியில் பலமான விபூதிப்பட்டை! நடுவில் சந்தனப் பொட்டு!

"அய்யா! ஆரம்பத்தில் உங்கள் ஊர்வலம் நின்றுவிட்டது! நீங்களே மறுத்து விட்டீர்கள்! இப்போதாவது புறப்படலாமா? மூன்று லாரி போலீஸ் வந்திருக்கிறது! பாதுகாப்புத் தரவே நானும் வந்திருக்கிறேன்" என்று கேட்டார்.

"அய்யோ! ரொம்ப நன்றி! வேண்டாம், ஊர்வலம்! ஊருக்கு திரும்ப வேண்டும்!" என்று கூறினார் பெரியார்.

ஆகவே திரும்பினோம், உயிரோடு! ஆனால் வெற்றியோடு!

**('நாத்திகம்' 23.9.1960)**

---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய விமானப் படையின் சார்பில் அனுப்பப்பட்டன. டெல்லிக்கு அருகாமையிலுள்ள ஹிண்டன் இராணுவ விமான தளத்தில் இருந்து இந்த ராடார்கள் அனுப்பப்பட்டன. இந்தியாவுக்கு எந்த ஆயுதங்களையும் வழங்குவதில்லை என்று தனக்குத் தானே இந்தியா விதித்துக் கொண்ட தடையை மீறி 2005 இல் இலங்கை பிரதமர் ராஜபக்சே இந்தியாவுக்கு வந்தபோது ராடார்கள் கொடுக்கப்பட்டன."

- 2007 அக்டோபர் 15 ஆம் நாள் வெளியான 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடும் இதே செய்தியை உறுதிப்படுத்தியது.
- இந்திய - இலங்கைக் கடற்படை தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் 2007 ஆம் ஆண்டிலேயே செய்யப்பட்டது. இந்திய கடற்படை, விடுதலைப்புலிகளின் படகுகளையும் கப்பல்களையும் மூழ்கடிப்பதில் நேரடியாகவே ஈடுபட்டது. இந்திய விமானப்படை நிபுணர்கள் சக்தி வாய்ந்த சேட்டிலைட் கேமராக்கள் மூலம், புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து, சிங்கள விமானப் படைக்குத் தெரிவித்ததன் விளைவாகவே, புலிகளின் அரசியல் பிரிவுச் செயலாளர் தமிழ்ச் செல்வன் கொல்லப்பட்டார்.
- கொழும்பு சென்ற மத்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி போர் நிறுத்தத்தை கோரவில்லை. 'அது எங்கள் வேலை அல்ல' என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை சந்தித்தப் பிறகு அவரது வீட்டு வாயிலிலேயே பேட்டியும் அளித்தார்.
- போரில் சிங்கள ராணுவம் வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறது என்றும், கிளிநொச்சி, ஆணைஇரவு வீழ்ந்து விட்டது என்றும் போரின் இறுதிக்கட்டம் விரைவில் நிறைவேறிவிடும் என்றும் இந்திய நாடாளுமன்றத்தில் பிரணாப் முகர்ஜி 18.2.2009 அன்று பூரிப்புடன் அறிக்கை சமர்ப்பித்தார்.
- முல்லைத் தீவில் 3 லட்சம் தமிழர்கள் இருந்தும், 70000 பேர் இருப்பதாக சிங்கள அரசு சொன்ன பொய்யை பிரணாப் முகர்ஜியும் அப்படியே நாடாளுமன்றத்தில் கூறினார். ●

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அர்ச்சகர்களாகி வருவதாகவும், 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தி கூறுகிறது. இப்படி பயிற்சி பெற்ற சித்ரா சந்திரசூட் என்ற பெண் - 1997 முதல் அர்ச்சகராக இருந்து வருகிறார். இதனால் 'பகவான்' கோயிலை விட்டு ஓடி விட்டதாக தகவல் ஏதுமில்லை. இதை இராமகோபாலன்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனாலும், ஆண் அர்ச்சகர்கள், விடுமுறையில் போகும்போது மட்டும்தான், தங்களுக்கு பூசை செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது என்கிறார் சித்ரா சந்திர சூட். அதுவும் மரணித்தவர்களுக்கான சடங்குகளை நடத்த பெண் அர்ச்சகர்கள் அனுமதிக்கப்படுவதே இல்லையாம்.

கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் 207 பேர் தேர்ச்சிப் பெற்று, பட்டதாரிகளாக வெளியே வந்துள்ளனர். இதில் 76 பேர் பிற்படுத்தப்பட்டோர்; தலித் மாணவர்கள் 34 பேர். அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 36000 கோயில்களில் இவர்களுக்கு பணி வழங்கப்பட வேண்டும். 'ஆகமங்களை' பின்பற்றும் கோயில்களில் நியமிக்கப்பட்டால்தான், அது உண்மையான சமூக மாற்றமாக இருக்க முடியும். இதில் உச்சநீதிமன்றம் விதித்துள்ள தடையை நீக்குவதற்கு தி.மு.க. ஆட்சி எந்த முயற்சியும் எடுக்காத நிலையில், கி.வீரமணி, பெரியார் நினைவிடத்தில், கலைஞர் கருணாநிதியைப் பாராட்டி, கல்வெட்டு நிறுவிவிட்டார். நிறைவேற்றி முடிக்காத ஒரு திட்டத்துக்கு கல்வெட்டு வைத்துள்ள வீரமணி செய்ததுதான் 'மகத்தான புரட்சி'!


"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857

**தமிழர்களே! அடக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th July 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூலை 30, 2009 புரட்சி 8 முழக்கம் 29 விலை: ரூ.2.50


## பெரியாரை நீதிமன்ற காகித கட்டுக்குள் புதைத்துவிடக் கூடாது!

“விடை பெறுவதற்கு முன்பு - இந்த நீதிமன்றம் நிறைவாக ஒன்றை கூற விரும்புகிறது. பெரியார் ‘குடிஅரசில்’ எழுதியவை எல்லாம், இரண்டு உலகப் போர்கள் நடந்த காலத்தின் இடையே வெளி வந்தவை. காலனி ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் பிடியில் சிக்கிய பெரியார் சிறைச் சாலைகளை சந்தித்தார். அவர் நடத்திய பத்திரிகைகளுக்காக பிரிட்டிஷ் காலனி ஆட்சி வைப்புத் தொகை கேட்டது. பிறகு அதை பறிமுதல் செய்தது. இந்து பழமைவாதிகளால் அவர், புறக்கணிக்கப்பட்டார். சமூகநீதிக்காக போராடுவதற்காக அவர் தேசிய இயக்கத்திலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக சக்தி மிக்க காங்கிரஸ் கட்சியின் கடுங்கோபத்தையும் அவர் எதிர் கொண்டார். ஆனாலும், எந்தப் பலனையும் எதிர்பாராத அவரது பயணம் தொடர்ந்தது.

தற்குறிகள் எண்ணிக்கையே நிறைந்திருந்த அந்தக் காலகட்டத்தில் படித்தவர்களிடம், தமது கருத்துகளைக் கொண்டு சேர்க்க விரும்பிய பெரியார், பல சந்தர்ப்பங்களில் ‘குடிஅரசு’ பத்திரிகைகளை இலவசமாகவே வழங்க வேண்டியிருந்தது.

பெரியாரின் 130 ஆவது ஆண்டாக மலரப் போகும் 2009 இல் பெரியாரின் எழுத்துகள், பதிப்புரிமைப் பிரச்சினைக்குள் சிக்கி, சட்டங்களின் ‘சண்டைக் களமாக’ மாற்றப்படுவதை கடும் வேதனை வலியுடனேயே இந்த நீதி மன்றம் பார்க்கிறது. அவரது சிந்தனைகளை ‘சகோதர சண்டைக்குள்’ பெரியாரை சிக்க வைத்து, நீதிமன்றங்களின் காகிதக் கட்டுகளுக்குள் புதைந்து விடக்கூடாது.

நியாயங்கள் வெல்லும் என்று இந்த நீதிமன்றம் நம்புகிறது.

எமது குறிக்கோள் இதுதான்.

“நூறு மலர்கள் பூக்கட்டும்; ஆயிரம் சிந்தனைகள் குலுங்கட்டும்.”

**– நீதிபதி கே. சந்துரு, தீர்ப்பின் இறுதிப் பகுதியில், பதிவு செய்துள்ள கருத்து**

### மீண்டும் நீதிமன்றம் சென்றார், வீரமணி!

சென்னை உயர்நீதிமன்றத்தில், நீதிபதிகள் ரவிராஜ் பாண்டியன், ஜனார்த்தன ராஜா ஆகியோர் அமர்வுக்கு முன் மேல்முறையீட்டு மனுவை தமது நிறுவனம் சார்பில் ஜூலை 29 அன்று கி.வீரமணியின் வழக்கறிஞர்கள் தாக்கல் செய்தனர். நீதிமன்றம், ‘ஏற்கனவே இருந்த நிலை தொடர்கிறது’ (Status Quo) என்று கூறியுள்ளது.

### பெரியார் எழுத்துகளை வெளியிட தடை இல்லை

# வீரமணி பதிப்புரிமை கோர முடியாது

### உயர்நீதிமன்றத்தின் சிறப்பு மிக்க தீர்ப்பு

பெரியார் எழுத்து பேச்சுகளுக்கு - பதிப்பு உரிமை கோரும் உரிமை கி. வீரமணியை செயலாளராகக் கொண்டுள்ள பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்துக்கு கிடையாது என்றும், பெரியார் அந்த உரிமைகளை தனக்கும் கோரவில்லை; மற்றவர்களுக்கும் வழங்கிடவில்லை என்றும், சென்னை உயர்நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. நீதிபதி கே. சந்துரு, ஜூலை 27, 2009 அன்று காலை 10.30 மணியளவில் இத்தீர்ப்பை வழங்கினார்.

பெரியார் எழுத்து பேச்சுகளை 1925 முதல் 1938 வரை தொகுத்து, 27 தொகுதிகளாக, பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டது. அதை எதிர்த்து, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி.வீரமணி வழக்கு தொடர்ந்தார். ‘அறிவுசார் சொத்துடைமை’, ‘பதிப்புரிமை’ சட்டப் பிரிவுகளின் கீழ் பெரியார் எழுத்து பேச்சுகளை வெளியிடும் உரிமை - தமது நிறுவனத்துக்கு மட்டுமே உண்டு என்று கோரிய வீரமணி, பெரியார் திராவிடர் கழகம் வெளியிட தடைகோரியதோடு, ரூ.15 லட்சம் இழப்பீடும் கேட்டு வழக்கு தொடர்ந்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் இருவர் மீதும் இந்த வழக்கு தொடரப்பட்டது. வழக்கு தொடர்ந்ததோடு, தங்களிடமிருந்த ‘குடிஅரசு’ பிரதிகளை “திருடிச்” சென்றதாக சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் மனுவும் தந்தார்கள்.

வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், ‘குடிஅரசு’ தொகுதிகள் வெளியீட்டுக்கு இடைக்கால தடைவிதித்திருந்தது. (Status Quo) பெரியாரியலாளர்களாலும், தமிழின உணர்வாளர்களாலும் மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பைக் கேட்டு, உண்மை பெரியார் தொண்டர்கள் மகிழ்ந்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

பெரியார் தனது எழுத்து பேச்சுகளுக்கு பதிப்புரிமை ஏதும் கோரவில்லை என்பதோடு, பதிப்புரிமை கோரும் உரிமையையும் எவருக்கும் வழங்கிடவும் இல்லை என்பதை நீதிமன்றத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சார்பில் வாதாடிய வழக்கறிஞர் துரைசாமி எடுத்துக் காட்டினார். பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சார்பில் வாதாடிய திருமதி கிளாடிஸ் டேனியல் அவர்களும் இதே வாதத்தை முன் வைத்தார்.

*1957 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின் 52(1) (எம்) பிரிவை - இந்த வழக்கின் தீர்ப்புக்கு மய்யமான ஆதாரமாக நீதிபதி முன் வைத்துள்ளார்.*

பதிப்புரிமை எவற்றிற்கெல்லாம் கோர முடியாது என்பதை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு விளக்குகிறது. இதன்படி பொருளாதாரம், அரசியல், சமூகம் அல்லது மதம் தொடர்பான தலைப்புகளில், நாட்டின் நடப்புகள் குறித்து - செய்தித்தாள், இதழ்களில் வெளிவரும் கட்டுரைகளை மீண்டும் வெளியிட்டால், அதற்கு பதிப்புரிமை கோர முடியாது. அப்படி பதிப்புரிமை கோர வேண்டுமானால், இந்தக் கட்டுரைகளை எழுதியவர்கள், அதற்கான பதிப்புரிமையை கோரி இருந்திருக்க வேண்டும் என்று இந்த பிரிவு குறிப்பிடுகிறது. இந்த சட்டப்பிரிவை முன் வைத்து வழக்கறிஞர் துரைசாமி முன் வைத்த வாதம் வலிமையானதாகும் என்று நீதிபதி தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். (He (Mr.Duraisamy) Pleaded a strong reliance upon the said provision and pleaded for the dismissal of the application) இந்த வழக்கில் எழுப்பிய பிரச்சினைக்கு, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் விதிவிலக்குப் பிரிவு பதிலாக அமைந்துள்ளது என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார். அந்த சட்டப் பிரிவின் அடிப்படையிலே கி.வீரமணியின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (The issue raised here is squarely covered by the exemption provided under section 52(1) (m) of the copy right act, 1957. Accordingly the application is dismissed.)

“குடிஅரசு - பத்திரிகையில் எழுதியவர் பெரியார்; அவரே அதன் உரிமையாளர். குடிஅரசில் வெளிவந்த கட்டுரைகளில் பெரும்பாலானவை பொருளாதாரம், அரசியல், சமூகம், மதம் தொடர்பான தலைப்புகளில் தான். இந்தக் கட்டுரைகளுக்கு தனக்கு பதிப்புரிமை ஏதும் பெரியார் கோரவில்லை. எனவே 52(1) (எம்) பிரிவின்படி பெரியார் எழுத்தை வெளியிடுகிறவர்கள்

(4 ஆம் பக்கம்)

### வாதாடிய வழக்கறிஞர்கள்

‘குடிஅரசு’ வழக்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சார்பாக மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி மற்றும் வழக்கறிஞர் இளங்கோ ஆகியோரும், பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் சார்பில் வழக்கறிஞர் திருமதி கிளாடியஸ் டேனியல் ஆகியோரும் வாதிட்டனர். வழக்கறிஞர் குமாரதேவன், வழக்கறிஞர் அமர்நாத் பல்வேறு நிலைகளில் வழக்கிற்கு தங்கள் பங்களிப்பை வழங்கினர். 2008 செப்டம்பரில் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதி ஜெயபால் முன் முதலில் வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கில் நீதிமன்றம் முதலில் குடிஅரசு தொகுதிகளை வெளியிடுவதற்கு இடைக்கால தடை விதித்தது. வழக்கு பல முறை தள்ளி வைக்கப்பட்டது. இறுதியாக நீதிபதி கே. சந்துரு முன் விசாரணைக்கு வந்தது.

கடந்த ஜூலை 20 ஆம் தேதி - வழக்கு விசாரணைக்கு வந்தபோது, தடைக்கான கெடு முடிந்திருந்தது. தடையை மேலும் நீட்டிக்க மறுத்த நீதிபதி, 22 ஆம் தேதி வழக்கை விசாரணைக்கு ஏற்று, இரு தரப்பு வாதங்களையும் கேட்டார். ஜூலை 27ஆம் தேதி காலை 10.30 மணியளவில் நீதிமன்றம் தொடங்கியவுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நீதிபதி வெளியிட்டார்.

**தலையங்கம்**

# வரலாற்றில் பதியும் தீர்ப்பு

*பெரியாரின் சிந்தனைகளை மக்கள் மன்றத்தில் முழுமையாக காலவரிசைப்படி கொண்டு சேர்க்க பெரியார் திராவிடர் கழகம் எடுத்த பெருமுயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. ‘குடிஅரசு’ தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட தடையில்லை என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. தனித்துவமான புரட்சிகர தீர்ப்புகளை வழங்கி வரும் பெருமைக்குரிய உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு, மற்றொரு சிறப்பான நேர்மையான தீர்ப்பை வழங்கியிருப்பதை பெரியாரிய சிந்தனையாளர்கள், மகிழ்வுடன் வரவேற்கிறார்கள்!*

*மகத்தான தியாகங்களை சுமந்து, மக்களிடம் பெரியார் விதைத்த சிந்தனைகளை நீதிமன்றத்தில் வழக்குகளாக்கி, அந்த வழக்குகளின் காகிதக் கட்டுகளுக்குள் முடக்குவது, பெரியாருக்கு இழைக்கும் நீதியாகாது என்பதை நீதிபதியே தமது தீர்ப்பில் கவலையுடன் பதிவு செய்துள்ளதை சுட்டிக்காட்டியாக வேண்டும்.*

*யாருக்கு குழந்தை சொந்தம் என்று வழக்காடிய இரண்டு தாய்மார்களில் ஒருவர், குழந்தையை இரண்டு பகுதியாக வெட்டி பிரித்துத் தந்து விடுங்கள் என்றுகூற, உண்மைத் தாயோ, குழந்தையை வெட்ட வேண்டாம், அவளிடமே இருக்கட்டும் என்று மன்றாடிய கதையில் இழையோடும் அதே உணர்வுதான், நீதிபதியின் இந்த கருத்திலும் பிரதிபலிக்கிறது என்பதாகவே நாம் உணருகிறோம்.*

*தமது வெளியீடுகள் எவற்றுக்கும் பதிப்புரிமை கோராத பெரியார், பல நேரங்களில் மக்களுக்கு இலவசமாகவே வழங்கினார் என்ற உண்மையை நீதிபதி எடுத்துக் காட்டியிருப்பது, பதிப்புரிமை கோரி நிற்பவர்களுக்கு, நீதிமன்றம் வழங்கியுள்ள சரியான பதிலாகும்.*

*அதனால்தான் ‘மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு’ என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெரியாரை மிகச் சரியாக படம் பிடித்துக் காட்டினார். ‘நீதிமன்ற நீதிக்கே நீதி சொல்வார்’ என்று ஒரு கவிஞர், பெரியாரைப் பாடினார். அந்தத் தலைவரின் சிந்தனைகளை நீதிமன்றங்களின் தடை ஆணைகளுக்குள் முடக்கத் துடிப்பது, பெரியாரியலுக்கு இழைத்துள்ள துரோகம். இதை வரலாறு பதிவு செய்தே தீரும்.*

*வழக்கைத் தொடர்ந்தவர்களுக்குக்கூட ஒரு வகையில் நன்றி சொல்லத்தான் வேண்டும். இந்த வழக்கு வந்த காரணத்தால்தான் ‘குடிஅரசு’ பற்றிய செய்திகள் மேலும் பரவலாக மக்களிடம் சென்றடைந்திருக்கிறது.*

*1925 ஆம் ஆண்டு அமெரிக்க மாநிலங்களில் ஒன்றில்* (TENNESSEE) *நடந்த புகழ் பெற்ற ‘ஸ்கோப்ஸ் மங்கி’* (Scopes Monkey) *என்ற வழக்கை குறிப்பிடலாம். ‘மனிதனை இறைவன் படைத்தான்’ என்பதை மட்டுமே பள்ளிகளில் பாடமாக கற்பிக்க வேண்டுமே தவிர, மனிதன் பரிணாம வளர்ச்சியை விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்த டார்வின் கோட்பாட்டை கற்பிக்கக் கூடாது என்ற சட்டத்தை எதிர்த்து* (BULLET ACT)*, ஜான் ஸ்கோப் என்ற பள்ளி ஆசிரியர், தமது மாணவர்களுக்கு டார்வின் கோட்பாட்டை கற்றுத் தந்தார். அதன் காரணமாக ஆசிரியர் ஆட்சியாளரால் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டார்.*

*பைபிளின் இறைக் கொள்கைக்கு ஆதரவாக அமெரிக்க தேர்தலில் மூன்று முறை குடியரசுத் தலைவர் வேட்பாளராக நின்ற வில்லியம் ஜென்னிங்ஸ் பயாஸ் வாதாடினார். டார்வின் கோட்பாட்டுக்கு ஆதரவாக பிரபல வழக்கறிஞர் லாரன்ஸ் டாரோ வாதாடினார். இருதரப்பு வாதங்களும், எட்டு நாட்கள் இரவு பகலாக தொடர்ந்து நடந்தன. ஏடுகளில் வெளிவந்த அந்த வாதங்களை மக்கள் பரபரப்பாகப் படித்தார்கள். பைபிளின் படைப்புக் கொள்கைக்கு எதிரான வாதங்கள் அப்போதுதான் மக்களை சென்றடைந்தன. அதே போன்ற தாக்கத்தையே இந்த வழக்கும் சந்தித்திருக்கிறது.*

*பெரியாரியலை பரப்பும் இயக்கம் எது? முடக்கும் அமைப்பு எது என்பதை நீதிமன்றங்களின் வழியாக மக்கள் மன்றம் இப்போது புரிந்து கொண்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர்கள் மேல்முறையீடு செய்தாலும், நாம் வியப்படைய மாட்டோம். மக்கள் மன்றம், மீண்டும் அவர்களை அடையாளம் கண்டு கொள்ளவே செய்யும்.*

*நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு, பெரியார் திராவிடர் கழகத்துக்கு கிடைத்த வெற்றியாக மட்டும் நாம் கருதவில்லை. பெரியாரியலைப் பரப்பத் துடிக்கும் அனைவருக்கும் கிடைத்த வெற்றியாகவே கருதுகிறோம்.*

– புரட்சிப் பெரியார் முழக்கம் 30.07.2009

## தீர்ப்பு குறித்து சிந்தனையாளர்கள் கருத்து

# பெரியார் விடுதலையானார்!

*நீதிமன்றத் தீர்ப்பை சிந்தனையாளர்கள் பலரும் வரவேற்றுள்ளனர். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு இது தொடர்பாக சிந்தனையாளர்களின் கருத்தை வெளியிட்டுள்ளது. பெரியாரியல் சிந்தனையாளர் எஸ்.வி.ராஜதுரை கூறுகையில், “நீதிமன்றத்துக்கு சென்ற கி.வீரமணி, இதன் மூலம் பெரியார் சிந்தனைகள் பரவுவதை தடுக்க முயன்று, பெரியாருக்கு முழுமையாக நீதி வழங்க மறுத்திருக்கிறார்” என்றார். மேலும் “இத் தீர்ப்பு குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். பெரியாரைப் பற்றி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், எந்த வரலாற்றுச் சூழலில் பெரியார் தனது குரலை ஒலித்திருக்கிறார் என்பது வெளிப்படுத்தப்படவே இல்லை. சமூக, வரலாற்றுச் சூழலிலிருந்து பெரியார் எழுத்துகளைப் பிரித்து தனிமைப்படுத்திவிடக் கூடாது” என்று கூறினார்.*

*“பெரியார் நூல்கள் தேச உடைமையாக்கப்பட வேண்டும் என்பதற்கான முதல் படியாக இத்தீர்ப்பு வெளிவந்துள்ளது” என்று எழுத்தாளர் ஞாநி கூறியுள்ளார். “இந்தத் தீர்ப்பை பெருந்தன்மையுடன் திராவிடர் கழகம் ஏற்றுக் கொண்டு, மேல்முறையீடு செய்யாதிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” என்று ஞாநி மேலும் கூறியுள்ளார். பெரியாரின் எல்லா எழுத்துகளுக்குமான உரிமைகளைப் பெற்று அரசு பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். “பெரியார் சிந்தனைகள் பொதுச் சொத்து அல்ல என்பது எங்களின் வழக்கு அல்ல. ஆனால், பதிப்புரிமை ஒரு குறிப்பிட்ட நிறுவனத்துக்கு மட்டுமே உண்டு என்பதே எங்கள் வழக்கு. காரணம் பெரியாரின் கருத்துகள் சிதைக்கப்பட்டு விடக்கூடாது” என்று தி.க. வழக்கறிஞர் வீரசேகரன் கூறினார்.*

*“எழுத்துகள் திரித்துக் கூறப்பட்டுவிடும் என்ற காரணத்தைக் கூறி, பெரியார் நூல்களை வெளியிடும் உரிமைகளை மற்றவர்களுக்கு வழங்காமல் இருந்துவிட முடியாது. பெரியாரின் எழுத்துகள் முழுமையாக பொது மக்களிடம் கிடைக்கும்போதுதான் திரிபுவாதங்களை எதிர்த்து அம்பலப்படுத்த முடியும்” என்று எஸ்.வி.இராஜதுரை கூறியுள்ளார்.*

*தீர்ப்பை வரவேற்ற சமூக அரசியல் ஆய்வாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வம், “தனிஉடைமை கோட்பாட்டுக்கு எதிரான பொதுமைக் கோட்பாட்டுக்கு அனைவருக்கும் கிடைத்த வெற்றி, இத் தீர்ப்பு” என்றார். 1995 இல் உச்சநீதிமன்றம் , அலைவரிசை பொதுவானது என்று வழங்கிய தீர்ப்புக்கு சமமானது இத்தீர்ப்பு என்றார். கல்கத்தாவில் நடந்த கிரிக்கெட் போட்டியை நேரடியாக ஒளிபரப்பும் உரிமை, தூர்தர்ஷனுக்கு மறுக்கப்பட்டு தனியார் தொலைகாட்சிக்கு தந்த கிரிக்கெட் வாரியத்தை எதிர்த்து தூர்தர்ஷன் தொடர்ந்த வழக்கில், உச்சநீதிமன்றம் மேற்குறிப்பிட்ட தீர்ப்பை வழங்கியது.*

*‘டெக்கான் கிரானிக்கல்’ ஆங்கில நாளேடு ‘தமிழக பெரியாரியல்வாதிகள் தீர்ப்புக்கு வரவேற்பு’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில் “தி.க. கட்டுப்பாட்டிலுள்ள பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம், பெரியார் நூல்களை வெளியிடுவதை தனக்கே உரிமை கோருவதற்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை தமிழக பெரியாரியலாளர்கள் வரவேற்றுள்ளனர்” என்று குறிப்பிட்டுள்ளது.*

*“மகிழ்ச்சியாக நாம் கொண்டாட வேண்டும். பெரியார், இப்போது சுதந்தரமாக நடமாட முடியும். சிலரால் சிறைபிடிக்கப்பட்டிருந்த பெரியார், அதிலிருந்து விடுதலைப் பெற்று விட்டனர்” என்று பெரியாரிய சிந்தனையாளரும் எழுத்தாளருமான வ.கீதா கூறினார். “பெரியார் கருத்துகள் மேலும் மக்களிடையே சென்றடைய இத்தீர்ப்பு உதவும்” என்றார் அவர்.*

# சமநீதி பெரியாரின் சிந்தனைகள் பரவட்டும்!

*‘குடிஅரசு’ ஏட்டில் வெளியான பெரியாரின் படைப்புகளை “பெரியார் திராவிடர் கழகம்” நூலாக வெளியிட தடையில்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரவேற்கத் தக்கது. பெரியாரின் படைப்புகளை கி.வீரமணி தலைமையிலான திராவிடர் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தவிர வேறு எந்த அமைப்பும் வெளியிடக் கூடாது என்று தடைகோரிய மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. சுய சிந்தனையாளர்களில் ஒருவரான தந்தை பெரியார், பல்வேறு தலைப்புகளில் தொடர்ச்சியாக எழுதியும், பேசியும் வந்துள்ளார். அவரது கருத்துக்கள் தமிழ்ச் சமூகத்தில் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*சாதி, மதம், மூடநம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம் ஆகிய பிற்போக்குத்தனங்களுக்கு எதிராக சமரசமற்ற முறையில் தனது கருத்துக்களை துணிச்சலாக முன் வைத்தவர் பெரியார். காங்கிரசிலிருந்து வெளியேறிய பிறகு, சிங்காரவேலர், ஜீவா ஆகியோரது துணையுடன் துவக்க காலத்தில் பொதுவுடைமை சிந்தனைகளையும் முன் வைத்தார். அவர், தனது படைப்புகள் குறித்து உயில் எதையும் எழுதி வைக்கவில்லை. அவரது சிந்தனைகள் முழுவதும் சமூகம் முழுமைக்கும் சொந்தமானது என்பதே இதன் பொருள். அவரது படைப்புகளை பெரியார் சுயமரியாதை இயக்கம் பல்வேறு நூல்களாக வெளியிட்டுள்ள போதும், பெரியாரது சிந்தனைகள் முழுமையாக தொகுக்கப்பட்டு வெளி வரவில்லை என்பது பெரும் குறையாகவே உள்ளது. பெரியார் சுயமரியாதை இயக்கம் மட்டுமே அவரது படைப்புகளை வெளியிட முடியும். வேறு யாராவது வெளியிட்டால் பெரியாரது சிந்தனைகள் திரிக்கப்பட்டுவிடும் என்று திராவிடர் கழகம் முன் வைக்கும் வாதம் ஏற்கத் தக்கதல்ல.*

*இந்நிலையில்தான் பெரியார் திராவிடர் கழகம், 1925 முதல் 1938 வரையில், ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியார் எழுதிய கட்டுரைகளை தொகுத்து குறுந்தகடாக வெளியிட முன் வந்தது. இதற்கு திராவிடர் கழகம், தடை கோரியது.*

*சென்னையில் நடைபெற்ற தமுஎச மாநில மாநாட்டில் பெரியாரது நூல்களை நாட்டுடைமையாக்கி, பெரியாரியல் அறிஞர்களைக் கொண்டு காலவரிசை நிரல்படி தொகுத்து நூல்களாக வெளியிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திராவிடர் கழகம் பெரியாரது படைப்புகளுக்கு ஒட்டு மொத்த உரிமை கோரி வரும் நிலையில் தமிழக அரசு இதை கண்டுகொள்ளவில்லை.*

*இந்நிலையில் பெரியார் படைப்புகளை தொகுத்து வெளியிட தடையில்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு குறிப்பிடத்தக்கது. பெரியாரின் 130வது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்த தருணத்தில் அவரது கருத்துக்கள் ஆயிரமாயிரம் வாசகர்களை சென்றடைய வேண்டும் என்றும், நூற்றாண்டுகளுக்கு பின்னரும், பெரியாரின் சிந்தனைகளை இளைய சமுதாயத்தினர் தெரிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும் என்றும் நீதிபதி சந்துரு பொருத்தமாக குறிப்பிட்டுள்ளார்.*

*பெரியார் என்ற பெருங்கடலை சிமிழுக்குள் அடைத்து வைப்பது சரியல்ல. பொங்கி பெருகும் அவரது சிந்தனைகள் திசையெட்டும் சென்று சேரட்டும்!*

**‘தீக்கதிர்’ தலையங்கம்**
**29.07.2009**

# வன்னி முகாம்களில் - மரணத்தோடு போராட்டம்

வன்னியில் இலங்கைப் படையினரால் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் சிறைக் கைதிகள் போன்றே நடத்தப்படுகிறார்கள் என்று இந்தியாவின் புகழ் பெற்ற புலனாய்வு இணையத்தளமான 'தெகல்கா' தெரிவித்துள்ளது.

முகாம்களில் உள்ள மக்கள் தொடர்பாக அந்த இணையத்தளம் வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முகாம்களில் மக்கள் சிறைக் கைதிகள் போன்று நடத்தப்படுகிறார்கள் என்று ஆர். சுமதி கூறுகிறார். நலன்புரி முகாம்களில் தொண்டராகச் சிலநாட்கள் பணியாற்றியவர் அவர். படையினரின் முட்கம்பி வேலிகளுக்குள் வாழும் மக்களின் வேதனைகளையும் ஆதரவற்றவர்களின் நிலையையும் பெற்றோரை இழந்து அநாதைகளாகி நிற்கும் குழந்தைகளின் வேதனையையும் அவர் விவரித்தார்.

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போருக்குப் பின்னர் 3 லட்சம் தமிழ் மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால், உண்மையில் அங்கு எவ்வளவு பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற சரியான விவரம் ஐக்கிய நாடுகள் சபை உட்பட யாருக்குமே தெரியாது.

மனித உரிமை ஆர்வலர்களோ அரசியல் தலைவர்களோ, ஊடகவியலாளர்களோ அந்த மக்களைச் சென்று பார்ப்பதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை சுதந்திரமாக அணுகுவதற்குத் தொண்டு நிறுவனங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று அனைத்துலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் விடுத்த கோரிக்கைகளையும் இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட்டது.

மக்களுடன் மக்களாகத் தங்கியுள்ள விடுதலைப் புலிகளைக் கண்டறிந்து வேரறுக்கும் வரைக்கும் யாரையும் முகாம்களுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்று அரசு திட்டவட்டமாகக் கூறி வருகின்றது. ஆனால், அந்த நடவடிக்கைகள் வெளிப்படையானவையாக இடம் பெற வேண்டும் என்ற அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் கோரியுள்ளன. விடுதலைப்புலிகள் என்று சந்தேகித்து தேடி பிடிக்கும் நடவடிக்கையை முடிந்தவரைக்கும் வெளிப்படையானதாக நடத்தும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபைக்கான பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்தார்.

முகாம்களில் உயிரிழப்புக்களும் காணாமல் போகும் நிகழ்வுகளும் ஊட்டமின்மையும் அதிகரித்து வருகின்றன என்று அனைத்துலக நாடுகள் கவலை தெரிவிக்கின்றன. இருப்பினும் முகாம்களில் உள்ள மக்கள் பயத்தின் இறுக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தமிழ் அரசியல் வாதிகள் கூறுகிறார்கள்.

ஏனெனில் ராணுவத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் இளைஞர்களையும், நடுத்தர வயதினரையும் இலக்கு வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன என அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

படையினரால் சந்தேகிக்கப்படுபவர்கள் பலவந்தமாக அவர்களின் குடும்பங்களைவிட்டுப் பிரிக்கப்பட்டுத் தனியான முகாம்களில் அடைக்கப்படுகிறார்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தமது உறவுகள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாமல் மக்கள் கடும் துயரில் மூழ்கிப் போயிருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறினார்.

முகாம்களின் பதிவுகளைக் கையாள்வதற்கான அனுமதி ஐக்கிய நாடுகள் சபைக்கோ ஏனைய அனைத்துலக நிறுவனங்களுக்கோ கிடையாது.

முகாம்களில் உள்ள மக்களின் சரியான எண்ணிக்கை வெளியே தெரிய வராத வரையில் காணாமல் போனவர்களின் விவகாரத்தில் இருந்து கொழும்பு தப்பிக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

முகாம்களில் சுகாதார நிலைமை மிக மோசமாக இருக்கின்றது என்று தொண்டு அமைப்பான சேவாலங்காவின் நிறைவேற்று இயக்குனர் வின்யா ஆர்யரத்னா கூறினார். இந்த அமைப்பு முகாம்களில் தற்போது பணியாற்றி வருகின்றது.

அடைத்து வைக்கப்பட்டுள்ள 5 வயதுக்குக் குறைவான குழந்தைகளில் 20 சதவீதமானவர்கள், சுமார் 5 ஆயிரம் குழந்தைகள், ஊட்டமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறும் ஆர்யரத்ன, ஒரு முகாமில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உள்ளனர் என்றும், அதனைத் தவிர்ப்பதற்காக அரசு புதிய முகாம்களை உருவாக்குகிறது என்றும் தெகல்காவிடம் தெரிவித்தார்.

முகாம்களில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது குறித்துத் தன்னிடம் எந்தத் தகவலும் இல்லை என்று ஆர்ய ரத்ன மேலும் கூறினார்.

அதே நேரம், ஒவ்வொரு வாரமும் முகாம்களில் 1400 பேர்வரையில் உயிரிழக்கிறார்கள் என அனைத்துலகத் தொண்டு நிறுவன அதிகாரிகளை மேற்கோள் காட்டி லண்டனிலிருந்து வெளியாகும் 'தி டைம்ஸ்' இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# செங்கல்பட்டு சிறை முகாமை இழுத்து மூடு — காஞ்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்

இலங்கைக்கு பொருட்களை எடுத்துச் சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டு செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில் அடைக்கப்படும் ஈழத் தமிழர்கள் பல கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். இம்முகாமில் வழக்குகள் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் விடுதலை செய்யப்படாமல் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகம். இவர்களுடைய சாதாரண வழக்குகள்கூட விசாரணையின்றி பல வருடங்கள் இழுத்தடிக்கப்படுகின்றன. இவர்களில் பலர் தங்கள் உறவுகளை இலங்கையில் நடந்தேறிய தமிழினப் படுகொலைப் போரில் இழந்து மனநோயாளிகளாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒருசிலருடைய உறவினர்கள் வெளியில் உள்ள திறந்தவெளி முகாம்களில் ஆதரவின்றி பரிதவிக்கின்றார்கள்.

"தமிழகச் சிறைகளிலிருந்து பிணையில் வெளிவரும் தங்களை மீண்டும் சிறப்பு முகாமில் அடைத்து சித்தரவதை செய்யாமல், திறந்தவெளி முகாம்களில் தங்கள் உறவினர்களுடன் தங்கி வாழவும், தங்கள் வழக்குகளை நடத்தவும் அனுமதிக்க வேண்டும்" என்ற இவர்களுடைய கோரிக்கையை தமிழக அரசே உடனே நிறைவேற்று என்று செங்கல்பட்டு சிறப்பு முகாமில் 60 தமிழர்கள் பட்டினிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி 27.7.2009 திங்கள் காலை 10 மணியளவில் காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் (காவலான் கேட்) பெரியார் திராவிடர் கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழக செயற்குழு உறுப்பினர் எ. கேசவன் தலைமையேற்க காஞ்சி மக்கள் மன்ற ஒருங்கிணைப்பாளர் செல்வி மகேஷ், தமிழக இளைஞர் எழுச்சி இயக்க அமைப்பாளர் காஞ்சி அமுதன், திரைப்பட உதவி இயக்குனர் தம்பி. மகேந்திர வர்மா, நாட்டுப் பற்றாளர் இயக்கம் மகேஷ், சமூக உணர்வாளர் மேகலா, பாவலர் கீர்த்தி, தென் சென்னை மாவட்ட கழகத் தலைவர் தபசி. குமரன், கழகத் தோழர்கள் அசுவத்தாமன், ஜெர்சி, கடம்பத்தூர் ஆரூர்த்தி, சி. பாஸ்கர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். தென்சென்னை மாவட்ட கழக செயலாளர் இரா.உமாபதி நன்றி கூறினார். ஆ. தமிழ்ச்செல்வன், இராவணன், சுகுமார், சுரேந்தர், தீபக் உள்பட தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

**ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்ட கண்டன முழக்கங்கள்:**

*தமிழக அரசே!*
*பிணையில் வெளிவரும்*
*அகதிகளை*
*திறந்தவெளி முகாமில் தங்கி*
*வழக்குகளை நடத்திட*
*அனுமதிக் கொடு.*

*இழுத்து மூடு!*
*செங்கல்பட்டு (சிறப்பு)*
*வதை முகாமை*
*இழுத்து மூடு!*

*தண்டனைக் காலம் முடிந்தப் பிறகும்*
*அகதிகளை வெளியே விடாமல்*
*சிறைப்படுத்தும் போக்கினை*
*கண்டிக்கின்றோம்!*

- என்பது போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. போராட்டத்தைத் தொடர்ந்து, முகாமில் அடைக்கப்பட்டிருந்த 6 பேரை விடுவித்து, வழமையான முகாம்களுக்கு அரசு அனுப்பியுள்ளது. மேலும் 12 பேர் விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே 20 பேரை விடுதலை செய்து, உடனே இலங்கைக்கு செல்லுமாறு, தமிழக அரசு நிர்ப்பந்தப்படுத்தியது. தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று அஞ்சி, அவர்கள் செல்ல மறுக்கிறார்கள்.

## புகைப்படக் கண்காட்சி

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 21.7.2009 அன்று நடந்த கழகப் பொதுக் கூட்ட மேடை அருகே ஈழத் தமிழர்களின் அவலங்கள், இனப் படுகொலைகளை விளக்கிடும் புகைப்படக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில், செங்கை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் டி.ஆர்.செங்குட்டுவன் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

## 3 மாத சிறைவாசத்துக்குப் பிறகு கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் இலட்சுமணன் விடுதலையாகிறார்கள்!

கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மீது தமிழக அரசு பிறப்பித்த தேசிய பாதுகாப்புச் சட்டம் செல்லாது என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள், முகோபித்தியாயா, ராஜ இளங்கோ ஆகியோர், 28.7.2009 அன்று உத்தரவிட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் சரியாக ஆராயாமல், உத்தரவிட்டுள்ளதாக நீதிபதிகள் கூறியுள்ளனர். கழக வழக்கறிஞர்கள் எஸ். துரைசாமி, இளங்கோ வழக்கில் ஆஜர் ஆனார்கள்.

மே 2 ஆம் தேதி பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கைது செய்யப்பட்டு, மூன்று மாதங்களாக சிறையிலிருந்து வருகிறார்.

அதேபோல், பெரம்பலூர் மாவட்ட கழக அமைப்பாளர் இலட்சுமணன் மீதான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை குடியரசு தலைவர் ரத்து செய்துள்ளார். அவருக்கு கோவை நீதிமன்றம் வழக்கில் பிணை வழங்கியுள்ளது.

# சென்னை மாவட்டக் கழகம் ரூ.1,24,670 வழக்கு நிதி



சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 21.7.2009 பெரியார் திராவிடர் கழகம் நடத்திய எழுச்சியான பொதுக் கூட்டத்தில் சென்னை மாவட்டக் கழக சார்பில் முதல் தவணையாக ரூ.1,24,670 வழக்கு நிதியாக, கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணியிடம் கழகப் பொறுப்பாளர்கள் வழங்கினர்.

## பிறந்த நாள் நன்கொடை

தென்சென்னை மாவட்ட செய லாளர் இரா.உமாபதி - பா.பாரதி ஆகியோரின் மகள் உ-பா.தோழி அவர்களின் மூன்றாம் ஆண்டு பிறந்த நாள் (19.7.2009) மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கினர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பதிப்புரிமையில் குறுக்கிட்டுவிட்டதாகக் கூற முடியாது” என்று தீர்ப்பில் கூறியுள்ள நீதிபதி, “சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் அமைப்பு விதிகளில் கூட, பெரியாரின் எழுத்துகளுக்கான உரிமைகள் பற்றி ஏதும் குறிப்பிடப் படவில்லை. இன்னும் சொல்லப் போனால், எதிர்காலத்தில் வாங்கக் கூடிய சொத்துகள் தான் இந்த நிறுவனத்துக்கு உரிமையாகும் என்றே, அச்சங்கத்தின் விதிகள் 22, 23 குறிப்பிடுகின்றன” என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

பெரியார் எழுத்துகளை இலக்கியம் என்ற பிரிவின் கீழ் கொண்டு வந்து - எனவே அது ‘அறிவுசார் சொத்துடைமை’யாகவும் கருத வேண்டும் என்று கி.வீரமணி தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு பதிலளித்துள்ள நீதிபதி, ‘அறிவுசார் சொத்துரிமை’ கோருவதற்கும் - எழுத்துபூர்வமாக தரப்பட்டிருக்க வேண்டும். அப்படி எழுத்து பூர்வமாக பெரியார் வழங்கிடவில்லை. பெரியார் எந்த உயிலும் எழுதி வைக்காமல்தான் இறந்துள்ளார். இது எல்லோருக்கும் தெரியும்” என்று விளக்கமளித்துள்ளார்.

பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம், பெரியார் எழுத்துகளுக்கு பதிப்புரிமை கோரும் உரிமை கிடையாது என்ற இந்த தீர்ப்பின் வழியாக - இனி பெரியார் எழுத்து - பேச்சுகளை வெளியிடும் உரிமை அனைவருக்கும் கிடைத்துள்ளது. தஞ்சை பகுத்தறிவாளர்கழகம் தயாரித்திருந்த தொகுப்பையே பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுகிறது என்று தஞ்சை இரத்தினகிரி, கி.வீரமணிக்கு ஆதரவாக தாக்கல் செய்த மனுவை - ஏற்கனவே உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

தஞ்சை பகுத்தறிவாளர் கழகத்தின் இந்த கோரிக்கை ‘வலிமையாக மறுக்கப்பட்டுவிட்டது’ (Emphatically denied) என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

25 பக்கங்கள் கொண்ட இத்தீர்ப்பின் தொடக்கத்தில், பெரியாரின் குடிஅரசு தொடங்கிய காலகட்டம்; குடிஅரசு சந்தித்த எதிர்நீச்சல், வகுப்புவாரி உரிமைக்காக பெரியார் காங்கிரசுக்குள் நடத்தியப் போராட்டம்; காங்கிரசிலிருந்து வெளியேறி, அதனால் சந்தித்த எதிர்ப்புகள் போன்ற வரலாறுகளை நீதிபதி பதிவு செய்துள்ளார். காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிலிருந்து வெளியேறிய பெரியார், “கடவுள் ஒழிக; மதம் ஒழிக; காந்தி ஒழிக; காங்கிரஸ் ஒழிக; பார்ப்பான் ஒழிக” என்பதையே தனது எதிர்கால அரசியல் செயல் திட்டமாக்கினார் என்றும், நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பெரியாருடன் சமகாலத்தில் வாழ்ந்த சைவப் பண்டிதர் ஈ.எம்.சுப்ரமணியபிள்ளைக்கு 1947 இல் பெரியார் எழுதிய கடிதத்தில், “என்னுடைய நூல்கள், மிகக் குறைந்த விலைக்கே தரப்படுகின்றன. அவைகளுக்கு முறையான விற்பனையும் கிடையாது. பெரும்பாலான நூல்கள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. வியாபாரம் என்ற முறையில் இதில் தொண்டாற்றுவது இயலாது; அப்படி தொண்டாற்றுவது கடினம்” என்று எழுதியுள்ளதை நீதிபதி, “தமிழ்ப் பெரும் புலவர் ஈ.எம்.சுப்ரமணியபிள்ளை” என்ற நூலிலிருந்து மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ளார். பெரியார் தனது கருத்துகள் மக்களிடம் பரவிட தனது வெளியீடுகளை இலவசமாகக்கூட வழங்கியவர் என்ற இந்த கருத்து பதிப்புரிமை கோரி வழக்கு தொடர்ந்தவர்களுக்கான பதிலாக அமைந்துள்ளது.

பெரியார் திரைப்படத்துக்கு தமிழக அரசு 95 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கியதை எதிர்த்து, டி. கண்ணன் என்பவர் தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்து, மனுவை தள்ளுபடி செய்தது. அதில், ஒரு நீதிபதி கே. சந்துரு, 2007 ஆம் ஆண்டு தமது அமர்வு வழங்கிய தீர்ப்பில் பெரியார் சாதி, மத, தீண்டாமைக்கெதிராக போராடிய சிறப்புகளை குறிப்பிடப்பட்டிருந்ததை இந்தத் தீர்ப்பில் மீண்டும் நீதிபதி எடுத்துக்காட்டியுள்ளார்.

# தி.க.விலிருந்து விலகி கழகத்தில் இணைந்த தோழர்கள்

21.7.2009 அன்று சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடந்த கழக பொதுக் கூட்டத்தில் தி.க.விலிருந்து விலகி, கழகத்தில் இணைந்த தோழர்கள்

**சென்னை**

1. சி.பாஸ்கர்
2. ஞா.டார்வின் தாசன்
3. டா.அமுதாராணி
4. டா.புருனோ திலீபன்
5. ஈ.ஜெயபாலன்
6. விக்டர் லாரன்ஸ்
7. ஜி. துரை
8. ல.கௌதம்
9. ஏசு (குமார்)
10. மா.பாஸ்கரன்
11. பெ.மாசே
12. சா.செல்லிமகன்
13 அர.கோவிந்தசாமி
14. மாசி.முருகேசன்
15. சீ.முருகானந்தம்
16. சு.கொளஞ்சி குமரன்
17. கு.வீரச்செல்வன்
18. சி.ரவி
19. ஆண்டன் செல்வநாயகம்
20. செந்தில்குமார்
21. மு.வேலவன்
22. வெள்ளை சூரியன்
23. ப.சுரேஷ்
24. டி.ஜி.கனகராஜ்
25. எம்.சுதாகர்

**திருவள்ளூர் மாவட்டம்**

1. எஸ்.அஸ்வத்தாமன், எம்.ஏ., எம்.பில்.,
2. எம்.விஜயலட்சுமி
3. ஈ.சீனிவாசன்
4. எஸ்.பாசூரான்
5. ஈ.மூர்த்தி

**தருமபுரி**

சு.வெங்கடேசன், சு.விவேகானந்தன்

**கிருஷ்ணகிரி**

சி.பாஸ்கர், மு.க.கோபி


**விழுப்புரம்** - வி. சூரிய பிரபு

**அரியலூர் மாவட்டம்**

1. வழக்கறிஞர் சா.பகுத்தறிவாளன்
2. வே.செவ்வேள்
3. கா.வீரமணி
4. இரா.இராஜ்குமார்
5. இரஞ்சித்குமார், எம்.காம்., பி.எல்.,
6. ஆ.சௌந்தரராஜன், எம்.ஏ., பி.எல்.,
7. இரா.சசிக்குமார்
8. பெ.ராஜராஜன்
9. கே.கலியபெருமாள்
10. த.இளவரசன்
11. மா.வீரப்பன்
12. கோ.அம்பிகாபதி
13. சு.கேசவன்
14. அ.ரமேஷ்
15. ம.ஜெகநாதன்
16. க.ராஜா
17. ம.சௌந்தரராஜன்
18. க.சுரேஷ்
19. ம.ரகுகுமார்
20. இரா.அசோக்ராஜ்
21. ந.பாஸ்கர்
22. எம்.மணி
23. பூ.நேரு
24. ஜோ.பிரபாகரன்
25. டி.செல்வமணி

**பெரம்பலூர் மாவட்டம்**

1. கி.ராஜ்குமார்
2. ம.ராஜேஷ் கண்ணன்
3. அ.ராஜேந்திரன்
4. இரா.ராமச்சந்திரன்




‘தினமணி’ 29.07.2009

“புரட்சிப் பெரியார் முழக்கம்” ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857

**தமிழர்களே! அடக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st July 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.